பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 25 புதன்கிழமை (11.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 350

# தமிழ்-முஸ்லிம்-மலையகக் கட்சிகளின் கூட்டுக் குறித்து இவ்வாரம் இறுதி முடிவு

## மு.கா.தலைவர் ஹக்கீம் தகவல்



கொழும்பு, நவம்பர் 11

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அண்மைக்காலமாக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புடனும் வேறு சில தமிழ்க் கட்சிகளுடனும் தீவிரமான பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றோம். அப்பேச்சுகளின் விளைவாக ஒரு சாதகமான முடிவை நாம் எட்டியிருக்கிறோம். இதுபற்றி இவ்வார இறுதிக்குள் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது முடிவை அறிவிக்கவும் இருக்கிறோம். தமிழர்கள், முஸ்லிம்கள், இந்திய வம்சாவளி மக்களின் கூட்டிணைப்பு இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமாக இருக்கிறது. அது தேர்தலுக்கு மட்டுமானதல்ல."

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம் - I, II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம்-II பாடத்துக்கான மாதிரி வினாத் தாள்கள்.

## ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணியுடன் தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, நவ. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணிக்குமிடையில் நேற்று முதற்தடவையாக கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

புளொட் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.ஸ்ரீகாந்தா, பா.அரியநேத்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் -

ஜனநாயக தமிழ் தேசிய முன்னனி சார்பில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணியின் தலைவர் கு.ஸ்ரீதரன் உட்பட அம்முன்னணியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலிருந்து இன்று தொடக்கம் கொழும்புக்கு நேரடி பஸ் சேவை ஆரம்பமாகிறது

### காலை 8 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்திலிருந்து

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு நேரடி பஸ் சேவைகள் இன்று ஆரம்பமாக உள்ளன.

போக்குவரத்துச் சபையின் யாழ். பிரதான பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் இருந்து அரை சொகுசு பஸ்கள் இரண்டும் சாதாரண பஸ் ஒன்றும் கொழும்புக்கு இன்று தொடக்கம் செல்லவுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காயில் மீள்குடியேறியவர்களுக்கு கல்வி, அஞ்சல், கூட்டுறவு சேவைகள் ஆரம்பம்

### அரச அதிபர் இமெல்டா தகவல்

கொழும்பு.நவ.11

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வருவதனைத் தொடர்ந்து முல்லைத்தீவின் துணுக்காய் பிரதேசத்தில் பாடசாலை, அஞ்சல் சேவை, பலநோக்கு கூட்டுறவுச்

(20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் பயிற்சி பெற்றவர்கள் எனக் கூறி 45 இளைஞர்கள் மலையகத்தில் கைது!

கொழும்பு, நவ.11

மலைநாட்டில் புலிகளின் செயற்பாடுகளுக்கு உதவி, ஒத்தாசை வழங்கி வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் அண்மைய நாள்களில் 45 இளைஞர்கள் அங்கு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கிளிநொச்சியில் புலிகளிடம் ஆயுதப் பயிற்சியைப் பெற்றிருந்தனர் என்றும், பயங்கரவாத செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மலைநாட்டுக்கு வந்திருந்தனர் என்றும் பொலிஸார் இவர்கள் குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்

(20ஆம் பக்கம் பார்க்க)

## புதிய இந்தியத் தூதுவர் அசோக் காந்த் வந்தார்



கொழும்பு, நவ.11

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமனம் பெற்றுள்ள அசோக் காந்த் நேற்று கொழும்பிலுள்ள இந்திய தூதரத்திற்கு வருகை தந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேஷியாவிலுள்ள இலங்கையர்கள் அரசியல் தஞ்சம் பெறத் தகுதியுடையவர்கள்

### சர்வதேச மன்னிப்புச் சபை சொல்கிறது

கொழும்பு, நவ. 11

ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயன்றபோது இந்தோனேஷிய கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் அரசியற் தஞ்சம் பெறுவதற்கு உண்மையிலேயே உரித்தானவர்கள். எனவே இந்த அகதிகளுக்கு அரசியற் தஞ்சம் வழங்குகின்ற பொறுப்பை நியூஸிலாந்து அரசு தட்டிக் கழிக்க முடியாது என்று சர்வதேச மன்னிப்புச்சபை நேற்று அறிவித்துள்ளது.

இந்த இலங்கையர்களுக்கு நியூஸிலாந்து அரசு அரசியற் தஞ்சம் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளன என்று நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கேய் அறிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவை பொதுவேட்பாளராக ஏற்கும் திட்டத்துக்கு ஜே.வி.பியும் சம்மதம்?

### கோடி காட்டுகின்றார் லால் காந்த எம்.பி.

கொழும்பு, நவ. 11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகா களமிறக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் காணப்படுகின்றன என ஜே.வி.பியும் கோடிகாட்டியிருக்கின்றது.

ஜே.வி.பியின் முன்னணிப் பிரமுகரும், எம்.பியுமான லால்காந்த நேற்று மருதானையில் தமது பக்கத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றில் கருத்து வெளியிட்ட போது இத்தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒரு பொது வேட்பாளர் தேவை என்ற எண்ணம்மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

ஆனால் அந்தப் பொது வேட்பாளர் யார் என்

(20ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உங்களுக்காக
உங்களுக்கு
அருகில்
இப்போது
நெல்லியடியில்....
வடமராட்சி வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் செய்தியாளர்களின் நன்மைகருதி உதயன் உப பணிமனை 14.11.2009 முதல் பிரதான வீதி, நெல்லியடி (மக்கள் வங்கி முன்பாக) எனும் முகவரியில் திறந்துவைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான ஒக்ரோபர் மாத நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 11

உலக உணவுத் திட்டத்தின் கீழ் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வருகை தந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு பின்னர் தமது சொந்த இருப்பிடங்களில் விடுவிக்கப்பட்ட மக்களுக்கான ஒக்ரோபர் மாதத்துக்கான (14 நாள்களுக்குரிய) உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உலர் உணவுப் பொருள்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அரிசி, மா, பருப்பு, சீனி, சமையல் எண்ணெய் போன்ற பொருள்கள் இந்த நிவாரணத்திற்கு வழங்கப்படுகின்றன. அங்கத்தவர்கள் ரீதியாக விநியோகிக்கப்படும். பொருள்களின் விவரம் பின் வருமாறு. (50- 224)

| பொருள் | அங்கத்தவர் எண்ணிக்கை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 5 அங் | 6 அங் | 7 அங் | 8 அங் | 9 அங் |
| அரிசி | 2.800 | 5.600 | 8.400 | 11.200 | 14.000 | 16.800 | 19.600 | 22.400 | 25.200 |
| மா | 2.800 | 5.600 | 8.400 | 11.200 | 14.000 | 16.800 | 19.600 | 22.400 | 25.200 |
| பருப்பு | 0.840 | 1.680 | 2.520 | 3.360 | 4.200 | 5.040 | 5.880 | 6.720 | 7.560 |
| சீனி | 0.280 | 0.560 | 0.840 | 1.120 | 1.400 | 1.680 | 1.960 | 2.240 | 2.520 |
| மரக்கறி எண்ணெய்(லீ) | 0.280 | 0.560 | 0.840 | 1.120 | 1.400 | 1.680 | 1.960 | 2.240 | 2.520 |

# கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கோதுமை மா மீண்டும் அரச களஞ்சியங்களுக்கு அனுப்பப்பட்டன

சண்டிலிப்பாய், நவ. 11

மக்களுக்கு வழங்குவதற்காக கூட்டுறவுச் சங்கங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மா மூடைகள் அரசாங்க அதிபரின் உத்தரவைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள அரச களஞ்சியத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள அரச களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த மா மூடைகள் மக்களுக்கு வழங்குவதற்காகவும் பாண் தயாரிப்பதற்காகவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வெதுப்பகங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

அரச களஞ்சியத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த மா மூடைகளில் வண்டுகளும் புளுக்களும் இருப்பதை தீடீர் சோதனை நடத்திய சுகாதார உத்தியோகத்தர்கள் கண்டுபிடித்ததுடன் இது பற்றி நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கூட்டுறவுச்சங்கங்களிலுள்ள மா மூடைகளை யாழ்ப்பாணத்திலுள்ள களஞ்சியத்திற்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபர் சகல கூட்டுவுச் சங்கங்களுக்கும் அறிவித்துள்ளதையடுத்து சங்கங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மா மூடைகள் லொறிகள் மூலம் களஞ்சியத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது சங்கங்களுக்கு தரமான மா வழங்கப்பட்டு ஒரு கிலோ மா 65 ரூபா வீதம் விற்பனையாகிறது.

இதேவேளை களஞ்சியத்திற்கு திருப்பி அனுப்பப்பட்ட மா மூடைகளின் காலாவதியான திகதி இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (1- 115)

## OBITUARY

**Stanislaus Joseph (JOE) Attorney - at - Law (USA)**

Beloved Husband of Wimala (USA) son of late philip Saverimuthu and late Lourdes, son - in - law of late Mr & Mrs. M.S. Manthri, loving brother of late Charles Amirthanayagam, Juliet Bastiampillai, Mary Theresa, Peter Gerard (USA) Marie Stella and Victor Emmanuel (USA) loving father of Jayanthie(UK), Thuliyanthie (USA), Prasad (USA), Mano (USA), Raymond (USA), and Prasanthie (USA), loving father - in - low Marco (UK), Jitendran (JD), (USA), Dayanthie (USA), Sudarshini (USA), and Simi (USA), loving brother in - law of Rudra Bastiampillai, Sister - in - law of Gnanes, Jean Dorothy, and Saro, Loving Grand Father of Amy Tiffany (UK), Andrew Jeremy (USA), Acacia and Akash (USA), Ascended into the hands of Our Lord On 6th november 2009. May His Soul Rest In Peace.

A Requiem mass will be offered at O.L.R, Jaffna on 11.11.2009 Wednesday at 4.30 pm.

**100 4th Cross Street, Jaffna.** (90868) **Therasa Savarimuthu**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி
### (BA.(Hons) PGDE M.Ed, SLPS 2 I)

எமது வித்தியாலயத்திற்கு 05.10.2009 தொடக்கம் அதிபராகக் கடமை யேற்ற திரு.வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி அவர்கள் 01.01.2007 தொடக்கம் அதிபர் சேவை தரம் 2 I இற்கு பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல வேம்படி விநாயகரின் அருளாசியுடன் மேலும் பல பதவியுர்வுகள் பெற்று சேவை சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகத்தினர்,** (90866)
**யா/மீசாலை வீரசிங்கம் ம./வி, மீசாலை**

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் எட்வேட் இராசரட்ணம் ஆசீர்வாதம்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், உப அதிபர், யா/ நல்லூர் விக்னேஸ்வரா)

மலர்வு உதிர்வு
*25.04.1929 11.11.1996*

*உயிர்ப்பும் உயிரும் நானே*
*என்னில் விசுவாசம் கொள்பவன்*
*இறப்பினும் வாழ்வான்.*
*(அருளப்பர் 11-25)*

**காலங்கள் கடந்தாலும் அப்பா உங்கள்**
**கோலங்கள் எம்மை விட்டகலாதே!**
**பாலமாய் நின்றெம்மை வழி நடத்தினீர்**
**ஞாலத்தில் எங்ஙனம் உமை மறப்போம்.**

என்றும் உங்கள் நினைவுடன்:
41, இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். (90871) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நெடுந்தீவு மக்களுக்கு இன்று பயன்தரு மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், நவ.11

நெடுந்தீவில் 'கமநெகும' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகள் இலவசமாக இன்று வழங்கப்படவுள்ளன.

நெடுந்தீவு மத்தி கிராம சேவையாளர் பிரிவில் 75 பயனாளிகளுக்கு இத் திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படும் எனவும் இவர்களுக்கு முன்னர் கொய்யா, சமண்டலை, மாதுளை போன்ற மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் புங்குடுதீவு விவசாயப் போதனாசிரியர் பொ.பத்மநாதன் தெரிவித்துள்ளார். (10-267)

# தவறவிடப்பட்ட பொருள்கள் யாழ்.பிரதேச செயலகத்தில்

யாழ்ப்பாணம்.நவ.11

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்களால் துரையப்பா விளையாட்டரங்கில் தவறவிடப்பட்ட பொருள்கள் யாழ்.பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பொருள்களைத் தவறவிட்டவர்கள் அதற்கான தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து தங்களது பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலகத்தினர் கேட்டுள்ளனர். (10)


## இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர், கல்பேட், தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.(சுத்தம் செய்தல் இலவசம்)

**A.S.S பாம், தியேட்டர் வீதி, இணுவில்.**


## தவறிவிட்டது

பாரதி வீதி,கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியையுடைய துரையன் செல்வமணி (567042812V) என்பவரது தேசிய அடையாள அட்டை கோண்டாவிலுக்கும் யாழ்நகரப் பகுதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்த வர்கள் மேற்குறித்த முகவரியிலோ அல்லது 0213008215 எனும்தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தந்துதவவும்.

## தவறிவிட்டது

கே. கே. எஸ் றோட், பலாலி, வசாவிளான் எனும் முகவரியையுடைய சாள்ஸ் நவரட்ணம் - கெயின் சாள்ஸ் ஆகிய எனது தே.அ.அ(723264049V) யாழ் நகரப்பகுதி அல்லது மானிப்பாய் வீதியில் தவறி [illegible] யாழ்ப்பாண [illegible] அல்லது மானிப்பாய் பிரதேச சபையில் ஒப்படைத்து உதவவும். தொ.இல 0776913337.

# கலைப்பீட மாணவர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.நவ.11

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று நண்பகல் 12 மணிக்கு மாணவர் ஒன்றிய பொது அறையில் நடைபெறும் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அனைத்து கலைப்பீட மாணவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

# சடலத்தைப் பொறுப்பேற்குமாறு பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்.நவ.11

அம்பகர் வீதி, கொக்குவிலைச் சேர்ந்த ஆர்.வேல்நாதன் (வயது 60) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 6 ஆம் திகதி இறந்துள்ளார்.

இவரது சடலம் இதுவரை எவராலும் உரிமை கோரப்படாதிருப்பதால் உரித்துடையோர் 03 தினங்களுக்குள் பொறுப் பேற்கும் படி யாழ்.போதனா வைத்திசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகேஸ்வரி கதிர்காமநாதன்

சரசாலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், கொழும்பு, தற்போது அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி கதிர்காமநாதன் 6.11.2009 இல் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் (அண்ணை அம்மா) தம்பதியரின் மருமகளும், கணேசன் (அவுஸ்திரேலியா), காயத்திரி (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கண்ணன் (அவுஸ்திரேலியா), சரஸ்வதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (10.11.2009) செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியாவில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல 7, மயிலணி வீதி,* தகவல்:
*சுன்னாகம்.* (90870) **ஆ. விசுவலிங்கம் (ஓவசியர்).**

### பொன்னம்பலம் திலகரெத்தினம்
(முகாமையாளர், யோசெவ் ஸ்டோர் - கொழும்பு)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் திலகரெத்தினம் 09.11.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் -வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பூமணி, நாகேஸ்வரி ஆகியோரின் மருமகனும் ஆனந்தியின் அன்புக் கணவரும், ஸ்ரீ கிருஷ்ணாவின் (யாழ் இந்துக்கல்லூரி - தரம் - 6) பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம், குணரெத்தினம், நடராசா, அரசரெத்தினம் மற்றும் இராச ரெத்தினம், செல்வரெத்தினம், தனலெட்சுமி, அன்னலெட்சுமி, இராசலெட்சுமி, விஜயலெட்சமி அகியோரின் அன்பு சகோதரனும் , ஈஸ்வரன், சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2009) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்தொள்ளவும். (சி/562246)

*பழைய தபால் பெட்டி ஒழுங்கை,* தகவல்:
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* **மனைவி - ஆனந்தி.**

### திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்



புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் நேற்று (10.11.2009) செவ்வாயக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் - தெய்வயானை தம்பதிகளின் அன்பு மருமகளும், கதிரவேற்பிள்ளை (ஓய்வு பெற்ற நில அளவையாளர்), கனகசிங்கம் (அமரர்), பாக்கிய ராணி (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்.), சிவபாக்கியம் (ஆயுள்வேத வைத்தியர், நீர்வேலி), பாக்கியலட்சுமி (பிரதி அதிபர், மல்லாகம் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்.), யோகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், நாகேஸ்வரி, நித்தியகாந்தி, லயன் A.K.இராமநாதன் (ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர்), கனகேஸ்வரன் (வருமானமேற்பார்வையாளர், வலி. கிழக்கு பிரதேசசபை உப அலுவலகம், நீர்வேலி), தவக்குமார் (மல்லாம் நீதிமன்றம்), பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீபன், சாந்தி, காண்டீபன், எழில்வேந்தன், எழில்காந், எழில்வதனன், எழில்ச்செல்வி, எழில்வதனி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், நிர்த்திகாவின் அன்பு அம்மம்மாவும், அனுசன், அஸ்வினி ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2009) புதன்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் வீதி,* தகவல்:
*ஆவரங்கால்.* (90873) **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மதிநுட்பக் காய் நகர்த்தல் அவசியமான காலகட்டம் இது

விரைவில் நடத்தப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் முன்னால் நான்கு வழிகள் உள்ளன என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியாகப் பணிபுரியும் ஜெனரல் சரத் பொன்சேகா நிறுத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டே அவர் இப்படிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

* ஒன்று - அரசுத் தரப்பில் மீண்டும் களமிறங்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிப்பது.

* இரண்டு - எதிரணியின் பொது வேட்பாளராக நிறுத்தப்படக் கூடிய ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிப்பது.

* மூன்று - தமிழ் மக்களின் சார்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களிப்பது.

* நான்கு - தேர்தலில் வாக்களிக்காமல் பகிஷ்கரிப்பது அல்லது தமது வாக்குச்சீட்டை செல்லுபடியற்றதாக்குவது.

இந்த நான்கில் ஏதோ ஒன்றைச் செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் வரலாற்று வேளை தமிழர்களை நோக்கி வெகுவேகமாக வந்துகொண்டிருக்கின்றது என மனோகணேசன் சுட்டிக்காட்டுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புச் சமயத்தில் மட்டுமல்ல, அதற்கு முன்னர் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனத்திலும் - தெரிவிலும் - சம்பந்தப்பட வேண்டிய நிலைமை தமிழர் தரப்புக்கு இம்முறை வந்திருக்கின்றமை கண்கூடு.

'இலங்கை ஜனாதிபதித் தேர்தல் என்பது சிங்கள தேசத்தின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு. அதில் தமிழர் தேசத்துக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை!' - என்று முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களின்போது கூறியமை போன்று இப்போது கூறிவிட்டு ஒதுங்கிவிட முடியாத நிலைமை தமிழர் தரப்புக்கு. தமிழர்களின் தலைமைகளுக்கும் கூட.

அப்போது இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைப் பேணி, காபந்து பண்ணி, கட்டமைத்து நிற்பதற்கான அடிப்படை வலிமை - பலம் - தமிழர் தரப்பில் இருந்தது.

அது, இப்போது தென்னிலங்கையின் ஆயுத வலிமையினால் அடக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டு விட்டது. தமிழர் தேசம் இன்று நடு வீதி யில்.....!

அத்தகைய நிலையில் இருக்கும் தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைக் காப்பதற்கும் பேணுவதற்கும் கூட, இத் தேர்தலில் சம்பந்தப்பட்டு, தந்திரோபாயமாகக் காய் நகர்த்தி, சாணக்கியமாகக் காரியங்களைப் பார்க்கவேண்டிய கட்டாயம் தமிழர் தரப்புக்கு உண்டு.

ஆயுத வலிமையில் பாதிக்கப்பட்டுச் சோர்ந்துபோய் நிற்கும் தமிழர் தரப்பைத் தூக்கி நிறுத்தி, மீள வலிமை பெறச் செய்வதற்கு உடனடிச் சாத்தியமான வழி அரசியல் பலத்தைத் துரிதமாகப் பெருக்கிக் கொள்வதுதான்.

அந்த உத்தியுடன்தான் - உறுதியுடன்தான் - காரியங்களை ஆற்றவேண்டியவர்களாகத் தமிழர்கள் இன்று உள்ளனர் என்பது அனைத்துத் தமிழர்களும் உணர்ந்த விடயம்தான்.

ஜனாதிபதித் தேர்தலில் முதலில், அதில் போட்டியிடுகின்ற தரப்புகளுக்குத் தமிழர்களின் வாக்குகள் தவிர்க்க முடியாத அளவுக்கு முக்கியமானவை என்ற அரசியல் கள நிலைவரத்தைத் தோற்றுவிப்பதில் தமிழ்த் தலைமைகள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

தென்னிலங்கையின் பிரதான இரு வேட்பாளர்களுக்கும் இடையிலான போட்டியில் மக்கள் ஆதரவு அலை ஏதோ ஒரு பக்கத்துச் சார்பானதாக ஒருதலைப்பட்சமாகவே இருக்கும் என்பது முற்கூட்டியே உறுதியானால் சிறுபான்மையினரான தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் ஆதரவு குறித்து யாரும் சிந்திக்கவோ - கவனத்தில் எடுக்கவோ - மாட்டார்கள் என்பது தெளிவு.

எனவே, தென்னிலங்கையின் பிரதான இரு வேட்பாளர்களுக்கும் இடையில் கடும் போட்டி, தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறுபவரால் மட்டுமே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியும் என்ற சூழ்நிலை உருவாகக்கூடியதாக வேட்பாளர் தெரி வில் சம்பந்தப்பட்ட கட்சிகளை - தரப்புகளை - தமிழ் கட்சிகளின் தலைவர்கள் வழி நடத்திக் கொள்ளவேண்டும்.

அத்தகைய கடும் போட்டி நிலையை தென்னிலங்கையின் இரு வேட்பாளர்களிடையேயும் - தரப்புகளிடையேயும் - ஏற்படச் செய்துவிட்டு, அதை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்களை எட்டுவதற்கான பேரம் பேசுதலை அத்தரப்புகளுடன் தமிழ்த் தலைமைகள் ஆரம்பிக்கவேண்டும்.

இன்றைய நிலையில் இத்தகைய அரசியல் தந்திரங்கள், நுட்பமான காய் நகர்த்தல்கள் போன்றவைதான் இக்கட்டு நிலையில் சிக்கிநிற்கும் தமிழினத்தைக் காப்பாற்றி மீட்கவல்லன என்பதைத் தமிழர்கள் உணர்ந்துகொள்வது அவசியம்.

ஏட்டுச் சுரைக்காய் போலப் பயன்படாத கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கட்டிப்பிடித்து பிரலாபித்துக் கொண்டு, சாத்தியமற்ற தத்துவங்களைப் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமுமில்லை; பயனுமில்லை. அதேசமயம், தென்னிலங்கைச் சிங்கள மேலாதிக்கத்துக்குச் சோரம் போகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சமயோசிதமாக - தந்திரமாக - காய் நகர்த்துவது இன்றைய நிலையில் தமிழர் தலைமைகளின் வரலாற்றுப் பொறுப்பு.

# வளன்புரம் பகுதி மக்களை மீளக் குடியமர்த்த வசதியாக கண்ணிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ்.பிரதேச செயலகத்தில் அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு

நல்லூர், நவ. 11

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வளன்புரம் பகுதிகளில் மக்கள் மீள் குடியமரக் கூடியதாக கண்ணி வெடிகளை அகற்றுவது தொடர்பாக யாழ். படைத்தளபதியுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், இதற்கென கண்ணிவெடி அகற்றும் இயந்திரம் ஒன்று தருவிக்கப்படும் எனவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் யாழ். பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீளக்குடியமர வேண்டிய மக்களின் பிரச்சினைகள் குறித்து பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் மற்றும் கிராம அதிகாரிகள் ஆகியோர் அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்கள்.

தற்சமயம் இப்பகுதிகளில் சுமார் 200 குடும்பங்கள் வரை குடியேற வேண்டியுள்ளதாகவும் இவர்களுக்கு குடியிருக்க வீடுவசதிகள் இல்லாத நிலையில் தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாகவும் அங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

சொந்தக் காணிகள், வீடுகள் இல்லாதோரைக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் முதலில் மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஜனாதிபதி அவர்களுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும், தொடர்மாடிகளை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கான திட்டம் வீடமைப்பு அமைச்சிடம் உள்ளதெனவும் தெரிவித்த அமைச்சர் தற்காலிக குடியிருப்புகளை அமைக்க மரங்கள், தகரங்கள் போன்றவற்றை வழங்கவும் குடியமர்வுக்கென வழங்கப்படும் 25 ஆயிரம்ரூபா போதாது என்பதால் அவற்றை அதிகரிக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற படை அதிகாரியுடன் தொடர்பு கொள்ளப்படும் எனவும் ஆறு மாதங்களுக்குள் அனைவரையும் மீள் குடியமர்த்த ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார் எனவும் அமைச்சர் மகிந்தானந்த மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சர் மகிந்தானந்த குருநகர், யாழ். கோட்டை, நாவாந்துறை பகுதிகளுக்கும் சென்று அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து நேரடியாகப் பார்வையிட்டார். (50-111)

# இடம்பெயர்ந்த மாணவருக்கான சாதாரண தரப் பரீட்சையை 2010 பெப்ரவரியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதியிடம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 11

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள மாணவர்களில் ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சையை அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இடம்பெயர்ந்த மக்கள் சுமார் 5 ஆயிரம் பேர்வரையிலான வன்னியைச் சேர்ந்த ஜீ.சீ.ஈ. சாதாரண மாணவர்களின் பரிதாபகரமான நிலை தொடர்பாக தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

2008 பெப்ரவரி மாதமளவில் வன்னிப் பாடசாலைகள் மூடப்பட்டமையால் 10 ஆம் வருட கற்றலை இந்த மாணவர்கள் தொடரமுடியவில்லை. இவர்கள் உக்கிரமடைந்த போரினால் இடத்திற்குஇடம் இடம் பெயர்ந்து இறுதியாக வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்தனர். இவர்களில் கூடிய பகுதியினர் கடந்த 2009 ஒக்ரோபர் மாதத்தில் விடுவிக்கப்பட்ட பொழுதும் இன்னும் சிலர் முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

இந்தப் பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர்வதற்கான எந்த வசதியையும் பெற்றிருக்கவில்லை என்பதுடன், இப்பொழுதுதான் படிப்பினைத் தொடர ஆரம்பித்துள்ளனர். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 2009 டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால் இந்தப் பரீட்சைக்குத் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள இவர்களுக்குப் போதிய கால அவகாசமில்லை. இதனால் இவர்களில் அநேகமானவர்கள் பரீட்சையில் சித்தியடையாமலிருக்க நேரிடும். அது அவர்களை உளவியல் ரீதியாகப் பாதிக்கச் செய்யும்.

எனவே இந்தப் பரிதாப நிலையை அனுதாபத்துடன் நோக்கி, இவர்களுக்கான பரீட்சையை மூன்று மாத காலத்தால் ஒத்திவைத்து 2010 பெப்ரவரியில் நடத்த வேண்டுமென கோருகிறோம்.

இந்த விசேட பரீட்சையினதும் 2009 டிசெம்பர் மாதப் பரீட்சை யினதும் பெறுபேறுகளை அட்டவணைப்படி 2010 மார்ச் மாதத்தில் வெளியிட முடியுமென்றும் நம்புகின்றோம்.

தாங்கள் இந்த விடயத்தை மனிதாபிமான கோணத்தில் நோக்கி இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி உதவினால் நன்றியாக இருப்போம். - என்றுள்ளது. (50)

# மீளக்குடியேறிய மாணவர்கள் இயல்பு நிலையில் கல்வியைத் தொடர ஏற்பாடு செய்ய வேண்டும்

## அதிபர்களுக்கு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

நலன்புரி நிலையங்களில் இருந்து மீளக்குடியேறியுள்ள மாணவர்களின் பாடசாலை அனுமதி தொடர்பாக அதிபர்கள் எந்த விதமான கட்டணமும் அறிவீடு செய்யக்கூடாது. இந்த மாணவர்களின் பாடசாலை அனுமதியில் எந்தவிதமான நெருக்கடிகளும் இல்லாமல் மாணவர்களுக்கான அனுமதியை வழங்கி அவர்கள் இயல்பு நிலையில் கல்வியைத் தொடர்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மாகாணக்கல்விப் பணிப்பாளர் மேலும் தகவல் தருகையில் -

''பல்வேறு துன்பங்கள், துயரங்கள் மத்தியில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இன்னல்பட்டு தற்பொழுது சொந்த இடங்களில் மீளக் குடியேறியுள்ள மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு நாம் இயன்றளவுக்கு உதவிகள் புரியவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இந்த மாணவர்களின் பாடசாலை அனுமதியின்போது கட்டணங்கள் அறவீடு செய்வது, நிபந்தனைகளை விதிப்பது என்பது மனிதநேயத்துக்கு முரணான செயற்பாடாகும்.

மாணவர்கள் தங்கியிருக்கும் சூழலில் உள்ள பாடசாலைகளில் குறித்த மாணவர்களை அனுமதித்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் - எனக் கூறினார். (50-111)

# இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு ஆஸி.விடுத்த கோரிக்கையை நிராகரித்தது நியூசிலாந்து

வெலிங்டன், நவ. 11

இந்தோனேஷியாவில் உள்ள இலங்கை அகதிகளில் ஒரு பகுதியினரை ஏற்றுக்கொள்வது தொடர்பான அவுஸ்திரேலியாவின் கோரிக்கையை நியூசிலாந்து நிராகரித்துள்ளது.

இந்தோனேஷிய கடற்பரப்பில் தரித்துள்ள சுமார் 330 பேரில் சிலருக்கு நியூசிலாந்தில் அரசியல் அந்தஸ்தை வழங்க வேண்டும் என அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கோரியிருந்தார்.

எனினும் அவ்வாறான முனைப்பொன்றை மேற்கொள்ளும் சாத்தியம் இல்லை என நியூசிலாந்துப் பிரதமர் ஜோமன் கீ, இந்தோனேஷிய வானொலிக்குத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அவர்களுக்கு அரசியல் அந்தஸ்து வழங்கப்படும்போது மீண்டும் பாரிய எண்ணிக்கையில் நியூசிலாந்து நோக்கிய அகதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் நியூசிலாந்தின் இந்தக் கொள்கைக்குச் சர்வதேச மன்னிப்புச் சபையின் நியூசிலாந்து பிராந்தியத் தலைவர் பெட்ரிக்கோம்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகள் தொடர்பில் கரிசனை காட்ட வேண்டும் என அவர் நியூசிலாந்து அரசாங்கத்தை வலியுறுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர்கள் நியூசிலாந்து அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு குடியமர்த்த முடியாமைக்கு எவ்வித தகுந்த காரணங்களும் இல்லை எனத் தெரிவித்துள்ள அவர், அந்த அரசாங்கம் அவர்கள் தொடர்பில் உன்னிப்பான அக்கறை காட்டவேண்டும் எனக் கோரியுள்ளார்.

இதேவேளை நியூசிலாந்து மற்றும் இதர நாடுகளுடன் அவுஸ்திரேலியா அரசாங்கம் அகதிகள் குடியேற்றக் கொள்கை தொடர்பான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கபடுகின்றது. இந்த உடன்படிக்கைக்கு அனைத்து நாடுகளும் மதிப்பளிக்க வேண்டும்என அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் க்ரிஸ் ஈவன்ஸ் தெரிவித்துள்ளார். (50)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி | 26 | 12.11.2009 |
| | | வியாழக்கிழமை |
| திதி: | | தசமி |
| | | மு.ப. 06.26 வரை |
| நட்சத்திரம்: | | பூரம் |
| | | மு.ப.08.21 வரை |
| சுபநேரம்: | | [illegible] வரை |
| ராகுகாலம்: | | 01.36-03.06 வரை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் ...ம்பு கணேசமூர்த்தி
(திதி ...பாபக்க தசமி (11.11.2009)

பிறப்பு 10★10★1946 இறப்பு 23★10★2008

அப்பா அப்பா என்றழைக்க
அன்புடனே அரவணைத்தீர்
அன்பு மொழி பேசி
ஆதரவாய் எமக்கிருந்தீர்
இன்று நாம் துடி துடிக்க
எங்கே அப்பா சென்று மறைந்தீர்
ஆண்டு ஒன்று சென்றாலும்
அரிய உயிர் இருக்கும் வரை
எம் இதயம் தனில்
உங்கள் நினைவுகளுடன் வாழும்.

திரு . திருமதி பிரதீபன் - தர்ஷினி,
பேத்தி பி. பிறின்ஷி,
குடும்பத்தினர்

பூவோடை,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(சி/562238)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற விருந்த க.பொ.த (உ/த) வகுப்பில் இணைந்த கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை இந்தக் கருத்தரங்கு நடைபெறவிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தினால் அடுத்து வரும் சனிக்கிழமை 21 ஆம் திகதி இந்த கருத்தரங்கு நடைபெறும் என தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (10)

## சிவயோக சுவாமிகள் அமர்ந்த இடத்தில் புதிய இலுப்பை மரக்கன்று நடுகை

யாழ்ப்பாணம்,நவ.11

சிவயோக சுவாமிகள் அமர்ந்திருந்து தினமும் திருமுறை ஓதிய புனித இடத் தில் புதிய இலுப்பை மரம் நடுகை செய்யப் படவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவால் நடப்படவுள்ளது.

ஏற்கனவே இருந்த முதிர்ந்த இலுப்பை மரத்திற்கு பதிலாக புதிய மரம் நடப்படவுள்ளதாக மாநகரசபை முதல்வரின் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

## வடமராட்சியில் செயலமர்வு

வடமராட்சி, நவ. 11

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 12, 13 ஆம் வகுப்புகளில் கணக்கீடு (புள்ளித்திட்டம்) பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று புதன்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (1-236)

## வரவு செலவுத் திட்டம் - 2010

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 255 ஆம் அத்தியாயமான 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் 11.11.2009 ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
10.11.2009 (சி/562242)

திருமதி.மதுமதி வசந்தகுமார்
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

## ஸ்கந்தாவின் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி யோகராணி விமலாம்பிகைபாகன் அவர்களின் அன்புத்தந்தை

**சின்னத்தம்பி நாகமணி**

அவர்களின் மறைவை அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(90864) யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சுன்னாகம்.

## 31 ஆம் நாள்நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 ★ 03 ★ 1946



மறைவு 13 ★ 10 ★ 2009

**நாகலிங்கம் தெய்வேந்திரன்**

13.10.2009 அன்று சிவபதமெய்திய எங்கள் இதயத் தெய்வம் அமரர் நாகலிங்கம் தெய்வேந்திரன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு நேரில் வந்து ஆறுதல் கூறிய மற்றும் உதவிகள் புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும், உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் இருந்து தொலைபேசி, தொலை நகல், மின்னஞ்சல் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் நாளை (12.11.2009) வியாழனன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)*

இல.06, மேரீஸ் வீதி,
கொழும்பு-04 (90862)

தகவல்:
மனைவி, மக்கள்.

## யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி - 2010 ஆம் ஆண்டிற்கான ஆயுள்வேத (சித்த)சாஸ்திரி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

2010 ஆம் ஆண்டிற்கான யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருந்துவ கல்லூரியில் ஆயுள்வேத (சித்த)சாஸ்திரி டிப்ளோமா கற்கை நெறிக்காக மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

* வயதெல்லை -
21.11.2010 ஆம் ஆண்டு 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
* கல்வித் தகைமை - க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி (கணிதம் மற்றும் தமிழ்மொழி பாடத்தில் சிறப்புச் சித்தி)

அல்லது

தாய் அல்லது தந்தை பரம்பரை வைத்தியராக இருந்தால் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவையில் கணிதத்தில் சாதாரண சித்தியும் தமிழ்மொழியில் சிறப்பு சித்தியும் உட்பட மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணபத்தினை 21.11.2009 இற்கு முன்னர் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஆயுள்வேத (சித்த)சாஸ்திரி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் - 2010 என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படவேண்டிய முகவரி,

மாகாணப் பணிப்பாளர்,
மாகாண சுதேச மருந்துவத் திணைக்களம்,
வடமாகாணம், திருகோணமலை.

## யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2010

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. பதவிகள் யாவும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும். (விண்ணப்பங்களுடன் கல்விச்சான்றுகளின் பிரதியினை இணைத்து அனுப்பிவைக்கவும்)

1. பதவி:- விரிவுரையாளர் (Lecturer)
* கல்வித்தகைமை
I பட்டதாரி/டிப்ளோமா சுதேச மருத்துவம் (சித்த ஆயுள்வேத)
II ஆயுள்வேத மருத்துவசபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
III ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
IV சுதேச மருத்துவ கல்வி வழங்கலிலும் நோயாளர் கவனிப்பிலும் முன்னனுபவம் கொண்டவர் விரும்பத்தக்கது.
* வயதெல்லை - 21.11.2010 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 65 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
* மாதாந்த சம்பளம் - 16,340.00

2. பதவி:- போதனாசிரியர் (Demonstrator)
* கல்வித் தகைமை:-
I பட்டதாரி/டிப்ளோமா சுதேச மருத்துவம் (சித்த ஆயுள்வேத)
II ஆயுள்வேத மருத்துவசபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
III ஆயுள்வேத பாரம்பரிய பின்னணியினைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
IV சுதேச மருத்துவ கல்வி வழங்கலிலும் நோயாளர் கவனிப்பிலும் முன்னனுபவம் கொண்டவர் விரும்பத்தக்கது.
* வயதெல்லை - 21.11.2010 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 65 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.
* மாதாந்த சம்பளம் - 15,800.00

3. பதவி:- பதிவாளர் (Registrar)
* தகைமைகள் - முகாமைத்துவ உதவியாளர்I சேவையில் 15 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் (67 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்)
* வயதெல்லை - 21.11.2010 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
* மாதாந்த சம்பளம் - 17,550.00

4. பதவி:- முகாமைத்துவ உதவியாளர் II (Management Assistant II)
* தகைமைகள் -
க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி மற்றும் கணிதத்தில் சிறப்பு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே அமர்வில் 6 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 4 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் (67 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்)
* வயதெல்லை - 21.11.2010 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
* மாதாந்த சம்பளம் - 13,990.00

5. பதவி:- நூலக உதவியாளர் (Librarian)
* தகைமைகள் - க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி மற்றும் கணிதத்தில் சிறப்பு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே அமர்வில் 6 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நூலகம் சார்ந்த சேவையில் இரண்டு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் நூலக கற்கை சம்பந்தமான கற்கைகள் பயின்றிருத்தல் விரும்பத்தக்கது.
* வயதெல்லை - 21.11.2010 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
மாதாந்த சம்பளம் - 13,700.00

6. பதவி:- சிற்றூழியர் (Labourer)
* தகைமைகள்:- 8 ஆம் தரத்தில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
* வயதெல்லை - 21.11.2010 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
* மாதாந்த சம்பளம் - 11,730.00

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 21.11.2009 இற்கு முன்னர் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரியின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் - 2010 என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படவேண்டிய முகவரி,

மாகாணப் பணிப்பாளர்,
மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்,
வடமாகாணம், திருகோணமலை.


புதிய பிரிவுகள் ஆரம்பம் மல்டிமீடியா பயிற்சி நெறிகள்

Diploma in Microsoft Office 2007
Adv. Dip. in Hardware & Networking
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally AutoCAD Java




நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing
மென்பொதிகளையும் உள்ளடக்கிய Video Editing கற்கை நெறி.

Dip. in Pre-Press Desktop Publishing
Adobe Photoshop CS4, Adobe InDesign CS4
Corel Draw X4, Language Computing,
Scanning, Printing and Project.

Dip. in Video Production & Multimedia
Int.to Digital Video, Adobe Premiere CS 4,
Particle Illusion, Pinnacle Studio, COOL 3D Studio,
Adobe After Effects CS4, Nuendo, & VCD Cutter

DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403


## எங்கள் நெஞ்சுருகும் அண்ணாவின் முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் இரத்தினம் பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)
கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை - கனடா

அன்னை மடியில்
13★09★1937

ஆண்டவன் அடியில்
21★10★2008

திதி: 11.11.2009



ஆண்டொன்று சென்றதண்ணா
ஆறவில்லை எம்துயரம்
மீண்டும் இம்மண்ணில்
பிறப்பீரோ எம் அண்ணாவாய்
கண்ணீர் உதிருது அண்ணா
கதிகலங்கி நிற்கின்றோம்.

மனைவி - சுசீலாதேவி
மகன் - பிரதீபன்
மகள் - பிரியந்தி
பேரப்பிள்ளைகள்

என்றும் உங்கள் நினைவுடன்
சகோதர, சகோதரிகள்
கொக்குவில்.

(சி/90869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக யாழ்.பிரதேச செயலகத்தில் நேற்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே, யாழ்.பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்களைச் சந்தித்து கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், அமைச்சர் மகிந்தானந்த அளுத் கமகே ஆகியோர் உரையாற்றுவதையும் அருகில் அமைச்சர் டிலான் பெரேரா அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# கழிவுப் பொருள்களைப் பயன்படுத்திச் சேதனப் பசளை தயாரிக்கும் திட்டத்தை மீண்டும் செயற்படுத்த முடிவு

## அதற்காக ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.மாநகரசபைப் பகுதியில் சேரும் கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி சேதனப் பசளை தயாரிக்கும் திட்டத்தை மீள செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நகரின் கரையோரப் பகுதியான காக்கை தீவில் சேதனப் பசளை தயாரிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் இடத்திலே கடந்த 2007ஆம் ஆண்டு வரை சேதனப் பசளை தயாரிக்கும் செயன்முறை இடம்பெற்று வந்தது. அதற்குப் பின்னரான காலப்பகுதியில் அது கைவிடப்பட்டது.

தரம் பிரித்து கழிவுப் பொருள்களைச் சேகரிப்பதற்கும், அதில் உக்க முடியாத பொருள்களை எரிப்பதற்கும் அல்லது வேறாக்குவதற்கும், உக்கக் கூடிய கழிவுகளை சேதனப் பசளையாக மாற்றுவதற்கும் உரிய தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கு மாநகர சபையில் பற்றாக்குறை உள்ளமையே இத்திட்டம் கைவிடப்பட்டதற்கான பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது.

ஏற்புடைய தொழில்நுட்ப யுத்தியைப் பயன்படுத்தி, குப்பைத் தொட்டிகளை வடிவமைத்து நகரின் பல இடங்களில் அவற்றைப் பொருத்தித் தரம் பிரித்து கழிவுப் பொருள்கள் சேகரிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே குப்பைத் தொட்டி அமைக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி அக்குப்பைத் தொட்டிகள் வடிவமைக்கப்படாததன் காரணமாக அவை வெற்றியளிக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

மேலும் சேதனப் பசளை தயாரிக்கும் செயன்முறையில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் குழு ஒன்றை நியமிப்பதற்கும் ஏற்கனவே சேதனப் பசளை தயாரித்த அதே இடத்தில் மீளவும் அச்செயன்முறையை விரைவில் ஆரம்பிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரியவருகிறது. (50-14)

## கோழிக் குஞ்சு விநியோகம்


வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பண்ணையாளர்கள் ஆகியோரிடமிருந்து ஒரு மாதக் கோழிக்குஞ்சுகள், மூன்று மாதக் கோழிக்குஞ்சுகள் என்பன பெறப்பட்டு 'நிஷா' புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி சங்கத்தினால் கால்நடைகளும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-204)

# ஆதனங்களின் விவரம் மீள்மதிப்பீடு

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். மாநகரசபைகுட்பட்ட பகுதியிலுள்ள ஆதனங்களின் விவரம் தொடர்பான மீள் மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.




ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஆதன மதிப்பீடு செய்தல் வேண்டும். நாட்டின் கடந்த கால யுத்தநிலைமை காரணமாக 20 வருடங்களுக்கு மேலாக இவ்மதிப்பீட்டு நட வடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக சோலைவரி அறவிடுவதில் பல சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியிருப்பதனால் மீளவும் விரைவில் ஆதனங்கள் தொடர்பான மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (50-14)

# வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு மக்கள் வங்கித் தலைவர் நிதியுதவி

யாழ்ப்பாணம்,நவ.11

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் நிலையங்களை திறந்து வைக்கும் நிகழ்வின் ஓர் அங்கமாக, யாழ்.மாவட்ட வைத்தி



யாழ்.போதனா வைத்தியசாலை எட்டாம் இலக்க விடுதி புனரமைப்பிற்கென ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான காசோலையினை மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ. கருணாஜீவ வைத்திய கலாநிதி சிவன்சுதனிடம் நாவலர் வீதி சேவை நிலையத் திறப்பு விழாவின்போது கையளிப்பதனைப் படத்தில் காணலாம். (படம்: உமா)

கிராமங்கள் தோறும் மக்கள் வங்கி சேவை யசாலைகளின் புனரமைப்புக்கு என நிதி நன்கொடை வழங்கல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை எட்டாம் இலக்க விடுதி புனரமைப்பிற்கென ஐந்து லட்சம் ரூபாவிற்கான காசோலையும், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை இரத்த வங்கி புனரமைப்பிற்கு என ஒன்றரை லட்சம் ரூபாவிற்கான காசோலையும் மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ.கருணா ஜீவவினால் கையளிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கான காசோலை, வைத்திய கலாநிதி சிவன்சுதனிடம் நாவலர் வீதி சேவை நிலையத் திறப்பு விழாவின் போதும், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கான காசோலை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் புலோலி சேவை நிலையத் திறப்பு விழாவின்போதும் கையளிக்கப்பட்டன.

அத்துடன் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காங்கேசன்துறை சேவை நிலையத் திறப்பு விழாவின் போது, பயனாளிகள் இருவருக்கு வடக்கின் வசந்த திட்டத்தின்கீழ் கடன் வழங்கும் நிகழ்வும் மக்கள் வங்கித் தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (50-14)

# யாழில் மீளக்குடியமரும் முஸ்லிம் மக்களுக்கு தங்குமிட வசதிகள் உடனடியாக செய்துகொடுக்கப்படவேண்டும்

## மக்கள் பணிமனைச் செயலாளர் பாயிஸ் தெரிவிப்பு

நல்லூர், நவ.11

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்வதற்காக புத்தளத்திலிருந்து மிகவிரைவில் 100 முஸ்லிம் குடும்பங்கள் வரவுள்ளதாகவும் இங்கு மீளக்குடியமர்வதற்காக 250 குடும்பங்கள் வரை பதிவுசெய்துள்ளதாகவும் அவர்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளை தாமதமின்றிச் செய்துதர சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் எனவும் மக்கள் பணிமனையின் செயலாளர் எஸ்.எம்.பாயிஸ் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை குடியிருக்கும் வீடுகள்தான். தற்போது இங்கு வந்துள்ள முஸ்லிம் மக்கள் எவரும் தமது சொந்த வீடுகளில் தங்க முடியவில்லை. இவர்களது வீடுகள் முழுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. முதலில் தீர்க்கப்படவேண்டியது வீடுகள் குறித்த பிரச்சினைகள்தான். மீளக்குடியமர்ந்த முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் வாடகை வீட்டிலேயே உள்ளனர். எந்த வேளையிலும் இவர்கள் அவற்றைவிட்டு வெளியேற வேண்டியநிலை வரலாம்.

85 குடும்பங்கள்வரை தற்சமயம் இங்கு குடியமர்ந்துள்ளன. அரசு ஏனைய நலன் புரி நிலையங்களில் இருந்த மக்களை இங்கு மீள அழைத்து வந்ததைப் போன்ற ஏற்பாடுகள் எதுவும் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இடம்பெறவில்லை. முஸ் லிம் மக்கள் தாங்களாகவே தமது சொந்த செலவில் இங்கு மீளக்குடியமர வந்துள்ளனர். இங்கிருந்து 4800 முஸ்லிம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. தற்சமயம் 8200 குடும்பங்களாகஅவர்கள் மீளத் திரும்ப வேண்டியுள்ளது. மீளக்குடியமர்ந்த, குடியமரவுள்ள முஸ்லிம் மக்களின் நலன்கள் கவனிக் கப்படவேண்டும் எனவும் பாயிஸ் தெரிவித்தார். (04-111)

# விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.11

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இதுவரை இணைந்துள்ள நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்குப் போதுமான வசதிகள் வழங்கப்படவில்லை என கல்லூரி அதிபர் ம.கஜேந்திரன் தெரிவித்தார்.

தமது கல்லூரியில் இணைந்துள்ள 38 மாணவர்கள் சிலருக்கு தம்மிடமிருந்த பாடசாலை சீருடைகளை தாம் வழங்கியுள்ளதாகவும் ஏனைய மாணவர்களுக்கு வழங்க சீருடைகள் போதாமல் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விடுவிக்கப்பட்டு இணைந்த அனைத்து மாணவர்களுக்கும் பாதணிகள், புத்தகப் பைகள், மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படாமையினால் அந்த மாணவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி உள்ளதாகவும் தனியார் தொண்டு நிறுவனங்கள் அவர்களுக்கு உதவ முன்வரவேண்டும் என தான் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (50-15)

# 'ஒளிவிழா' நிகழ்வு

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் ஒளி விழா நிகழ்வுகளும் 'ஒளியை நோக்கி' என்னும் சஞ்சிகை வெளியீடும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட பொது நிதிமுகாமையாளர் அருட்பணி ஜே.பி. அன்ரனிதாஸ் கலந்து கொள்வார். (50- 201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுப்பழக்கத்தை கட்டுப்படுத்துவதை விடவும் முற்றாக ஒழிப்பதே சமூக நன்மை பயக்கும்

## நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் உரை

சண்டிலிப்பாய், நவ.11

மக்கள் மத்தியில் இருக்கும் மதுப்பழக் கத்தை அவர்கள் மத்தியில் இருந்து கட் டுப்படுத்துவதிலும் பார்க்க அதை முற்றாக ஒழிக்க வேண்டும். அந்த நிலை உருவாகும் போதுதான் மதுவுக்கு அடிமையாக வாழ்ந்து வரும மனிதர்களை நல்ல பிரஜைகளாக மாற்றியமைக்கமுடியும். இது காலத்தின் தேவையுமாகும்.

இவ்வாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந் தில்நந்தனன் சர்வதேச மது தினத்தை முன்னிட்டு'' விழுது'' ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் நல்லூர் பிரதேச செயலக கேட்போர் மண்டபத்தில் நடத்தப்பட்ட கூட் டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசும் போது கூறினார்.

'விழுது' உத்தி யோகத்தர் சி.தர் மினி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிரதேச செயலர் தொடந்து பேசும் போது கூறி யவை வருமாறு:-

ஆயிரக்கணக் கான குடும்பங்கள் மதுவிற்கு அடிமை யாகி நிம்மதியிழந்து வாழ முடியாமல் திண்டாடுவதை நாளாந்தம் பார்க்கக் கூடியதாக இருக் கின்றது. இவர்களை நல்ல மனிதர்களாக மாற்றியமைப்பதற்கு மதுப்பழக்கத்தை மாற்றியமைப்பதிலும் பார்க்க மதுவை முற் றாக நிறுத்த வேண் டும். இதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உரு வாக்க முடியும் -என் றார். (04-115)

ரஞ்சிதா வைத்தியசாலையின் 30ஆவது ஆண்டு நிறைவையொட்டி

இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச கண் பரிசோதனையும் பல் பற்றிய ஆலோசனையும்

இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு மிகக் குறைந்த கட்டணத்தில் [600/=] மூக்குக்கண்ணாடியும் இலவச பல் ஆலோசனை வழங்கப்பட்டு பல்கட்டுதல், கிளிப்போடுதல், நிரந்தர கிளிப் போடுதல் என்பன அரைக்கட்டணத்தில் மேற்கொள்ளப்படும்.

பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

காலம்: 15.11.2009 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ரஞ்சிதா வைத்தியசாலை, சுதுமலை மத்தி, மானிப்பாய்.

தொ.பே.: 021 222 6174. (9am- 1.00 pm)

ரஞ்சிதா வைத்தியசாலை, டச்சுறோட், உடுவில். (11am- 1.00 pm)

[90863]

கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனப்பணியாளரான

திரு.செ.யோசப்பாலா அவர்களின் தாயார்

திருமதி செபஸ்ரியாம்பிள்ளை றோசலின்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், பணியாளர்கள்,
கியூடெக்-கரித்தாஸ்,யாழ்ப்பாணம்.

(செ/563340)

## சாவகச்சேரி பிரதேசசபை

## 01.01.2010 முதல் 31.12.2010 வரை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல்

1.கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித்திகதி: 18.11.2009 12 மணி
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி: 20.11.2009 12 மணி
3.கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 20.11.2009 பிற்பகல் 1.00 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர) | கேள்விப் பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி தவிர) |
|---|---|---|---|
| 01.கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை (தேங்காய் சந்தை உட்பட) | 2,750,000.00 | 7,000.00 | 1,000.00 |
| 02.கொடிகாமம் மீன் சந்தை (கோழிச் சந்தை உட்பட) | 230,500.00 | 3,000.00 | 500.00 |
| 03.கொடிகாமம் மத்திய சந்தையிலுள்ள வண்டி வாகனப் பாதுகாப்பு நிலையம் (கிழக்கு, மேற்கு இருவாயில்கள்) | 220,000.00 | 3,000.00 | 500.00 |
| 04.கொடிகாமம்சந்தை கருவாட்டுக்கடை இல 1 | 13,900.00 | 1,000.00 | 500.00 |
| 05.கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல 02 | 10,000.00 | 1,000.00 | 500.00 |
| 06.கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 185,000.00 | 3,000.00 | 500.00 |
| 07.கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 40,000.00 | 1,000.00 | 500.00 |
| 08.வரணி பொதுச்சந்தை | 75,000.00 | 1,500.00 | 500.00 |
| 09.கைதடி பொதுச்சந்தை | 19,800.00 | 1,000.00 | 500.00 |
| 10.கைதடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 36,100.00 | 1,000.00 | 500.00 |
| 11.கைதடி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 80,000.00 | 1,500.00 | 500.00 |

நிபந்தனைகள்

1.இறைச்சிக்கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
2.கேள்வித் தொகை, படிவக்கட்டணம், மாதவாடகை என்பவற்றுடன் 12% வற்வரியும் சேர்த்து செலுத்தல் வேண்டும்.
3.வண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் துவிச்சக்கரவண்டி ரூபா 2.00, மோட்டார் சைக்கிள் ரூபா 5.00, மோட்டார் வாகனம் ரூபா 10.00 என்ற விகிதக் கட்டணம் அறவிடற்பாலது.
4.சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு எந்த வரி அறவீடுகளும் மேற்கொள்ளக் கூடாது.
5.கால்நடைகள் கைதடி கொல்களத்தில் வெட்டப்பட்டு சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் இறைச்சிக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.
6.தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப் பிரித்து மாதக் கட்டணமாக அடுத்த 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.
7.கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியினை ''செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்'' என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
8.கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
9.மேலதிக விவரங்களை பிரதேசசபை தலைமை மற்றும் உப அலுவலகங்களில் அறிந்து கொள்ளலாம்.

வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
09.11.2009

(செ-562237)



யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றத்தின் முதியோர் தின விழாவும், முதியோர் கௌரவிப்பும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் கௌரவிக் கப்பட்ட முதியோர்களுடன் யாழ். மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஆ.ஞானவேல், யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவைத் தலைவர் எஸ்.சிவகுமாரன் மற்றும் மன்றப் பணிப்பாளர் திருமதி ஜெயமணி ஜோசப், செயலாளர் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: நந்தன்)

# வலி. மேற்கில் வீதி அபிவிருத்தி மந்தகதியிலேயே இடம்பெறுகிறது

யாழ்ப்பாணம், நவ. 11

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் வலி.மேற்கில் வீதி அபிவிருத்தி மந்த கதியிலேயே இடம்பெறுகின்றது.

எனவே இதற்கான நிதியை பெற்றுக் கொடுக்க வலி.மேற்கு பிரதேச செயலர் முன்வரவேண்டும்.

இவ்வாறு பிரதேச செயலக ஒருங் கிணைப்புக் குழு கூட்டத்திற்கு வருகை தந்த பிரதேச பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பிரதேச சபைக்கு நாம் பல கடிதங்கள் மகஜர்கள் சமர்ப்பித்தபோதும் அபிவிருத்தி இன்றி தேக்க நிலையில் உள்ளது.

இதனால் வடக்கின் வசந்தம் அபிவி ருத்தித் திட்டம் எமக்குப் பயனளிக்க வில்லை எனவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

இதேவேளை

பிரதேச சபை முன்னுரிமை அடிப் படையில் வீதி அபிவிருத்தி பட்டியல்கள் தயாரித்து உரிய அதிகாரிகளுக்கும் உரிய அமைச்சு, திணைக்களங்களுக்கும் அனுப்பி உள்ளதாக தெரிவித்துள்ளது. (50-302)

## மட்டுவில் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு

மட்டுவில் பிரதேசத்தில் இருந்து சட்ட விரோதமான முறையில் கைதடிப் பகு திக்கு மணல் கடத்தப்படுவது அண் மைக் காலமாக அதிகரித்திருப்பதாக பொதுமக்க ளால் புகார்கள் தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் முசுறிப் பகுதியில் இருக் கின்ற நிலங்களில் இருந்து அகழப்படும் மணல் இரவு வேளைகளில் கைதடியில் இருந்து செல்கின்ற உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றப்பட்டு கைதடி மத்திப் பிரதேசத் துக்கு கடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

இக்கடத்தல் சம்பந்தமாக நியாயம் கேட்க முற்படும் பொதுமக்கள் உழவு இயந்திர உரிமை யாளர்களால் மிக வும் அச்சுறுத் தப் படுவதாகவும் தெரி விக்கப்படுகின் றது. மேலும் இவ் வாறு கடத்தப்படும் மணல் கைதடி மத் திப் பிரதேசத்தில் பெருமளவாக பதுக்கி வைக்கப்பட்டு பின் அதி கூடிய விலை யில் விற்பனை செய் யப் படடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எழுதுமட்டுவாழ் பகுதி மீளக்குடியமர்வு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள எழுதுமட்டு வாழ் தெற்கு, வடக்கு, ஒட்டுவெளி, கரம்பகம் ஆகிய பகுதிக ள் மேன்மை தங்கிய சமூகசேவைகள் நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் மீளக்குடியமர நாளை (12.11.2009) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து விடப்படவுள்ளன. அன்றைய தினம் அப்பகுதி மக்கள் அனைவரும் தங்கள் வீடுகளைப் பார்வையிடுவதற்கு எழுது மட்டு வாழ் சந்தியில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எழுதுமட்டுவாழ் தெற்கு,
J/333

கிராம உத்தியோகத்தர்
பொ.நவரத்தினராசா.

(90867)

நீங்களும் அரச/சர்வதேச அங்கீகாரமுள்ள மருந்தாளர் (Pharmacist) ஆகலாம்!!

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஆரம்பமாகின்றது!!!

Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy)




இக் கற்கை நெறியானது எதிர்வரும் சனிக்கிழமை 14/11/2009 அன்று ஆரம்பமாக உள்ளதால் உடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

முக்கிய குறிப்பு :-

இக் கற்கை நெறியை கற்றதன் பின்னர் நீங்கள் விரும்பின் UK இல் உள்ள அதி சிறந்த பல்கலைக்கழகங்களில் Bachelor Of Pharmacist (B.Pham) பட்டத்தை இலகுவில் பெற்று, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.

HND in Pharmacy examination conducted by Sri Lanka Medical Council SLMC registration Admission criteria to sit for the external examination is GCE A/L simple pass for the Chemistry. (Durations :- 18 Months )

Guaranteed admission to BSc. in Pharmacy programme in Universities with credit/year exemptions. In time to come we are planning to affiliate the existing programme with world renowned universities abroad leading to B.Sc , MSc, PhD Level.

WHAT DO YOU LEARN? LEARNING COMPONENT
Basic Pharmaceutical English Forensic
Pharmacy Pharmaceutics
Human Anatomy & Physiology
Pharmacology Pharmacognosy
Pharmaceutical Management Pharmaceutical Ethics
Pharmaceutical Marketing Practicals and Internship

A/L பரீட்சையில் Chemistry சித்தியடைந்திருத்தல் வேண்டும்

இக் கற்கை நெறியானது Pharmacy வைத்திருப்போர் or Pharmacy ஒன்றை ஆரம்பிக்க இருப்போர் மற்றும் Pharmacist துறையில் தொழில் புரிவோருக்கு மிகவும் பயனுள்ள கற்கை நெறியாகும்.

மேலதிக விபரங்களுக்கு :- UNI ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் பயிற்சி, கடும் உழைப்பு ஆகியவற்றின் மூலம் யாழ்.வீரர்களும் தேசிய அணியில் இடம்பெறுவர்

**இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் உறுப்பினரும் இலங்கை அணியின் முன்னாள் முன்னணி வீரருமான அரவிந்த டி சில்வா தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்.வந்தார். அப்போது அவர் உதயனில் வைத்து வழங்கிய பிரத்தியேக செவ்வி இங்கே**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரர்கள் கிரிக்கெட் விளையாட்டில் ஆற்றலும், திறமையும் கொண்டவர்களாக விளங்குகின்றனர். கடும் பயிற்சி, கடும்



உழைப்பின் மூலம் அவர்கள் தேசிய அணியில் இடம்பெற வாய்ப்பு உண்டு. சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி, அவர்களுக்கு உரிய பயிற்சிகளைக் கொடுத்து தேசிய அணிக்குக் கொண்டுவர வேண்டும்.

கிரிக்கெட் துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்து, தற்போது ஓய்வுபெற்று பயிற்சிகளை வழங்கிவரும் அரவிந்த டி சில்வா மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அவர் 'உதயன்' அலுவலகத்தில் வைத்து வழங்கிய பேட்டியிலேயே இந்தக் கருத்தைக் கூறினார்.

பிரத்தியேக நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்த அவர் 'உதயன்' அலுவலகத்திக்கும் வந்திருந்தார்.

அப்போது 'உதயன்'க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்ததாவது:

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பயிற்சி முகாம் ஒன்றை நடத்தினேன். அந்தப் பயிற்சி முகாமில் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்த ஏழுபேரைத் தெரிவுசெய்து, கொழும்புக்குக் கூட்டிச்சென்றேன்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருந்து 7 வீரர்களைத் தெரிவுசெய்து அவர்களைக் கொழும்புக்கு அழைத்திருந்தோம்.

அந்த வீரர்களுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களையும் இணைத்து ''சுப்பர் களம்'' என்ற நிலையில் பயிற்சி வழங்கினோம்.

பின்னர் அந்த ஏழு வீரர்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகைக்கு அழைத்திருந்தார். அங்கு அவர்களுடன் ஜனாதிபதி நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் உட்பட சகல விளையாட்டுக்களையும் முன்னேற்ற தேவையான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அவர்களிடம் தெரிவித்தார்.

பயிற்சிக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களையும் ஜனாதிபதி அவர்களுக்கு அன்பளிப்புச் செய்தார் என்று கூறினார் அரவிந்த.



யாழ்.வீரர்கள் தேசிய அணிக்கு முன்னேறும் வாய்ப்பு உண்டா எனக் கேட்டபோது,

தேசிய அணிக்கு முன்னேறக்கூடிய திறமையும் ஆற்றலும் யாழ்.வீரர்களுக்கு உண்டு. கடின உழைப்பு, கடுமையான பயிற்சி ஆகியவற்றின் மூலம்தான் அது சாத்தியமாகும்.

கிரிக்கெட்சபை, கல்வியமைச்சு உட்பட மற்றும் அமைப்புக்கள், அந்த வீரர்களுக்குத் தேவையான உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்க முன்வரவேண்டும்.

ஆரம்பத்தில் கனிஷ்ட பிரிவில் விளையாடி அதன்பின் அவர்கள் தேசிய அணிக்கு முன்னேற முடியும் - என்றார்.

இலங்கை அணி தற்போதைய நிலை குறித்து, முன்னாள் முன்னணி வீரர் என்ற வகையில் கூறமுடியுமா?

தென்னாபிரிக்காவில் நடந்த சம்பியன்ஸ் கிண்ணச் சுற்றுப் போட்டியில் தோல்வியடைந்த பின்னர் இப்போது இந்திய அணியுடன் போட்டிகளில் பங்குபற்றச் செல்கிறார்கள். அங்கு எமது வீரர்கள் சாதிப்பார்கள்.

வெற்றிவாகை சூடுவர் என்றார்.

தேசிய அணியில் இடம்பெற்றுள்ள புதிய முகம்கள் குறித்துக் கேட்டபோது, புதிய முகம்கள் சாதிப்பார்கள். அவர்களுக்கு சிரேஷ்ட வீரர்களின் ஒத்துழைப்புக் கிட்டும். புதிய முகங்களை அணைத்துக்கொண்டு சிரேஷ்ட வீரர்கள் சாதனைகளைத் தொடர்வார்கள் என்றார்.

19 வயது அணியைத் தயார் செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறிய அரவிந்த, ஜனவரியில் நடைபெறவிருக்கும் 19 வயதுப் பிரிவு உலகக் கிண்ணப் போட்டியில் எமது வீரர்கள் சாதிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன் - என்றார்.

யாழ்.வீரர்கள் கடும் பயிற்சிகளை மேற்கொண்டு, கடும் உழைப்பை உரமாக்கி தேசிய மட்டத்தில் ஜெயிக்க வேண்டும். இதுவே யாழ்.வீரர்களுக்கு விடுக்கும் செய்தியாகும் என்றார் அரவிந்த.

**செவ்வி: துருவியன்**

## நம்பிக்கை வெளியிடுகிறார் இலங்கை அணியின் முன்னாள் முன்னணி வீரர் அரவிந்த டி சில்வா

# நண்பனின் உதவியுடன் பிறிமியர் லீக் கழகத்தில் இடம்பிடித்தேன் அதுவே என்னைத் தேசிய அணிவரை கொண்டுசென்றது

## யாழ்ப்பாணத்திலிருந்து தேசிய அணிக்குத் தெரிவாகிய ஒரேயொரு வீரரான சதீஸ் தெரிவிப்பு

கொழும்பில் உயர் கல்வியைக் கற்பதற்காக நான் சென்றபோது நண்பர் ஒருவர் கொழும்பு உதைபந்தாட்ட கழகங்களில் விளையாட என்னை அழைத்து சென்றதன் மூலமே தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

இவ்வாறு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வசிப்பவரும், இலங்கைத் தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்துள்ளவருமான சதீஸ்வரன் குறிப்பிட்டார்.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் இலங்கைத் தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம் பெற்றுள்ளார். இவ்வாறு தேசிய அணியில் தான் இடம் பிடித்தவிதம் குறித்து சதீஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:.

ஆரம்பக் கல்வியை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கற்றேன் பின்னர் தரம் 9ஆம் வகுப்பில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இணைந்து கொண்டேன்.

முதல் தடவையாகக் கல்லூரியில் 13 வயதுப் பிரிவினருக்கான பயிற்சிக்கு சென்று அணியில் இடம்பிடித்தேன். அப்போது அணியில் விளையாட கல்லூரியின் பழைய மாணவன் எ.ஜே.சௌந்தரநாயகம் (சந்திரன்). ஊக்குவித்தார். இதேபோன்று கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், உபஅதிபர் அருட் தந்தை ஜேம்ஸ் சிங்கராயர் ஆகியோரும் எனக்குப் பல்வேறு உதவிகளையும் செய்து என் திறமையை வளர்க்க உதவினார்கள்.

இதன் மூலம் 15,17,19 வயதுப் பிரிவு அணிகளிலும் நான் தொடர்ந்து விளையாடியதுடன் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்திலும் இணைந்து விளையாடும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டேன்.

2006ஆம் ஆண்டில் கல்வி கற்பதற்காகக் கொழும்பு சென்றேன். அங்கு எனது நண்பரான மோகன் என்பவர் கிருலப்பனை பிரிமியர் விளையாட்டுக் கழகத்தில் விளையாட என்னை அழைத்துச் சென்றார்.

அங்கு விளையாடும்போது கழகத்தின் பயிற்றுவிப்பாளர் 'நிஹால்' எனக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்கினார்.

கொழும்பு சென்று ஏற்கனவே நான் 'சவுன்டேர்ஸ்' விளையாட்டுக் கழகத்துக்காக விளையாடிய போதிலும் மொழிப்பிரச்சினை காரணமாக தொடர்ந்து விளையாட முடியாதநிலை ஏற்பட்டது. ஆயினும் அதன் பின்னர் பிறிமியர் கழகத்தில் நான் இணைந்து கொண்டதாலேயே தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பெறும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டேன்.

அங்கு விளையாடும்போது பிறிமியர் லீக்கின் ஆலோசகரும் தேசிய அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளருமான 'சுமித்துல் பொல' தேசிய அணிக்கான தெரிவு இடம்பெற்ற வேளையில் என்னையும் தெரிவுப் பயிற்சிக்கு அனுப்பிவைத்தார்.

இதற்கிடையில் கொழும்பு சிற்றிலீக் போட்டியில் கலந்துகொண்டேன். இப் போட்டியில் வலது முன்னணி வீரனாக விளையாடி அந்தச் சுற்றுப் போட்டியில் கோல்களை அடித்து எமது கழகம் சம்பியன் கிண்ணத்தைப் பெறும் வகையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினேன்.

தேசியத்தெரிவு அணியில் முதல் பதினொரு பேரில் என்னையும் தெரிவுக் குழுவினர் தெரிவுசெய்து இணைத்துக் கொண்டார்கள்.

இதன் பின்னர் இந்தியாவில் நடைபெற்ற 'நேரு' கிண்ணத்திற்கான போட்டியில் விளையாட சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. இந்தப் போட்டியில் லெபனான் நாட்டுக்கு எதிராக விளையாடினேன். தொடர்ந்தும் தேசிய அணிக்கான உதைபந்தாட்ட பயிற்சி முகாமில் பயிற்சிகளைப் பெற்று வருகின்றேன்.

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வீரர்கள் தேசிய மட்டத்தில் மிளிர வேண்டுமாக இருந்தால் கொழும்பு விளையாட்டுக் கழகங்களில் விளையாடித் தமது திறமைகளை



வெளிப்படுத்துவதன் மூலமே தேசிய அணிகளில் இடம்பெற முடியும்.

கொழும்பு விளையாட்டுக் கழகங்களைப் பொறுத்தவரையில் யாழ். மாவட்ட வீரர்களுக்கு இடமளிப்பதில் பின்நிற்காத நிலை காணப்படுகின்றது. இதனை யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வீரர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி தேசிய அணியில் இடம்பெற வேண்டும் - எனவும் குறிப்பிட்டார்.

**நேர்காணல்: நேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - பதுளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## கணிதம் - I (புதிய பாடத்திட்டம்) 32-T-I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

### பகுதி - A

01. மூன்று புத்தகங்களை விலைக்கு வாங்கிய ஒருவர் கடைக்காரனுக்கு ரூபா 100 கொடுத்தபோது மீதியாக ரூபா 19 கிடைத்தது எனின் ஒரு புத்தகத்தின் விலை யாது?

02. சுருக்குக. x/3 + 2x/3

03. B எனும் தொடையின் முதலிமை 5 ஆகும். இதனை தொடை குறியீட்டில் எழுதுக.


04. 35.3இற்கும் 3.53இற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

05. தேயிலை பைக்கற்று ஒன்றின் நிறை 250g. அதனை கிலோகிராமில் தருக.

06. $x^2 + x$ எனும் கோவையை இரு காரணிகளின் பெருக்கமாகத் தருக.

07. 4 எனும் எண்ணை துவித எண்ணாக தருக.

08. தரப்பட்ட உருவில் ABC இன் பெறுமானம் யாது?




09. $x \leq 2$ எனும் சமனிலியை எண் கோட்டில் குறித்துக்காட்டுக.


10. ஒரு பாடசாலை மாணவர்களில் 50% ஆனோர் பெண்களாவர். பாடசாலையிலுள்ள மாணவர்கள் 740 எனின், பெண்கள் எத்தனை பேர்?

11. x + y = 3 எனும் கோட்டிற்கு சமாந்தரமாகவும் (0, 2) இற்கூடாகவும் செல்லும் நேர் கோட்டிற்கான சமன்பாட்டை எழுதுக.

12. சுருக்குக. $16^{1/4}$


13. 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட சதுரமுகி தாயக்கட்டை ஒன்றை உருட்டும் பரிசோதனையில் முதன்மை எண் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

14. ABஐ விட்டமாக உடைய வட்டத்தில் உள்ள புள்ளிகள் CD ஆகும். $B\hat{A}C = 40^0$ எனின், $A\hat{D}C$இன் பருமன் யாது?





15. 20% இலாபம் வைத்து ஒரு பொருளை விற்கும்போது ஒருவருக்கு ரூபா 140 இலாபம் கிடைத்தது. எனின், பொருளின் கொள்விலை யாது?

16. இம்முக்கோணிகள் இரண்டும் ஒருங்கிசைவதற்கு தேவைப்படும் இன்னும் இரு தரவுகளைத் தருக.





17. x - y = a, xy = b எனின், (x + y) இனை a, b சார்பில் தருக.

18. உருவில் B யிலிருந்து A இன் திசைகோளைக் காண்க.




19. இவ்வுருவின் மொத்த பரப்பளவு யாது?




20. ராஜன் காலை 6.00 மணிக்கு தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் $40kmh^{-1}$ எனும் கதியில் புறப்பட்டு காரியாலயத்திற்கு 9.00 மணிக்கு சென்றார். அடுத்த நாள் 30 நிமிடம் தாமதமாகி புறப்பட்டு அதே நேரத்திற்கு செல்ல வேண்டிய கதி யாது?

21. தீர்க்குக. $2x^2 + 5x = 0$


22. $\sqrt{3} = 1.73$ எனின், $6/\sqrt{3}$ இன் பெறுமானம் யாது?

23. கமலும் விமலும் தமக்கிடையே குறித்த பணத்தொகையை பகிர்ந்துகொண்ட விகிதம் 5:3 ஆகும். விமலும் நிமலும் பகிர்ந்துகொண்ட விகிதம் 6:1 ஆகும். மூவரும் தமக்கிடையே பணத்தை பகிர்ந்துகொண்ட விகிதம் யாது?

24. தீர்க்குக. $3^x \times 2^x = 36$


25. எண் தொடரொன்றின் முதல் 49 உறுப்புகளின் கூட்டுத்தொகை 157 ஆகும். முதல் 50 உறுப்புகளின் கூட்டுத்தொகை 165 எனின், 50ஆவது உறுப்பு யாது?

26. O ஐ மையமாக உடைய வட்டத்தில் AX, AY என்பன தொடலிகளாகும்.
   1) சம பக்கங்கள் இரண்டை எழுதுக.
   2) சம கோணங்கள் இரண்டை எழுதுக.





27. 8 மனிதர்களுக்கு 5 நாட்களுக்கு போதுமான உணவின் 1/4 பங்கானது 2 மனிதர்களுக்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

28. ABC இல் தரப்பட்ட தரவுகளைக் கொண்டு AC நீளத்தைக்காண்க.




29. $(x^2 - y^2)$, (x+y), 2x - 2y எனும் கோவைகளின் பொ.ம.சி யாது?

30. AB, CD என்பன வட்டத்தின் இரு நாண்களும் இவ்வட்டத்தின் மையத்தைக் காணும் கேத்திரகணித முறை ஒன்றைத் தருக.




### பகுதி B

01. கமலாவும் விமலாவும் பழங்களை வாங்குவதற்காக சந்தைக்கு சென்றனர். சந்தையில் மாம்பழம் 10இன் விலை ரூபா 50 றம்புட்டான் 10இன் விலை ரூபா 10, ஆப்பிள் பழம் ஒன்றின் விலை ரூபா 25 ஆகும்.
   a) கமலாவும் விமலாவும் முறையே மாம்பழங்கள் 5உம், 4உம், றம்புட்டான் 10உம் 15உம் வாங்கினர். கமலா மட்டும் 2 ஆப்பிள் வாங்கினாள்.
      1. இருவரும் பழங்கள் வாங்கிய எண்ணிக்கையை 2 × 3 வரிசையிலான ஒரு தாயத்தினால் காட்டுக. அதனை A எனப் பெயரிடுக.
      2. பழங்களின் விலைக்கான தாயத்தை எழுதி அதனை B எனப் பெயரிடுக.
      3. 2A தாயத்தை எழுதுக.
   b) $\begin{pmatrix} 5, 7 \\ -3, 5 \end{pmatrix} = \begin{pmatrix} a & (a+b) \\ x & (x-y) \end{pmatrix}$
   எனின் a, b, x, y என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க.

02. எள்ளுருண்டை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றின் அதற்கான மூலப்பொருள்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:-

100 எள்ளுருண்டைகளுக்கு
எள்ளு 1kg = ரூபா 240
சீனி 250g = ரூபா 20
கருப்பட்டி 750g = ரூபா 140


   1) 100 எள்ளுருண்டைகளுக்கு பயன்படுத்தப்படும் எள்ளு முழு கலவையின் என்ன பின்னம்?
   2) எள்ளுருண்டைகளுக்கு பயன்படுத்தப்படும் எள்ளு, சீனி கருப்பட்டி என்பவற்றின் விகிதங்களை எளிய வடிவில் தருக.
   3) 100 எள்ளுருண்டைகள் செய்வதற்கான செலவு ரூபா 400 ஆகும். 100 உள்ள பைக்கற்று ஒன்றினை 20% இலாபம் பெற குறிக்கவேண்டிய விலை யாது?
   4) சீனி, கருப்பட்டி என்பவற்றின் விலை மாறாமல் இருக்க எள்ளின் விலை 25% அதிகரித்ததெனின், தற்போது 20% இலாபம் பெற குறிக்கவேண்டிய விலை யாது?

03. ஒரு பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றில் 60 நாட்களில் வைத்தியசாலைக்கு வருகை தந்தவர்கள் பற்றிய விவரம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.


| வகுப்பாயிடை (நாட்களின் எண்ணிக்கை) | 0-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் (நோயாளர்களின் எண்ணிக்கை) | 10 | 08 | 05 | 03 | 01 |

   1) இத்தகவல்களைக் காட்டும் வலையுரு வரையத்தை வரைக.
   2) அதிலிருந்து மீடிறன் பல்கோணியை வரைக.
   3) வலையுரு வரையம் வரையாமல் மீடிறன் பல்கோணியை வரையலாம் என சுரேஸ் கூறுகின்றான். அவனது கூற்றை மெய்ப்பிக்கும் இரு வசனங்கள் தருக.
   4) இவ்வேலைத்திட்டம் வெற்றியளித்துள்ளதா என்பதை காரணத்துடன் கூறுக.

04. 200cm உயரமும், 98cm அகலமும் உடைய செவ்வக வடிவமும் அரைவட்ட வடிவமும் கொண்ட பலகையிலான கதவு உருவில் காட்டப்பட்டுள்ளது.
   1) கதவின் முழு உயரம் என்ன?
   2) செவ்வக வடிவ பகுதியின் பரப்பளவு யாது?
   3) அரைவட்ட வடிவ பகுதியின் பரப்பளவு யாது?
   4) $900cm^2$ பரப்பளவிற்கு 100ml தீந்தை தேவைப்படும். எனின், கதவின் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் தீந்தை பூசுவதற்கு தேவையான தீந்தையினளவு யாது?




05. ஒரு குறிப்பிட்ட நாளில் 1 மணித்தியாலத்தில் தபால் அலுவலகத்துக்கு வருகை தந்தவர்கள் பற்றிய விவரம் வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




   1) முத்திரை வாங்கியோரின் எண்ணிக்கை 40 எனின், X இன் பெறுமானம் யாது?
   2) கடிதம் அனுப்பியோர் 25பேர் எனின், y இன் பெறுமானம் யாது?
   3) தபால் அலுவலகத்திற்கு வந்தவர்களின் மொத்த எண்ணிக்கையைக் காண்க.
   4) தந்தி அனுப்பியோர் T எனவும், முத்திரை வாங்கியோர் S எனவும் கொண்டால், T இற்கும் S இற்கும் இடையிலான ஒரு தொடர்பை தருக.
   5) இவர்களில் ஒருவரை எழுமாற்றாக தெரிவுசெய்தால் அவர் தந்தியை மட்டும் அனுப்புபவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபக்கம் பார்க்குக....

# தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் கபடத்தனம் எப்போது முடிவுக்கு வரும்?

**இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு, ஒற்றுமை, நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டு சமாதானம் நிலைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக அவையனைத்தையும் மூழ்கிப் போகச் செய்யும் நிலைப்பாடே நாட்டில் அரங்கேறி வருகிறது. அந்த நிலைப்பாடு உடனடியாக மாற்றமுறச் செய்ய வேண்டியுள்ளது என்பதையும், வடபுலத்திலும் - கிழக்கிலும் தமிழ் மக்களது காணி நிலங்கள் அடாத்தாகக் கைப்பற்றிக் கொள்ளப்படும் செயற்பாடு அரங்கேறி வருவதையும் சுட்டிக்காட்டும் விதத்தில் அமைகிறது இக்கட்டுரை.**

**ஐ.தே.கட்சியின் முன்னணி அரசியல் பிரமுகரான எஸ்.பி.திஸநாயக்கவின் கருத்து வெளிப்பாடாக அமையும் இக்கட்டுரை, 'இருதின' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.**

**அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**


எஸ்.பி.திஸநாயக்கா

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களும் இலங்கையர்களே. சிங்கள மக்களுக்கு அமைந்துள்ள உரிமைகள் அவர்களுக்கும் உரித்துடையதே. இத்தமிழ் மக்கள் இந்தியர்கள் அல்லர். அவர்கள் இந்தியர்களேயெனின் அதேபோன்று சிங்களவர்களாகிய நாமும் கூட இந்தியர்களே.

பண்டைய இலங்கையில் வாழ்ந்துள்ள ஆதிக் குடிகளான யக்ஷ, நாக, இராட்ஷச, தேவ கோத்திரங்களின் ஒரு பங்கினர் சிங்களவர்களாக இருந்துள்ளதோடு இன்னொரு பங்கினர் தமிழர்களாக இருந்துள்ளனர். இந்த இரு தரத்தினருக்குமே பெருமளவில் இந்தியர்களுடன் இரத்த உறவு இருந்துள்ளது. அதாவது இந்தியக் கலப்பு இருந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் இத்தமிழ் மக்கள் தமிழ் பௌத்தர்களாகவே வாழ்ந்துள்ளதோடு, சிங்கள மக்கள் சிங்கள பௌத்தர்களாகவே வாழ்ந்துள்ளனர். கி.பி.800இற்கு பின்னர் தென்னிந்தியாவில் பௌத்த சமயம் அஸ்தமித்துப் போனதன் காரணமாகத் தென்னிந்தியாவிலும் அதற்கு சமமான விதத்தில் இந்நாட்டில் வாழ்ந்த தமிழர்களும் கூட இந்துக்களாக மாறினர்.

சிங்களவர்களென்றாலும், தமிழர்களென்றாலும், பௌத்தர்களென்றாலும், இந்துக்களென்றாலும் அவர்கள் இலங்கையென்ற இந்நாட்டுக்கு உரித்துடையோரேயாவர். தமிழ்மக்களென்போர் இந்நாட்டின் இரண்டாமிடத்தை வகிப்பது குடியுரிமையினாலோ மற்றும் உரிமைகளினாலோ அல்ல. சனத்தொகை என்ற ரீதியில் மட்டுமே அவர்கள் இரண்டாம் இடத்தை வகிக்கின்றனர். எனவே, அவர்கள்இரண்டாந்தரக் குடிமக்கள் அல்லர். அவர்களது குடிசார் தன்மை குறைந்ததொரு குடிசார் தன்மை கொண்டதல்ல.

ஹெல உறுமய தரப்பின் ஒருசில மந்த புத்தியுள்ள கடும்போக்குவாதிகளைத் தவிர்ந்த வேறு ஒருவரும் தமிழ் மக்களுக்கு இலங்கையில் எந்தவொரு உரிமையும் இல்லையெனக் கூறாதிருக்கும் நிலையொன்றினுள் தமிழ்மக்கள் இந்தியர்களே எனத் தொடர்ந்தும் முத்திரை குத்தப்படுமானால் எமது நாட்டின் இனச்சிக்கலுக்கு ஒருபோதும் தீர்வு எட்டப்பட இயலாது போகக்கூடும். எப்போதும் நாமே வெளிப்படுத்தி நிற்கும் இந்த இந்தியர்களுக்காக, இந்தியாவும் கூட எமது நாட்டின் பிரச்சினைகளில் தலையிட வேண்டி நேரும்.

## சிங்களவர்களுக்குரிய அத்தனை உரிமைகளும் ஏனைய இனங்களுக்கும் கிடைக்க வேண்டும்

### எல்லோருக்கும் சம உரிமை

எனவே, ஆரம்பம் முதலே சிங்கள மக்களுக்கு உரித்தாகியிருந்துள்ள உரிமைகள் அவ்விதமாகவே இலங்கையர்களான தமிழ், முஸ்லிம், பறங்கியர் மற்றும் மலே இன மக்களுக்கும் உண்டு என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம்.

அதேபோன்று, எமது நாட்டின் பௌத்த மக்களுக்கு இருக்கும் உரிமைகள் அவ்விதமாகவே இந்து, கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் மக்களுக்கும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம். அது நேர்மைத்தன்மையுடன் ராஜதந்திர மட்டத்தில் போன்றே மதத் தலைமைத்துவ மட்டத்திலும் கூட ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. கடும்போக்கு இனவாதிகள் போன்றே கடும்போக்கு மதவாதிகளும் இனத்துரோகிகள், தேசத் துரோகிகளாக சமுதாயத்தால் ஏற்கப்பட வேண்டியுள்ளது.

எமது நாடு முகம்கொடுக்க நேர்ந்திருந்த துரதிஷ்டவசமான யுத்தத்துக்கு இந்த நாட்டின் அனைத்துக் கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளன. அனைத்து இனங்களும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளன. அனைத்து மதங்களும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளன. இந்நாட்டின் கற்றறிந்த அனைவரும் புத்திஜீவிகள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளனர். வர்த்தகச் சமூகமும் கூட அவ்விதமாகவே பொறுப்புக்கூற வேண்டியுள்ளது.

அப்பாரிய அனர்த்தத்துக்கு - அழிவுகளுக்கு குறைந்தோ கூடிய விதத்திலோ நாட்டின் ஒட்டுமொத்தப் பொதுமக்களும் பொறுப்புக் கூறவேண்டியுள்ளது.

### சிங்கள மக்களுக்கு ஏனைய இனங்கள் அடிமையா?

சிங்கள மக்கள், பெரும்பான்மை மக்கள் என்பதால் ஏனைய இனங்கள் சிங்களவர்களுக்கு அடிபணிந்தே நடந்து கொள்ளவேண்டியுள்ளதாக எண்ணமிடுவதானது பாரதூரமான தவறாகும். - சட்டத்துக்கு முரணான எண்ணக்கருவாகும். அந்த எண்ணம் மிகப் பாரதூரமான விதத்தில் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தை மீறுவதாகும். எமது நாட்டின் பெருமளவிலான மக்கள் பௌத்தர்களே என்பதால் ஏனைய அனைத்து மதங்களும் பௌத்தர்களுக்கு அடிபணிய வேண்டியுள்ளதென எண்ணமிடுவதும்கூட அந்த அளவுக்குப் பாரதூரமானதொரு தவறாகும். அது சட்டத்துக்கு முரணான - நியாயத்துக்கு விரோதமான எண்ணமாகும். அது சர்வதேச சட்டத்துக்கும் முரணானதாகும்.

பௌத்தத்தைப் போற்றி நிற்கும் எமது அறிவுசார் பௌத்த குருமார்கள் ஒருபோதும் இவ்வாறு எண்ணுவதில்லை. எமது கௌரவத்துக்கும் பெருமதிப்பிற்குமுரிய பௌத்த சீலத்தின் மகா நாயக்க தேரர்களும் கூட அவ்விதமாக எண்ணுவதில்லை. எமது நாட்டின் அறிவுசார்ந்த மனிதாபிமானம் மிக்க அரசியல்வாதிகளும்கூட அவ்விதம் எண்ணுவதில்லை. அத்தகைய கருத்தை வெளிப்படுத்துவதில்லை. இருந்தபோதிலும், குறிப்பிட்டுக்கூறக் கூடிய சிலபல கடும்போக்குவாதிகள் இந்த அனைத்து இனங்களிடையிலும் உள்ளனர். நாமனைவருமே இந்தக் கடும்போக்குவாத துன்மார்க்கத் தரப்பினரை அருவருப்புடன் நோக்கி கண்டித்துச் சிறுமைப்படுத்த வேண்டியுள்ளது.

நாம் முகம் கொடுத்திருந்த 39 ஆண்டுகால சாபக்கேடான - பாபச் யுத்தம் காரணமாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைக் கைவிட்டுச் சென்றுள்ள எமது தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்களென்போரின் எண்ணிக்கை மிக விசாலமானதாகும்.

இந்த நாட்டைக் கைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளோரும் மிக விசாலமான தரப்பினராவர். இத்தரபினருள் தமிழ் மக்கள் பெருமளவினராவர். இவர்கள் தமது காணி நிலங்கள், வீடு வாசல்கள் என்ற அனைத்தையும் கைவிட்டே இந்நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

வடக்குக் கிழக்கைக் கைவிட்டு வேறு பிரதேசங்களுக்குச் சென்றுள்ள தமிழ் மக்களுக்குத் தமது காணி நிலங்கள், வீடு வாசல்களை, ஏன், கிராமங்களையே விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அர்ப்பணித்துவிட வேண்டி நேர்ந்துள்ளதையும் நாம் மறக்கக்கூடாது.

சிற்சில காணி நிலங்கள், செய்கை வயல்கள், தோட்டம் துரவுகள் வேற்றுத் தரப்புகளால் அடாத்தாகக் கைப்பற்றிக் கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இன்று இந்நாட்டில் யுத்தம் முடிந்து விட்டுள்ளது. உலகம் முழுமையிலும் பரந்துவிட்டு வாழ்ந்து வரும் இந்நாட்டின் தமிழ் மக்கள் தமக்குச் சொந்தமான வீடு வாசல்கள், காணி நிலங்கள் போன்ற சொத்துக்கள் மீளப்பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் பார்த்திருக்கின்றனர்.

தான் பிறந்த மண்ணை நேசிப்பதென்பது அம்மண்மீது ஆசைப்படுவதென்பது மனிதரிடத்தே இயல்பாய் அமைந்த குணவிசேடமாகும். அது எவரொரவருக்கும் பொதுவான ஏது நிலையாகும்.

### வெளிநாடு வாழ் தமிழர்கள் இலங்கை வர அச்சம்

இருந்த போதிலும், வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் எமது நாட்டில் கால் பதிப்பதற்குப் பெரிதும் பீதிவயப்படுகின்றனர். இப்பீதி நிலைக்கு ஏதுவாக அமையும் சில காரணிகளை இங்கு குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. அதாவது 1983ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரங்களின்போது, தமது சொத்துச் சுகங்கள், வீடு வாசல்கள் என்பவற்றை இழந்து, உயிரிழப்புக்களையும் கூடச் சந்தித்து புலம்பெயர்ந்து இன்று ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வருவோர் தமக்கேற்பட்ட அவலங்கள் காரணமாக மனக் கசப்பினால் கோபாவேஷமுற்று விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களாகச் செயற்பட்டிருக்கக் கூடும். வேறு விதங்களில் உதவி ஒத்தாசைகளை புரிந்திருக்கவும் கூடும். அவ்விதம் செயற்பட்டிருந்தாலும் இல்லாதிருப்பினும், அவசியப்படின் எந்தவொரு நாடும் பொய்யான தகவல்களை வழங்கி, இலங்கையில் கால்பதிக்கும்போது அவர்களைக் கைதுக்குள்ளாக்கிவிட முடியும். அதன் காரணமாக இன்றைய அளவில் புலம்பெயர்ந்து சென்றுள்ள அந்த மக்களுள் எவரொருவரும், இலங்கைக்கு வரக்கூடுமெனக் கருத இயலாது. இருந்தபோதிலும், அவர்கள் தமது பாரம்பரிய விடுவாசல்களை, காணி நிலங்களை மீளப் பெறுவதில் ஆர்வத்துடனேயே உள்ளனர். அவர்கள் அவற்றை பெரிதும் நேசிப்பதும் மதித்துப் போற்றுவதும் புலப்படுகிறது.

இதனிடையே, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பெறுமதிமிக்க காணி நிலங்களை அடாத்தாகக் கைப்பற்றிக் கொள்ளும் செயற்பாடொன்று அரங்கேறி வருவதாகத் தகவல்கள் பரவி வருகின்றன. எமக்கு அறிமுகமான - வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தமது காணிகளை அடாத்தாக வேறு நபர்கள் கைப்பற்றிக் கொண்டுள்ளதாக எம்மிடத்தில் கூட முறைப்பட்டு நிற்கின்றனர். இத்தகைய முறைப்பாடுகள் தினம்தினம் அதிகரித்தவண்ணமுள்ளன.

உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் இயற்கை எழில் நிறைந்த பசுமையான நிலப்பிரதேசங்கள் இவ்விதமாகப் பெருமளவில் கைப்பற்றிக் கொள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலைப்பாடு உண்மைதானெனின், அது, பெருத்த துரதிஷ்டமொன்றின் மேலுமொரு ஆரம்பமேயாகும். இந்நாட்டில் மீளவும் யுத்தமொன்று உருவாக இடமளிக்காத விதமாக நாட்டின் அனைத்து இனங்களுக்கிடையிலும் நம்பிக்கையையும், பாதுகாப்பையும், புகலிடத்தையும் மற்றும் சமமான கவனிப்பையும் சமமான வாய்ப்பு வசதிகளையும் நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ள இச்சந்தர்ப்பத்தில் இந்த நாட்டுக்கு வெளியே வாழ்ந்து வரும் தமிழ் மக்களது காணி நிலங்கள் அபகரித்துக் கொள்ளப்படுமானால் அது பாரதூரமான தவறொன்றேயாகும்.

இதுபற்றி அரசு உடனடிக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இவ்விதமான சில கருமங்களின் பின்புலத்தில் அங்கம் வகிக்கும் சில அரசியல் வாதிகள் செயற்படுவார்களாயின் இது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் மட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டு தகுந்த பரிகாரம் காணப்பட வேண்டியுள்ளது. அதேபோன்று இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்பைச் சேர்ந்த ஒரு சிலரும் கூட இதுபோன்ற கருமங்களின் பின்புலத்தில் செயற்படுவார்களாயின் இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் என்ற மட்டத்தில் இது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு அந்த நிலைப்பாடு நிர்வகிக்கப்பட வேண்டியுள்ளது.

பலதரப்பட்ட அவலங்கள் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிச்சென்று நாட்டுக்கு வெளியே வாழ்ந்துவரும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் அவர்களது காணி நிலங்கள், வீடு வாசல்கள், வயல் நிலங்கள், மீள உரித்தாகும் விதத்திலான அனைத்து வாய்ப்புக்களும் திறந்துவிடப்பட வேண்டியுள்ளது. அது இன்றைய அரசின் முக்கிய பொறுப்பும் கடப்பாடுமாகிறது. அத்தோடு இனங்களின் ஒற்றுமைக்கும், நம்பிக்கையைக் கட்டியெழுப்பப்படுவதற்கும் அது அத்தியாவசியமானதாகும். ★

**தமிழில் : சரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு

எதிர் பார்ப்புக்கள் இன்றி - பழகினோம்
பல நாள்கள் முகம் தெரியாமல்
சிரித்துப் பேசி விட்டு - இன்று
விடைபெறும் தருணத்தில்
ஏனோ சந்தோசங்களும் சிரிப்புகளும்
எங்கோ? ஒளித்துக்கொண்டன!
வசந்த காலம் ஓர் நாள் மீண்டும்
வரும் என்ற நம்பிக்கையில்!
தீராத நணங்களும் ஊமைக் காயங்களும் கண்ணீருடன்
கரைந்து போக! இந்த பிரிவிலும்
ஓர் சந்தோசம் நான் இறந்தாலும்
உன்னுடன் வாழ்வேன் என்ற திடந்தான்!

ப.தீபதர்சினி,
மாவிட்டபுரம்.



# நீயே என் சுவாசம்

பனி சிந்தும்
செவ்வந்தியே!
எழிலின் இமயமே!
என் நினைவினில்;
நிறைந்து விட்டாய்!

நிலவே...... நீ
கனவின் உணர்வாகி
வசந்தம் தந்து;
வாழ்வின் துணையாகி
வா!

கவிதை நீயே;
தென்றல்!
அதுவே என்
உள்ளத்தின்
உதிரத்தின்
இதயத்தின் சுவாசம்

இ.கோபிரூபன்
தென்புலோலியூர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மின்னல்" ஏற்படுவது பற்றிய சில தகவல்கள்

மின்னல் என்பது, மின் ஊட்டம் பெற்ற காற்று மண்டலத்தின் குறுக்கு இணைப்பில் ஏற்படும் மின் அதிர்ச்சி

அதனால் மின்னலானது மேகங்களில் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் கிடைமட்டமாகவும் பாயும்.

மின்னல் ஒரு விநாடிக்கு, சுமார் 1600 ஓட் வேகத்தில் பாயக்கூடியது. அதைச்சுற்றியுள்ள, காற்றை 33,000$^{0}$C அளவுக்கு சூடாக்குகின்றது. இக்காற்று விரிவடைந்து ஒன்றோடு ஒன்று பலத்த சத்தத்துடன் மோதிக் கொள்கின்றது.

இதைத்தான் இடி மின்னல் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒளியின் வேகம் விநாடிக்கு 2,97,600.ஓட்.ஒலியின் வேகம் விநாடிக்கு 330m ஒரேசமயத்தில் நிகழ்ந்தாலும் மின்னலுக்குப் பின்னரே இடிச்சத்தம் கேட்பது இதனால் தான்.

அமெரிக்காவில் பெஞ்சமின் ∴ பிராங்க்லின் தான் மின்னல் உண்டாவதற்கு மின்சாரம் தான் காரணம் என்று கண்டுபிடித்தார். இவர் ஒருமுறை இடியும், மின்னலும் இருந்த ஒரு சமயத்தில் ஒரு காற்றாடியை உயரத்தில் பறக்கவிட்டு, கையில் உள்ள நூலில் ஒரு சாவியையும் இணைத்தார். மின்னல் மின்னியதும் அவருக்கு சிறிய மின் அதிர்ச்சி ஏற்பட்டதை உணர்ந்தார்.

துப்பாக்கிக் குண்டு பாய்வதைப் போன்று 30,000 மடங்கு வேகத்தில் பாய்கிறது மின்னல். மின்னல்களில் 85 சதவீதம் நிலத்தின் மீது தான் வீழ்கின்றன. கடலில் வீழ்வது குறைவு.

மின்னலில் நைதரசன் பெருமளவில் இருக்கின்றது. மின்னல் இல்லாவிட்டால், தாவர வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படும். மின்னல் ஒரே இடத்தைப் பல தடவைகள் தாக்கக்கூடும். சுவிற்சர்லாந்தில் உள்ள ஒரு மலையை 100 தடவை மின்னல் தாக்கியது.

பூமியின் மத்திய ரேகைக்கு அருகில் உள்ள நாடுகளையே மின்னல் அதிகமாகத் தாக்குகின்றது.

இடிதாங்கி என்னும் "மின்னல் கடத்திகளை" உயரமான கட்டடங்களில் பொருத்திவிட்டால் அதன் வழியாக மின்னலின் மின்சக்தி, பூமிக்குப் போய்விடும். கட்டடங்களைப் பாதிக்காது. இதைக் கண்டுபிடித்தவரும் பெஞ்சமின்∴ பிராங்க்லின் தான். விமானம் மேகங்களுக்கு மேலாகப் பறப்பதால் மின்னல், இடி, மழையின் போது அதற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. விமானத்தில் இருந்து பார்த்தால் வானத்தில் "வானவேடிக்கை" நிகழ்வதைப் போன்று இருக்கும்.

மரங்களில் 'ஓக்' மரத்தின் மேல் தான் அடிக்கடி மின்னல் தாக்குவதைக் கண்டறிந்துள்ளார்கள். மின்னல் தாக்கி மரங்கள் அழியாமல் இருக்க சிங்கப்பூரில் முக்கிய இடங்களில் மரங்களில் இடிதாங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

தொகுப்பு: ஜெயரூபன்.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது சட்டத்திருத்தமும் அதிகாரப் பகிர்வுமே தீர்வாக அமையுமென சகலரும் ஏற்கிறார்கள்

## தென்னிலங்கை ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முதல் படியாக 13ஆவது சட்டத்தையும் அதற்கு மேலான அதிகாரங்களையும் பகிரும் நடைமுறைச் சாத்தியமான யோசனையை முன்வைத்துள்ளோம்.

இந்த யோசனையே நடைமுறைச் சாத்தியம் என பல்வேறு தரப்பினரும் ஏற்று வருகின்றனர். இதற்கு இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் ஆதரவு உண்டு.

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு [illegible]வித்தார்.

தேசி[illegible]தானப் பேரவையின் தலைவர் [illegible] பெரேரா தலைமையிலான தென்[illegible]கை ஊடகவியலாளர் குழுவினர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்து[illegible] அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா [illegible]வர்களைச் சந்தித்துத் தற்போதைய யாழ்.குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர். அப்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பாகும் என்றும் அதனை அன்றைய தமிழ் தலைமைகள் சரியாகப் பயன்படுத்தத் தவறியதாகக் குற்றஞ்சாட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தலைமைகள் தொடர்ச்சியாக எதிர்ப்பு அரசியலை மேற்கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர் தென்னிலங்கை அரசியலிலும் நடவடிக்கைகளிலும் குணாம்ச ரீதியாகப் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அத்தகைய சூழ்நிலையிலும் தமிழ்த் தலைமைகள் மேற்கொண்ட கண்மூடித்தனமான எதிர்ப்பு அரசியல், தமிழ் மக்களுக்குப் பெரும் பாதகமாக அமைந்ததாகவும் தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு முதற்படியாக 13ஆவது திருத்தச் சட்டத்தையும் அதற்கு மேலான அதிகாரங்களையும் பகிரும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண் டும் என்னும் நடைமுறைச் சாத்தியமான கோரிக்கையை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்த ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தற்போது அதுவே நடைமுறைச் சாத்தியமானது என்பதைப் பல்வேறுதரப்பினரும் உணர்ந்து வருவதா கவும் இதற்கு இந்தியா வினதும் சர்வதேசத்தினதும் ஆதரவு உண் டென்றும் தெரிவித்தார்.



தென்னிலங்கை மக்களும் அரசியல்வாதிகளும் புலிகளின் நடவடிக்கைகளைக் காரணம் காட்டி தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தட்டிக்கழித்தது போலன்றி எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்றும் அதற்கான சூழ்நிலை தற்போது தென்னிலங்கையில் உருவாகி வருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார். (1)

# வங்கிகள், வீடுகளில் கொள்ளை நடத்திய ஐவர் குழு சிக்கியது

கொழும்பு, நவ. 10

வங்கிகள், வீடுகள் பலவற்றில் நீண்ட காலமாகக் கொள்ளையிட்ட ஐவர் அடங்கிய கும்பல் ஒன்று கொஹவல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கும்பலின் பிரதான சூத்திரதாரி, எல்பிட்டியவில் அவரது கும்பலின் இல்லத்தில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட போது இவரிடமிருந்து 20 இலட்ச ரூபா பெறுமதியான், உருக்கப்பட்ட தங்கக் கட்டிகள், ஆயுதங்கள், ஓட்டோ ஒன்று, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பறப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபர் 2003 ஆம் ஆண்டு பெல்லன்வில் நகரில் நடைபெற்ற கொலையொன்றின் பிரதான சந்தேக நபரெனவும், இவருக்கெதிராக நீதிமன்றத்தின் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததெனவும் அதனைத் தவிர்ப்பதற்காக ஆறு வருடங்கள் வெளிநாட்டில் தலைமறைவான பின்னர் கடந்த ஏப்ரல் மாதம் இவர் நாடு திரும்பியுள்ளார் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இக்கும்பலில் உள்ள முன்னாள் கடற்படை சிப்பாயொருவர், கொள்ளை நடத்தப்போகும் இடத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வேவு பார்த்து மற்றவர்களுக்குத் தகவல் கொடுப்பவர் எனவும் சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட தீவிர விசாரணை யின் பின்னர் குறிப்பிட்ட கடற்படை சிப்பாயும் ஏனைய நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் வெள்ளியன்று

யாழ்ப்பாணம், நவ.11

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 1மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

அண்மையில் நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி முன்பள்ளிகளில் இணைந்த சிறார்களின் எண்ணிக்கை, கலைவிழா நடத்துவது பற்றிய விவரம் ஆகியவற்றுடன் வருகை தருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (50- 207)

## பழைய இரும்பு வகைகள் கொழும்புக்கு ஏற்றுமதி

வண்ணை, நவ.11

யாழ்ப்பாணத்தில் இருந்து மீண்டும் பழைய இரும்புகள் பெருமளவில் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ். மானிப்பாய் வீதியில் ஐந்து சந்தியை அண்மித்த பகுதிகளில் குடாநாட்டின் சகல இடங்களில் இருந்தும் எடுத்து வரப்பட்டு மலை மலையாகச் சேமிக்கப்பட்டிருந்த பழைய இரும்பு வகைகள் நிறுத்து பாரவூர்திகளில் ஏற்றப்படுகின்ற வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதேவேளை, ஏ-9 வீதியூடாகக் கொண்டு செல்வதற்கு அனுமதி இதுவரை கிடைக்காததால் பழைய இரும்புகள் வீதி ஓரங்களில் குவிக்கப்பட்டு போக்குவரத்துக்குப் பெரும் குந்தகமாக இருந்து வந்ததும் சுட்டிக்காட்டப்படுகிறது. (50- 160)

## 'ஞானச்சுடர்' வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாணம், நவ.11

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படுகின்ற ஞானச்சுடரின் ஐப்பசி மாதமலர் வெளிவந்துள்ளது.

சைவசமயம்சார் கட்டுரைகள், செய்திகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தாங்கி 'ஞானச்சுடர்' வெளிவந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (50- 204)

# வாசகர் திருமுகம்

## வலி.வடக்கு மக்கள் 20 வருடங்களாக அனுபவிக்கும் துன்பங்கள்

வலி.வடக்கு வாழ்மக்கள் கடந்த சுமார் 20 வருடங்கள் பாரிய இடம் பெயர்வினால் வடமராட்சி, தென்மராட்சி, வன்னியென்றும் சிலர் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளிலும் இன்னும் சிலர் கனடா, அவுஸ்ரேலியா போன்ற தேசங்களிலும் வாழ்ந்து வருவதை அறிவோம். போக முடியாதவர்கள் இங்கு உள்ள இடங்களில், நண்பர்கள், உறவினர்கள், மற்றும் புலம்பெயர்ந்து சென்றவர்களின் இல்லங்களிலும் அரைகுறையாக திருத்தப்பட்ட வீடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

தொழில்கள், வருமானங்கள் எல்லாம் முடிக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டில் உள்ள, சொந்தபந்தங்கள் அனுப்பும் உதவிகளில்தான் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அரச நிவாரணமாகக் கிடைக்கும் உலர் உணவையும் மற்றும் 5000,2000ரூபாவையும் விட வேறு எந்தக் கொடுப்பனவுகளும் இதுவரை இல்லை. இழந்த எங்கள் காணிகளுக்கோ பொருள்களுக்கோ நஷ்டஈடு கூட இல்லை. கொடுக்கும் உலர்உணவு நிவாரணங்கள் கூட சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. சிலவேளைகளில் கொடுக்கப்படும் பொருள்கள், தரம் குறைந்தவையாகவும் நிறை குறைந்தவையாகவும் இருக்கும். இவற்றை எல்லாம் யார் பார்ப்பது. ஏதோ வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி வாழ வேண்டியநிலைதான்.

இப்போது வன்னியில் இருந்தும் மக்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். இதனால் பாரிய நெருக்கடி உண்டாகும். மேல் குறிக்கப்பட்ட நிலையில் உள்ள எம்மைப் போன்றவர்களுக்கு பலவிதமான நோய்கள் உண்டாகின்றன. அவை என்னவென்றால் மனவிரக்தி, ஒரு விதபயம், அச்ச உணர்வு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்பட்டு வைத்தியமனைக்குச் சென்றால் அங்கே முக்கியமான மருந்துகள் கிடைப்பதில்லை. அவைகளை தனியார் மருநதகங்களில் யானைவிலை, குதிரைவிலை என்று கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.

இவற்றிற்கு யார் காரணம், மக்கள் காரணமா? அல்லது அரசின் செயல்திறமின்மை காரணமா? ஒரு சில நாள்களின் முன்பு பத்திரிகையில் அறிவித்திருந்தார்கள், வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலையத்தில் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், அதற்குரிய ஆவணங்களுடன் தெல்லிப்பளையில் உள்ள செயலகத்திற்கு வரும்படி ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் எல்லோரும் தங்களுடைய ஆவணங்களுடன் சென்றோம். அங்கு இருந்த அதிகாரிகள் என்ன கூறினார்கள் என்றால், விமான நிலையத்திற்கு அண்மையில் உள்ளவர்களின் பெயர் பட்டியல் தான் வந்துள்ளது என்றும், மிகுதி வரவில்லை என்று கூறிவிட்டார்கள். கடந்த சுமார் இருபது வருடகாலமாக காத்திருந்த மக்களுக்கு இது பெரிய கசப்பான அனுபவமாகிவிட்டது. அரச அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரச அதிகாரிகள், மக்களை, மக்களாகப் பார்க்காமல், மாக்களாகப் பார்க்கிறார்கள் போல் தெரிகிறது.

எனவே அரச அதிபர் நிர்வாகத்திறமையுள்ள சிறந்த அதிகாரி என்று நாம் அறிந்[illegible]க்கு மக்கள் சார்பாக இவ்விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்[illegible] பணிவன்புடன் வேண்டுகிறேன்.

3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். ஜே.ஜே.ஏ. யோகரெட்ணம்.

**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சாவல், முட்டை என்பன மிகக் குறைந்த விலையில் எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக்கழிவுகள் உண்டு.

தொடர்பு: மலிரி பாம் சென்றர்
61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி.
தொ.பே.: 217912783 (90851)

**காணி விற்பனைக்கு**

அளவெட்டி தெற்கு, தம்மளையில் மலைவேம்படிச் சந்தைக்கும் அருணோதயக் கல்லூரி ஆரம்ப பாடசாலைக்குமிடையில் மேற்குப் புற வீதியில் 100 யார் தூரத்தில் தனிக்கிணற்றுடன் கூடிய மேட்டுக்காணி நிலப்பரப்பு 08உம் குளி 11 3/4உம் உடன் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் உகந்தது. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல: 021 321 1754 (90851)

**காணி விற்பனைக்குண்டு**

36/4, இராமநாதன் வீதி, கலைவாணி சனசமூகநிலைய ஒழுங்கையில் அமைந்துள்ள 1¼ பரப்புக் காணியுடன் கிணறும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
திருமதி பாலசுந்தரம் கருணாவதி ( (நுணா) (90799)

**Book Keeping, Audit சேவை**

யாழ்.நகரில் Book Keeping, Audit மற்றும் VAT உட்பட சகல வரிசேவைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 077 3746884, 071 4603362 (சி/561473)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்றர்
(90711) 19, முருகேசர் லேன், நல்லூர்.

**மணமகள் தேவை**

M.Sc. முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian PR உள்ள சைவ சமயம், 29 வயது, ஏழுச்செவ்வாய், பூசநட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு வைத்தியத்துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.
தொடர்பு:.0713163508 (90672)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திரு.திருமதி கிருஷ்ணசாமி - புவனேஸ்வரி தம்பதியரின் புதல்வனும் யா/மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவனுமாகிய

செல்வன் கி.தனுஷாந்

தரம் -05, 2009ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமைக்குப் பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் மேன்மேலும் கல்வியில் பல வெற்றிகள் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/மட்டுவில் வடக்கு அ.த.க.பா., சாவகச்சேரி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம். (சி/562228)

**VACANCY**

JOIN WITH THE LEADERS IN ICT INDUSTRY

கிளை விரிவாக்கமும், புதிய கிளை ஆரம்பிப்பதற்குமான பதவி வெற்றிடங்கள்

- COMPUTER INSTRUCTOR - Male / Female - 3 Positions
- ASSISTANT LECTURER - Full Time - 2 Positions
  Subject Area : Hardware, Java, AutoCAD, Net
- ASSISTANT LECTURER MULTIMEDIA - 2 Positions
  Fluent knowledge of Pagemaker, Coreldraw, Photoshop, Premier, Soundforge, 3D Max
- STUDENT COUNSELOR - Female - 3 Positions
- CENTRE CO-ORDINATOR - Male - 2 Positions
- CENTRE MANAGER - Male - 2 Positions

• Minimum qualifications : good pass in G.C.E A/L, English fluency, Ability to teach batch and Individual classes, Should hold a recognised IT/HR Diploma.

Apply with in 7 days

ASIAN-CSC COMPUTER EDUCATION
2G, Stanley Road, Jaffna.

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2010 & 2011
கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள் & English
* Gr.1 முதல் O/L வரை
* Gr. 6 to 11 Eng.Medium
* Gr.10, 11 Eng.Lit.
* புலமைப் பரிசில் 4 (ஞாயிறு பரீட்சைகளுடன்)
* Spoken English

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் - II (புதிய பாடத்திட்டம்) 32-T-II

* பகுதி A இலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி B இலிருந்து ஐந்து வினாக் களையும் தெரிந்தெடுத்துப் பத்து வினாக்களுக்கு விடை தருக.
* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

## பகுதி - A

* எவையேனும் 5 வினாக்களுக்கு விடை தருக.

01. a) நகரசபை தமது பிரதேசத்திலுள்ள வீடுகளுக்கு வருடத்திற்கு 6% வரி அற விடுகின்றது.
    1. ரூபா 360,000 பெறுமதியுள்ள வீட்டுக்கு செலுத்த வேண்டிய வரிப்பணம் எவ்வளவு?
    2. காலாண்டுக்கு செலுத்த வேண்டிய வரி யாது?

    b) 15% பங்குலாபம் வழங்கும் கம்பனி ஒன்றில் ரூபா 10 பங்குகளை ரூபா 12 வீதம் வாங்குவதற்கு ரூபா 60,000 முதலீடு செய்யப்படுகின்றது.
    1. பங்குகளின் பெயர் மாத்திரை பெறுமானம் யாது?
    2. வருட முடிவில் கிடைக்கும் வருமானம் யாது?

02. a) $Y = 2x^2 - 3x - 2$ எனும் வரைபை வரைவதற்கு பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|
| y | 12 | 3 | -2 | -3 | ..... | 7 |


    1. x = 2 எனின், y இன் பெறுமானம் யாது?
    2. பொருத்தமான அளவிடையை எடுத்து வரைபை வரைக.

    b) வரைபைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
    2. திரும்பற் புள்ளியின் ஆள்கூறு யாது?
    3. சார்பு மறையாகும் x இன் பெறுமான வீச்சை எழுதுக.
    4. $2x^2 - 3x - 2 = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் மூலகங்களை எழுதுக.

03. a) தோடம்பழம் 3இனதும் மாம்பழம் 5இனதும் விலை ரூபா 55 ஆகும். தோடம் பழம் 6இனதும் மாம்பழம் 8இனதும் விலை ரூபா 100 ஆகும்.
    1. தோடம்பழம் ஒன்றின் விலை ரூபா x எனவும், மாம்பழம் ஒன்றின் விலை ரூபா y எனவும் கொண்டு இரு சமன்பாடுகளை எழுதுக.
    2. மேற்படி சமன்பாடுகளைத் தீர்ப்பதன் மூலம் மாம்பழம் ஒன்றினதும், தோடம் பழம் ஒன்றினதும் விலையைக் காண்க.

    b) தீர்க்குக. $x^2 - 2x - 15 = 0$


04. ஏவுகணை ஒன்று தொடக்கத்தில் 20km நிலைக்குத்தாக மேலே செல்கின்றது. பின்னர் அது நிலைக்குத்துடன் $32^o$ சாய்வில் 40km தூரம் செல்கின்றது.




    1) தரப்பட்டுள்ள பரும்படி படத்தை பிரதிசெய்து தரவுகளை அதில் குறிக்குக.
    2) ABஇன் பெறுமானத்தை கிட்டிய முழு எண்ணிற் காண்க.
    3) BCஇன் பெறுமானத்தை கிட்டிய முழு எண்ணிற் காண்க.
    4) கோணம் CAD இன் பருமனைக் காண்க.

05. a) காரணிப்படுத்துக. $a^3 - 4a/25$

    b) செங்கோண ஒன்றின் செம்பக்கத்தை உள்ளடக்கும் பக்கம் ஒன்றின் நீளம் மற்றையதை விட 3cmஇனால் கூடுகிறது. முக்கோணியின் பரப்பளவு $32cm^2$ ஆகும். ஒரு பக்கத்தின் நீளம் x எனக் கொண்டு அதன் பரப்பளவிலிருந்து x இன் ஓர் இருபடிச் சமன்பாட்டை உருவாக்குக. வர்க்க நிறைவாக்கல் மூலம் அல்லது வேறு முறையினைப் பயன்படுத்தி அச்சமன்பாட்டை தீர்த்து x இன் பெறுமானத்தை முதலாம் தசமதானத்தில் தருக.




06. கோழிப்பண்ணை ஒன்றில் ஒவ்வொரு நாளும் விற்கப்படும் முட்டைகளின் எண்ணிக்கை பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

| விற்கப்படும் முட்டைகளின் எண்ணிக்கை | 100-105 | 106-110 | 111-115 | 116-120 | 121-125 | 126-130 | 131-135 |
|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 01 | 03 | 14 | 28 | 18 | 09 | 02 |

    1) இப்பரம்பலின் ஆகார வகுப்பை எழுதுக.
    2) ஒரு நாளில் விற்கப்படும் முட்டைகளின் எண்ணிக்கையின் இடையைக் காண்க.
    3) முட்டை ஒன்றின் விலை ரூபா 12 எனின், இந்த நாட்களில் அவர் முட்டை களை விற்று பெற்ற பணத்தொகை எவ்வளவு?

ஆசிரியர்: P.பிரபாகரன்,
மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம்,
பதுளை.
தொ.பே.இல: 0771887935

## பகுதி - B


07. சுரேஸின் வீட்டிலுள்ள நீர்தாங்கியின் கொள்ளளவு 4000*l*. அத்தாங்கியை முதல் நாள் 4*l*. இரண்டாம் நாள் 8*l*, மூன்றாம் நாள் 16*l* என்றவாறு நிரப்பினான்.
    1) தினந்தோறும் நீர் நிரப்பும் விதத்தை எழுதி அது எவ்வகை விருத்தி எனக் கூறுக.
    2) 10ஆவது நாள் நிரம்பும் நீரின் அளவு யாது?
    3) 10 நாட்களுக்கு தொடர்ச்சியாக நீர் நிரம்பும்போது 10ஆவது நாள் மேலதிகமாக வெளியேறும் நீரின் அளவு யாது?

08. cm/mm அளவிடை உள்ள ஒரு நேர்விளிம்பையும் கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டி,
    1) 3cm ஆரையுடைய O ஐ மையமாக உடைய வட்டத்தை வரைக. வட்டத்தின் மீது புள்ளி P ஐக் குறிக்குக. OA = 8cm ஆகுமாறு நீட்டப்பட்ட OP மீது புள்ளி A ஐக் குறிக்குக.
    2) OA இன் செங்குத்து இரு கூறாக்கியானது வட்டத்திற்கு ஒரு தொடலி எனக் காட்டுக.
    3) வட்டத்திற்கு A இலிருந்து AX என்ற தொடலியை அமைத்து AX இன் நீளத்தை அளந்து எழுதுக.
    4) $\hat{AXP}$ இன் பெறுமானம் யாது?
    5) பைதகரசின் தேற்றத்தை உபயோகித்து $AX = 3\sqrt{3}$ cm எனக்காட்டுக.

09. 1) நீளம் 12cm, அகலம் 10cm, உயரம் 15cm உடைய கனவுரு வடிவ பாத்திர மொன்றில் 8cm உயரத்திற்கு நீர் உள்ளது. அந்நீரின் கனவளவைக் காண்க.
    2) rcm ஆரையுடைய 7 சிறிய திண்ம உலோக கோளங்கள் மேற்குறித்த பாத்திரத் தில் நீர்மட்டம் h இனால் உயர்கின்றது. $h = 11r^3/45$ எனக்காட்டுக.
    3) r = 2.41 ஆக இருக்கும்போது hஇன் பெறுமானத்தை மடக்கை அட்ட வணையைப் பயன்படுத்தி ஒரு தசமதானத்திற்கு காண்க.


10. a) ஒரே அடியிலும் ஒரே இரு சமாந்தர கோடுகளுக்கு இடையிலும் அமைந்த இணைகரங்களின் பரப்பளவுகள் சமன் என நிறுவுக.

    b) ABCD, DEFG என்பன பரப்பளவில் சமனான இரு செவ்வகங்களாகும்.





    1. செவ்வகம் ABXG = செவ்வகம் CEFX எனவும்,
    2. GC//BF எனவும் காட்டுக.

11. a) முக்கோணி ABC இல் $A\hat{B}D = A\hat{C}B$ ஆகும். சமகோண முக்கோணிகள் இரண் டைப் பெயரிட்டு $AB^2 = AC.AD$ எனக்காட்டுக.




    b) தரப்பட்ட வட்டத்திலுள்ள நாண்கள் BC, AD ஆகும். ACயும், BDயும் ஒன்றை ஒன்று X இல் இடை வெட்டுகின்றன. தரப்பட்ட தரவுகளைக்கொண்டு AX இன் நீளத்தைக் காண்க.





12. சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவோர் முதலில் எழுத்துப் பரீட்சையிலும் பின் செயன்முறைப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தோர் மாத்திரம் செயன்முறை பரீட்சைக்கு தோற்றலாம். வினோ எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கான நிகழ்தகவு 5/7, செயன்முறை பரீட் சையில் சித்தியடைவதற்கான நிகழ்தகவு 2/3 ஆகும்.
    1) மேலுள்ள தரவுகளைக் காட்டுவதற்கான மரவரிப்படத்தை வரைக.
    2) மரவரிப்படத்தைப் பயன்படுத்தி,
        1. வினோ சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான நிகழ்தகவு.
        2. வினோ சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறாமைக்கான நிகழ்தகவைக் காண்க.

-நிறைவுற்றது-

இன்றைய கணித பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்குவது
NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
N0 5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகரின் பிரதான வீதிகளின் அருகே அமைக்கப்பட்டிருக்கும் கழிவு வாய்க்கால்களின் மூடு தளத்தில் ஏற்பட்டுள்ள உடைவுகள் காரணமாக வீதியால் பயணிப்போர் ஆபத்துக்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். நகரில் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு சமீபமாக கஸ்தூரியார் வீதியருகே அமைக்கப்பட்டிருந்த கழிவு வாய்க்காலினதும், நல்லூர் முருகன் கோயில் மேற்குப் பகுதியில் பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டிருந்த கழிவு வாய்க்காலினதும் மூடு தளத்தில் ஏற்பட்டுள்ள உடைவு காரணமாக குழிகள் ஏற்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

இவ் வீதிகள் வழியாகப் பயணிக்கும் மக்கள் இந்தக் குழிகள் காரணமாக தாம் ஆபத்தினை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டிருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுக்குமாறு பொதுமக்கள் கோருகின்றனர். (14)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து தமிழ் மக்கள் எடுக்கவேண்டிய முடிவுகள் நான்கு வழிகளில்

## இருக்கின்றது என்கிறார் மனோ கணேசன் எம்.பி.

கொழும்பு, நவ. 11

''ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பு வரும் 15ஆம் திகதி வெளியாகலாம். இந்நிலையில் தமிழ் மக்கள் முன்னால் நான்கு வழிகள் இருக்கின்றன. ஒன்று. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிப்பது, இரண்டு. எதிரணியின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கு வாக்களிப்பது, மூன்று. தமிழ் மக்களின் சார்பாகப் பொது வேட்பாளரை நியமித்து வாக்களிப்பது, நான்கு. தேர்தலில் வாக்களிக்காமல் பகிஷ்கரிப்பது. இந்த நான்கு வழிகளில் எந்த வழியில் செல்வது என்பதை தமிழ் மக்கள் சிந்தித்து தீர்மானிக்க வேண்டிய வரலாற்று வேளை வந்து கொண்டிருக்கிறது.''

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் மனோ எம். பி. விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பாரிய போர் ஓய்ந்துவிட்டது. ஆனால் போருடன் சேர்த்து தேசிய இனப்பிரச்சினையையும் புதைத்துவிட்டது என அரசு நினைத்துக் கொண்டிருக்கின்றது. போர் தோன்றுவதற்கான அரசியல் காரணங்களுக்கு அரசியல் தீர்வை காணும் வரலாற்று சந்தர்ப்பத்தை இந்த அரசு தவறவிட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிந்தித்து திட்டவட்டமான முடிவெடுக்கவேண்டிய நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். இந்த வரலாற்று வேளையை தவறவிட்டு மீண்டுமொரு இருண்ட காலத்திற்குள் தமிழர்களாகிய நாங்கள் மாத்திரம் பயணிக்க முடியாது. எம்மால் இந்நாட்டிலே ஜனாதிபதியாகி அலரிமாளிகைக்குச் செல்ல முடியாது. எமக்கு நாடாளுமன்றம் வரை மாத்திரமே செல்ல முடியும். இந்நிலையில் இன்று நாடாளுமன்றம் பலவீனப்படுத்தப்பட்டு அலரிமாளிகை அரண்மனையாக மாற்றப்பட்டள்ளது. இந்நாட்டிலே உத்தியோகப்பூர்வமற்ற மன்னராட்சி முறைமையை நடைமுறையாக்குவதற்கு இடந்தரபோகின்றோமோ என நாம் முடிவெடுக்க வேண்டும்.

மக்களுக்கு தலைமைதாங்கும் தகைமை எங்களுக்கு இருக்கின்றது. மக்களே இந்த தகைமையை வழங்கியுள்ளார்கள். எனவே ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுமானால் அது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் முடிவை நாங்கள் அறிவிப்போம். மக்களுக்கு தலைமைதாங்கி உரிய வழியை துணிச்சலுடன் காட்டும் வரலாற்றுப் பொறுப்பை நாம் நிறைவேற்றியே தீருவோம். - என்றுள்ளது. (சி)

## கைதடியில் முதியோர் கௌரவிப்பு

கைதடி, நவ.11

கனடா வாழ் உறவுகளின் அனுசரணையுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் நடத்தும் முதியோர் கௌரவிப்பு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தலைவர் லயன் ப. செல்லத்துரை தலைமையில் கைதடி வடக்கு, கயற்றசிட்டி கந்தசாமி கோயில் பொது மண்டபத்திலே இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சாந்திகம் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி. சங்கரப்பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் இருநூறுக்கும் மேற்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் சனசமூக நிலையங்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (50-288)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவுவது தொடர்பாக பதிவாளர்களுக்கு விளக்கம்

யாழ்.மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட செயலக வடக்கு வலயப் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் இடம்பெற்றது.

உதவிப்பதிவாளர் திருமதி எம். ராஜரட்ணத்தின் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பிரதேச செயலக மாவட்டப் பதிவாளர்கள், கிராமிய மட்டப் பதிவாளர்கள் என அறுபதுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட மக்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள், அவர்களுக்கு எப்படி உதவுவது உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மக்களுக்குச் சேவையாற்றிய மூத்த பதிவாளர்களின் சேவையைப் பாராட்டும் முகமான கௌரவிப்பு நிகழ்வினை டிசம்பர் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் யாழ். மாவட்ட பதிவாளர் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இக்கலந்துரையாடலின்போது இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (50- 14)

## பஸ் சேவை சீரில்லை

அளவெட்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் 768 இலக்க இ.போ.ச பஸ் சேவை காலை 8 மணிக்குப் பின்னர் சீரற்றுக் காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட நேரத்திற்கிடையில் வருகின்ற மினி பஸ்கள், மிதி பலகையில் கூட மக்களை நெருக்கி ஏற்றி வருவதனால் கந்தரோடையிலிருந்து யாழ்ப்பாணம் வரை மக்களை ஏற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு வேலைக்குச் செல்ல வேண்டியவர்கள் சீரற்ற பஸ் சேவையினால் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (50-15)

## சுகாதார மன்றம் அமைப்பு

யாழ். சுகாதாரத் திணைக்களத்தினரின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட அறிமுகக் கருந்தரங்கின் பிரகாரம் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் சுகாதார மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மன்றத்தில் திருமதி சகாதேவன் , திருமதி யோகேஸ்வரன் ஆகியோர் நிரந்தர ஆலோசகர்களாகவும் தலைவராக செல்வன் டிலக்ஸ்சனும் செயலாளராக செல்வி துங்கயினியும் தெரிவு செய்யப்பட்டனர். (50- 15)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணத்திற்கு தனது விஜயத்தினை மேற்கொண்டிருக்கும் ஸ்ரீ அம்மா பகவானின் சீடரான ராஜேஸ்தாதாஜியின் ஆன்மீகச் சொற்பொழிவு எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ''வாழ்க்கைக்கு வழிகாட்டும் உயர் ஆன்மீகம்'' என்னும் தலைப்பில் அவரது சொற்பொழிவு இடமபெறும் என ஸ்ரீ அம்மா பகவான் குழுவினர் தெரிவித்தனர். (50- 15)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.11

நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய இடைநிலை மாணவர் மன்றத்தினால் தொடராக வெளியிடப்படும் ''இயல்வது கரவேல்'' எனும் இம்மாதத்துக்கான சஞ்சிகை விரைவில் வெளியிடப்படவுள்ளதாகப் பாடசாலை அதிபர் ம.கஜேந்திரன் தெரிவித்துள்ளார். (50-15)


### தவறிவிட்டது

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த கந்தசாமி வசந்தராசன் என்பவருடைய DISCOVERY NPVE - 3708 என்னும் இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிள் பதிவுச் சான்றிதழ் யாழ்ப்பாணத்துக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கந்தசாமி வசந்தராசன் (பாலன்),
கோப்பாய் மத்தி, கோப்பாய். (சூசையப்பர் கோயிலடி)
தொ.பே.:0779383234 (90859)

### வீடு விற்பனைக்குண்டு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் அமைந்துள்ள 4½பரப்புக் காணியும் புதுவீடும் விற்பனைக்குண்டு. அத்துடன் 3 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0717353524 (90856)

### Visa! Visa! Visa! எந்நாட்டிற்கும் எவ்வகையான விசாவிற்கும் உரிய ஆலோசனைகள்

Ravikumarr- 0776953726
(Registered Travel Consultent)
''கௌரி வாசா'', ஆலடி, உடுவில், சுன்னாகம். (89309)

கணபதி துணை

### ஆன்மீகச் சுற்றுலா

பிள்ளையார் கதையை முன்னிட்டு உச்சிப்பிள்ளையார், பிள்ளையார் பட்டி, மதுரைமீனாட்சி உட்பட ஆறு படை வீடுகளுக்கும் குறைந்த செலவில் நிறைந்த பயணம். பதிவுகள் ஆரம்பம். முந்தும் முதல் ஐவரிற்கு விஷேட கழிவு.

விவரம்:0776953726, 0217451990 (89308)

Ravikumarr,
''Gowri Vasa'' ஆலடி, உடுவில், சுன்னாகம்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவனும் சிவஸ்ரீ கௌரிபாலக்குருக்கள் - மஞ்சுஸ்ரீ தம்பதியரின் செல்வப் புதல்வனுமாகிய

**கௌ.ஸ்ரீபாரத்வாஜசர்மா**

புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மென்மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ ஸ்ரீ உடுக்கியவளை விநாயகரை வேண்டி நிற்கிறோம்.

வாழ்த்துவோர்:
பிரம்மஸ்ரீ ந.பிரசாந்தசர்மா- லாவண்யா தம்பதிகள் (அத்தான், அக்கா)
வட்டுக்கோட்டை. (90860)

### துயர் பகிர்கின்றோம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மூத்தநயினார்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியாரும் யாழ். பல்கலைக் கழக ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய முன்னாள் பிரதம சிவாச்சாரியாருமான

**சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் சிவசுப்பிரமணியக் குருக்கள்**

கடந்த (05/11/2009) வியாழக்கிழமை சிவபதமடைந்த செய்தியறிந்து நாம் மிகவும் துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பேராசிரியர் வி.சிவசாமியும் வழிபடுவோரும்.
புங்குடுதீவு -4. (90855)

### மரண அறிவித்தல்

**அப்பாத்துரை யோகநாதன்**

(ஓய்வுபெற்ற சுகாதார மேற்பார்வையாளர், வலி.தென்மேற்கு பி.சபை,மானிப்பாய்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை யோகநாதன் நேற்று (10.11.2009) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் கோகிலாம்பாளின் (கிராமிய வங்கி, M.P.C.S,பண்டத்தரிப்பு) அன்புக் கணவரும் அப்பாத்துரை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மோகனதாஸ் (மோகன்,பொது நூலகம், மானிப்பாய்), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கிருபைநாதன், கருணைநாதன் மற்றும் விமலநாதன் (ஆனந்தன்), கமலநாதன், சிவநாதன், வனிதா, பாமா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மீனா, பஞ்சேந்திரன் (C.T.B.,வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.11.2009) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு பூம்பத்தை வீதி, வடலியடைப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோ.மோகனதாஸ் (மகன்).
மாதகல் கிழக்கு, மாதகல். (சி/562234)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் கல்வித்துறையில் இடம்பெறும் நியமனங்கள் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் வழங்கப்படமாட்டா

## தகுதியை வைத்தே வழங்கப்படும் என்கிறார் பிரதிக்கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 11

எதிர்காலத்தில் கல்வித்துறையில் இடம்பெறும் நியமனங்கள், பதவியுயர்வுகள் என்பன அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் நடைபெறாமல் தகுதியின் அடிப்படையிலேதான் அமையும் .

இவ்வாறு தெரிவித்தார் பிரதிக்கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன். பலாலி ஆசிரியர் கலாசாலையில் அண் மையில் அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்களுடனான கலந்துரையாடல் எஸ்.சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்துபேசுகையில்:

உலக மக்களுடன் போட்டியிடும் திறமை உடையவர்களாக நாமும் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஆண்டு ஆங்கில மொழியில் தொழில்நுட்ப ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் அனைவரும் யுத்தத்தினால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்கள்தான். ஆனால் இன்று பிரச்சினை தீர்ந்து அபிவிருத்திக்கான சூழல் நிலவுகின்றது.

தரமான கல்வியை விருத்தி செய்ய சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதற்கு 500மில்லியன் ரூபாவுக்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர்சேவை என்பவற்றுக்கு பரீட்சை, நேர்முகத்தேர்வு என்பன இடம்பெற்றே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டில் இருந்து தகுதியுள்ள நியமனத்தையே கல்வியமைச்சிடமிருந்து எதிர்பார்க்க முடியும் - என்றார்.

இந்த நிகழ்வில் கல்வியமைச்சின் ஆலோசகர் க.தணிகாசலம்பிள்ளை உரையாற்றுகையில்:

சகல வசதிகளுடனும் மிளிர்ந்த பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இன்று சிறிய நிலப்பரப்பில் வசதிகள் இல்லாது காணப்படுகின்றது.

இந்த கலாசாலையை உரிய இடத்துக்கு எடுத்துச் செல்லும் முயற்சி தமிழ் மாணவர்களுக்குச் செய்யும் பெரும் தொண்டாக அமையும்

ஆசிரியர்கள், உடல், உளரீதியாக தம்மை பக்குவப்படுத்திக் கொண்டால்தான் கல்வியில் முன்னேற முடியும். அதற்கு அவர்களுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியர் நியமனம் கிடைக்கும் போது ஆசிரியர்கள் வீட்டின் அருகிலுள்ள பாடசாலையை எதிர்பார்க்காது புதிய இடங்களுக்குச் சென்று புதிய அனுபவங்களை பெறவேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் கலாசாலையினதும் மாணவர்களினதும் தேவைகள் பற்றி மகஜர்கள் அமைச்சரிடம் கையளிக்கப் பட்டன. (50- 204- 55)

## வலி.மேற்குப் பிரதேச உள்ளூராட்சி விழாவும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம்,நவ.11

வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி விழாவும் மாபெரும் கண்காட்சியும் விரைவில் நடைபெறவுள்ளன.

வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சிக் கண்காட்சியில் மாகாண மட்டத்தில் வலி. மேற்கு பிரதேச சபை மூன்றாம் இடம் பெற்றது.

மேற்படி கண்காட்சியை எதிர்வரும் 21, 22, 23 ஆகிய திகதிகளில் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்கள், வர்த்தக சமூகத்தினர், கைத்தொழிலாளர்கள், உற்பத்தியாளர்கள், முதலீட்டாளர்கள் பயன்படக் கூடிய வகையில் இக் கண்காட்சி காட்சிப் படுத்தப்படவுள்ளது.

இதற்கான துரித நடவடிக்கையை பிரதேச செயலாளர் சு.புத்திசிகாமணி மேற்கொண்டுள்ளார்.

இறுதி நாளன்று உள்ளூராட்சி வார இறுதி விழாவும், விருது வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறும். (50-302)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் புதிய அலுவலகம்

குருநகர்,நவ.11

நகரில் வேம்படி வீதியில் இயங்கிவந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகம் இடமாற்றப்படவுள்ளது. யாழ்ப்பாணம் நான்காம் குறுக்கு வீதியில் முன்னர் யாழ். மாவட்ட நீதிமன்றம் இயங்கிய வீட்டில் இந்த அலுவலகம் இயங்க உள்ளது.

இந்த வீட்டை திருத்தியமைத்து நீலவர்ணம் பூசும் நடவடிக்கையைத் தற்போது இக்கட்சியினர் மேற்கொண்டுள்ளதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகம் என்ற பெயர்ப் பலகையையும் நிறுவியுள்ளனர்.

இதேவேளை யாழ்.வேம்படி வீதியில் முன்னர் இவ்வமைப்பின் அலுவலகம் இயங்கிய இடத்திலும் இக்கட்சியின் பெயர்ப்பலகையுடன் கட்சிக் காரியாலயம் இயங்குகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசாவிடம் இது தொடர்பாக வினவிய போது, இப் புதிய இடத்திலேயே தமது அலுவலகம் இயங்கும் எனவும் இக்காரியாலயம் விரைவில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படும் எனவும் அதன் பின்னர் யாழ். வேம்படி வீதியில் தற்போது அமைந்துள்ள காரியாலயம் மூடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (50-51)

## பிடியாணைகளைப் பொலிஸாரே இனிமேல் வழங்க நடவடிக்கை

### அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்படும் பிடியாணைகளை இனிமேல் பொலிஸாரே உரியவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி, சட்ட மறு சீரமைப்பு பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்திகள் தொடர்பான கூட்டம் யாழ். பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிடியாணை வழங்கும் நடவடிக்கைகளைச் செயற்படுத்த வேண்டியுள்ளதால் கிராம அலுவலர்கள் தமது சில கடமைகளுக்குச் செல்ல முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே இனிமேல் பிடியாணைகளை வழங்கும் நடவடிக்கைகளைப் பொலிஸாரே மேற்கொள்ளுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். (04-111)

## தாய்மார் போசாக்கு உலர் உணவு விநியோகம் சங்கங்களில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.11

தாய்மார் போசாக்கு முத்திரைக்கான உலர் உணவு விநியோகம் தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஜூலை ,ஓகஸ்ட் , செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய நான்கு மாதங்களுக்குரிய போசாக்கு உணவுகளைத் தாய்மாருக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி விநியோகத்துக்கான ஒரு மாத முத்திரையின் பெறுமதி 200 ரூபா மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (04-224)

## சங்கானை மண்டிகை குளம் புனரமைப்பு

சங்கானை,நவ.11

சங்கானை மண்டிகைக் குளக்கட்டு புனரமைக்கப்பட்டு குளத்தைச் சூழ 8 அடி அகலமான வீதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குளத்தைச் சூழவுள்ள வயல் பகுதிக்கு சங்கானை-காரைநகர் பிரதான பாதையிலிருந்து விவசாயிகள் தமது உழவு இயந்திரம் மற்றும் வாகனங்கள் இவ்வீதியூடாக இலகுவாகச் செல்லக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-201-29))

## நவீன வசதிகொண்ட சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதற்கு 80மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்க

### வடமாகாணப் பிரதம செயலாளரிடம் கோரிக்கை

பண்டத்தரிப்பு, நவ.11

குடாநாட்டில் நவீன வசதிகொண்ட சிறுவர் வைத்தியசாலையை அமைப்பதற்கு 80மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து உதவவேண்டும் என சுகாதார சுதேசிய வைத்தியத்துறை அமைச்சின் வடமாகாணச் செயலாளர் இ.ரவீந்திரன் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமியை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

மேற்படி நவீன வசதிகொண்ட சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கான காணி சங்கானையில் அல்லது தெல்லிப்பளை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட உள்ளது.

எனவே வடக்கின் வசந்தத் திட்டத்தின் கீழ் நவீன வசதிகொண்ட சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு 100 படுக்கையறைகளுடன் நவீன கட்டடத்தொகுதி அமைக்கப்படல் வேண்டும் எனவும் அத்துடன் சிறுவர் வைத்தியத்துடன் தொடர்புடைய மருத்துவ நிபுணர்கள் கொண்ட ஆளணியினையும் பெற்றுத் தருமாறு சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை மாகாண சுகாதார சேவைகள் பிராந்தியப்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேற்படி சிறுவர் வைத்தியசாலை அமைப்பது தொடர்பாக பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

வடமாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலைக்கான முன்மொழிவினை நவாலி ஹேமலதா செல்வராசா ஞாபகார்த்த நூலகமும் சனசமூக நிலையமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்திருந்தன. (50- 130)

## இடம்பெயர்ந்தோருக்கான மூன்று மாதங்களுக்கான நிவாரணம் இதுவரை விநியோகிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், நவ.11

இடம்பெயர்ந்தோருக்கான மூன்று மாதங்களுக்குரிய நிவாரணம் இதுவரை விநியோகிக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களுக்குரிய இடம்பெயர்ந்தோர் நிவாரணம் இதுவரை விநியோகிக்கப்படவில்லை.

இந்த நிவாரணத்தைப் பெறுவதற்கு தினமும் மக்கள் கூட்டுறவுச்சங்கங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

ஒக்ரோபர் மார்தத்துக்கான நிவாரணமே கடைசியாக விநியோகிக்கப்பட்டதாக இடம்பெயர்ந்தோர் தெரிவித்தனர்

(50- 204)

## சாரதா சேவாச்சிரமத்தின் கண்காட்சியும் நூல் விற்பனையும்

யாழ்ப்பாணம்,நவ.11

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் கண்காட்சியும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகிய நூல்களின் விற்பனையும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் அதிபர் ஆர்.இராஜ மகேந்திரன் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (50-204)

# வாழ்வின் முழுமையைப் பெற்றுக்கொள்ள தேடல் எல்லோருக்குமே அவசியம்

## வலி.கிழக்குப் பிரதேச செயலர் உரை

அச்சுவேலி, நவ. 11

''தேடல்'' உள்ள மனிதர்கள் வாழ்வில் முன்னேற முடியும். தேடல் இல்லாதவர்களின் வாழ்க்கை முழுமையாக நிறைவு பெறாத வாழ்வாகப் போய்விடும். இதிலும் ஆசிரியர்களின் தேடல் அர்த்தம் உடையதாகவும் மாணவர்கள் எதிர்காலத்தை உயர் நிலைபெறச் செய்வதாகவும் அமைய வேண்டும்.

இவ்வாறு கூறினார் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ்.

முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.சுவாமிநாதனால் தொகுக் கப்பட்டு சுவிஸ் நற்பணிச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 'தகவற் சாளரம்'' என்ற நூல் வெளியீட்டு விழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெற்றது.

நூல்வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிரினங்களின் வாழ்வில் மனித உயிரின் வாழ்வு மாறுபட்டது.தேடலுடன் கூடியது. அதனால் தான் மனிதனின் வாழ்வு இன்று உயர் நிலை பெற்று நிற்கின்றது. எந்தெந்தத் துறைகளில் இன்று உயர் நிலை பெற்று இருக்கின்றோமோ அந்தந்தத் துறையில் தேடலில் உயர்நிலை காணப்படுகின்றது என்பது வெளிப்படாகின்றது.

தேடல் இல்லாத மனிதனின் வாழ்வு முழுமை இல்லாதாகிப் போய்விடும். ஆசிரியர்களின் தேடல் அர்த்தமுள்ளதாய் அமைந்தமையினால்தான் மாணவர்கள் உயர் நிலை பெற்றார்கள். எனவே ஆசிரியர்களின் தேடல் மாறுபட்ட தன்மை கொண்டதாகும். அவர்களின் தேடல் தமையும் வளர்த்து மாணவர்களையும் வளர்ப்பதாக அமைய வேண்டும்.

மாணவர் மத்தியில் தேடலுக்கான தளத்தை ஸ்திரமான நிலையில் இடுவதற்கு ஆசிரியர்கள் தேடலின் முன்னேடியாக இருக்கவேண்டும். இந்த நிலையில் தான் மாணவர்கள் எதிர்பார்ப்பதை ஆசிரியர்களால் முழுமையாக நிறைவு செய்ய முடியும்.

படிக்கும்போது தெளிவான சிந்தனையுடன் புத்தகங்களைப்படிக்க வேண்டும். சிந்தனைத் தெளிவு இல்லாதவிடத்து புத்தங்களைப் பார்ப்பதாக முடியுமே தவிர படிப்பதாகக் கருதமுடியாது. தெளிவான சிந்தனையுடன் நாம் செயற்படும்போது தான் குறித்த விடயத்தில் தெளிவு பெறுகின்றோம். திருத்தமாக செயற்படுகின்றோம் எனக் கூறினார்.

(04-11)

## விசுவத்தனை முருகமூர்த்தி ஆலயத்துக்கு இராஜகோபுரம்

சுழிபுரம், நவ. 11

இராஜகோபுர கட்டுமான நிதிக்கு வெளிநாடுகளில் வாழும் பண்ணாகம் மக்கள் தமது குலதெய்வமான விசுவத்தனை முருகமூர்த்தி ஆலய இராஜ கோபுரத்தை நிறைவு செய்வதற்கு பெருந்தொகை நிதியை ஆலய பரிபாலன சபைக்கு அனுப்பி வருகின்றனர்.

ஏற்கனவே இராஜகோபுரத்துக்கான அடித்தள வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேற்தள வேலைகளை நிறைவு செய்வதற்கு நிதி சே வைப்படுவதால் அடுத்தாண்டு ஜனவரி . நத்தில் வேலைகளை ஆரம்பிக்க ஆலய ிபாலன சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

(50-2( 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான சமூகத்தை படைக்க வழிகாட்ட உதவி நின்ற சுகாதார மருத்துவக் கண்காட்சி

''தொலைக்காட்சித் தொடர்களுக்கும், புதிய வெளியீடுகளாகத் தினமும் தொடரும் தென்னிந்திய சினிமாவுக்கும், தென்னிந்திய கலைஞர்களின் நிகழ்வுகளுக்கும் மட்டுமே மக்கள் நேரம் ஒதுக்குகின்றார்கள்.'' என்ற பொது நிலை அபிப்பிராயத்தை ஓரளவுக்கேனும் சிதறடிக்கும் வகையில் அண்மையில் நடைபெற்ற 'சுகாதார மருத்துவ கண்காட்சி' அமைந்திருந்தது.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ளது. ''சுகவாழ்வுக்கான பயணம்'' எனும் நிறுவனம் ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை, இந்த நிறுவனத்தில் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் சுகாதார மருத்துவக் கண்காட்சி மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இக் கண்காட்சி காலத்தின் தேவை என்பது நேரில் சென்று பார்வையிட்ட ஒவ்வொருவருக்கும் புரிந்திருக்கும்.

பாடசாலை மாணவரை அதிகம் வரவழைத்து,நிகழ்விடத்தை அலங்கரிக்கும் வழமையையும் மறுதலிப்பதாய் 'ஆரோக்கியமான சமூகத்தைப் படைப்போம்' என்னும் தொனிப்பொருளிலான இக் கண்காட்சி நிகழ்வு நடந்தேறியது.

மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்,வைத்தியர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் , சமய நிறுவன பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலதரப்பட்ட ஆர்வலர்கள், பார்வையாளர்கள் இக் கண்காட்சியின் மூலம் பயனடைந்திருக்கிறார்கள்.

'இரண்டாயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து பயனடைந்துள்ளமை, இக்கண்காட்சி நிகழ்வினை நடத்த முன்னின்று பணியாற்றிய எமக்கு அதிக உற்சாகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது'. என நிறுவனத் தலைவர் ஜி. நக்கீரன் கூறுகின்றார்.


நிறுவனத்தில் அடிப்படை சுகாதார மருத்துவ கற்கை நெறியைத் தொடரும் இருபத்திநான்காம் அணி மாணவர்களால் இந்த நிகழ்வு மிகச் செம்மையாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அது மட்டுமன்றி அவர்களே பார்வையாளர்களுக்குத் தெளிவை வழங்கும் முகமாக மிகவும் சிறப்பான முறையில் விளக்கத்தை வழங்கியிருந்ததையும் அவதானிக்க முடிகின்றது.

தாய்சே[illegible] போசாக்கு, பாலியல் சுகாதாரம், [illegible]பருக்கச் சுகாதாரம், வீட்டுத் தோட்டம், தொற்றுநோய்கள்- தடுப்பு முறைகள், உளசமூக மேம்பாடு என[illegible] பிரிவுகளா[illegible] கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பால் வினை நோய்களால் சமூகம் எதிர்நோக்கும் பாதிப்புகளை விளக்கி, இளம் சமுதாயத்தினை நல்வழியில் பயணிக்க வைக்கும் முயற்சியாகவும் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

பாலியல் சுகாதாரம், இனப் பெருக்கச் சுகாதாரம் தொடர்பாக அதிக பார்வையாளர்- குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவைப் பெற்றுக் கொண்டதனையும் இங்கு காணமுடிந்தது.

சுகாதார மருத்துவக் கண்காட்சியினை 'சுக வாழ்வுக்கான பயணம் நிறுவனம்' நடத்தியதன் மூலமாக - இந் நிறுவனம் யாழ் மாவட்டத்தில் தனது சேவையை முன்னெடுத்து வருகின்றது என்ற யதார்த்தத்தை நிரூபித்திருக்கின்றது.' என யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் ஒருவர் குறிப்பிட்டார்.



பார்வையாளர்களின் விமர்சனக் கருத்தினை பெற்றுக் கொள்வதற்காக வைக்கப்பட்டிருந்த ஏட்டினைப் புரட்டிப் பார்க்கும் சந்தர்ப்பம் இறுதி நாள் அன்று கிடைத்தது. 99 வீதமானோர் இக் கண்காட்சி நிகழ்வினை மிகவும் வரவேற்று தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டிருந்ததனை அதில் அவதானிக்க முடிந்தது.

இந்தக் கண்காட்சி நிகழ்வினை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, உலக சுகாதார நிறுவன ஆலோசகர் வைத்தியக் கலாநிதி என். சிவராஜா, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி என். சிவன்சுதன் ஆகியோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவைகள் மட்டுமன்றி இறுதிநாள் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, சமூக சேவைகள் அமைச்சருடன் வருகை தந்து பார்வையிட்டார்,

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெற இருக்கும் கண்காட்சி நிகழ்வில் சுகவாழ்வுக்கான பயணம் நிறுவனத்தையும் கலந்து கொள்ள அழைப்பு விடுத்ததோடு, பொது மக்களின் நலன் குறித்து நிறுவனம் தயாரிக்கும் திட்ட முன்மொழியினை தனக்கு வழங்கினால் உதவுவதற்கு தயாராக இருப்பதாக ஆளுநர் குறிப்பிட்டதன் ஊடாக கண்காட்சியின் நிகழ்வின் சிறப்பினையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

இவற்றின் மூலம் சுகாதார மருத்துவக் கண்காட்சி நடத்தப்பட்டதன் நோக்கத்தை 'சுகவாழ்வுக்கான பயணம்' நிறுவனம் சிறப்பாக நிறைவேற்றி இருக்கின்றது என்னும் முடிவுக்கு வர முடிகின்றது. எனவே இவ்வாறான காத்திரமான செயற்பாடுகளை ஏனைய நிறுவனங்களும் தொடர்ந்தும் சமூகத்திற்கு வழங்கினால் சமூக விழிப்புணர்வை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும்.

-உமா

# தமிழ் மக்கள் கிடைக்கின்ற வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

## பரிசளிப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ் உரை

வடமராட்சி, நவ.11

தமிழ்மக்கள் எதிர்வரும் காலங்களில் கிடைக்கின்ற வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்த வேண்டும். புதிய வாய்ப்புக்களையும் தேடிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சமூகசேவைகள், சமூகநலத் துறை அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா வடமராட்சியில் பாடசாலை நிகழ்வுகளில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய புதிய மாடிக்கட்டடத் திறப்புவிழா, அதிபர் ச.திரவியராசா தலைமையிலும், கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா, அதிபர் மா.நவநீதமணி தலைமையிலும் நடை பெற்றன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்த மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:-

மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அவர்களை நல்ல திசையில் வளர்க்க வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். அரசாங்கம் இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள், மதிய உணவு என்பவற்றை வழங்கி வருகின்றது. இவற்றைத் தக்கமுறையில் பயன்படுத்த வேண்டும். இதற்குப் பெற்றோர்களும் உதவவேண்டும்.

யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. இதற்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரச படைகள் தியாகங்களை புரிந்துள்ளன.

அதேபோல தமிழ்ச் சமூகமும் நிறைய விலைகளைக் கொடுத்துள்ளது. சொத்துக்கள், உடைமைகள் அழிவு, இடப்பெயர்வு, மன உளைச்சல்கள் என்பனவற்றை தமிழ் மக்கள் அனுபவித்துள்ளனர்.

இன்று நாம் சுதந்திர தேசத்தை நோக்கி முன்னேறுகிறோம். அந்த நம்பிக்கையோடு எதிர்காலத்தை நாம் அனைவரும் முன்னெடுப்போம்.

இப்பாடசாலைகளின் தேவைகள் குறித்து அதிபர்கள் கொடுத்த கோரிக்கை அடுத்த நிதியாண்டில் பரிசீலனைக்கு எடுத்து தேவைகள் நிவர்த்தி செய்யப்படும் - என்றார்.

# மியன்மார் இராணுவ அதிகாரி விரைவில் இங்கு விஜயம்

மியன்மாரின் உயரிய தலைவர் சிரேஷ்ட ஜெனரல் தான் ஸ்வே, விரைவில் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

எனினும், அவர் எந்தத் திகதியில் இலங்கை வருவார் என்ற உத்தியோக பூர்வத் தகவல் எதுவும் வெளியாக வில்லை.

இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான 60 வருட இராஜதந்திர உறவுகளின் பூர்த்தியை முன்னிட்டே அவர் இலங்கை வரவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜூன் மாதம் மியன்மார் சென்றிருந்த போது சிரேஷ்ட ஜெனரல் தான் ஸ்வேவைச் சந்தித்து இதற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

ஏற்கனவே இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையில் யாத்திரீகர்களுக்கான விசேட விசாவுக்கான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மியன்மாரிலேயே ஜனநாயகவாதியான எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங்சுகி, பல வருடங்களாக வீட்டுக்காவலில் தடுத்து வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சி)

# யுத்தத்தில் வென்ற இராணுவத் தளபதிகளை உலகம் ஒருபோதும் வியந்து பேசுவதில்லை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

யுத்தத்தில் வெற்றி பெற்ற இராணுவத் தளபதிகளை ஒருபோதும் உலகம் வியந்து பேசுவதில்லை. ஆனால் யுத்தங்களின் போது இராணுவத் தளபதிக்கு கட்டளைகளைப் பிறப்பித்து வழி நடத்திய நாட்டுத் தலைவர்களையே பே[illegible]க் கொண்டிருக்கின்றது. - என்று அமைச்சர் லக்ஷமன் யாப்ப அபேவர்த்தன தெரிவித்தார்.

தனியார் தேயிலைத் தோட்ட உரிமையாளர் சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு:-

நாட்டுக்கு நல்ல அரசியல் தலைமைத்துவம் இல்லாதிருந்தால் போரில் வெற்றியடைந்திருக்க முடியாது. போரில் கிடைத்த வெற்றிக்கு எந்தவொரு தனி நபரும் உரிமை கோர முடியாது. இந்த வெற்றி தனிப்பட்ட வெற்றியல்ல. அரசியல் வெற்றியாகும் - என்றார்.

(சி)





வடக்கின் வசந்தம் 180 நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் பனை அபிவிரு[illegible] கிராம அலுவலர் செல்வி த.கீர்த்திகா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கிராம அலுவலர் தலைமையுரை நிகழ்த்துவதையும், பனை அபிவிருத்தி சபை விரிவாக்க அலுவலர் எஸ்.கோபாலகிருஷ்னன், நிர்வாகக் கிராம அலுவலர் என்.நவரட்ணராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் பொதுமக்கள் ஆண், பெண் எனப் பகுதி பகுதியாகப் பிரிந்து பனம் விதை நடும் நிகழ்வில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி ஓவரில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது நியூஸிலாந்து!



நியூஸிலாந்து-பாகிஸ்தான் அணிக ளுக் கிடையிலான இறுதி ஒருநாள் போட் டியில் நியூஸிலாந்து அணி 7 ஓட்டங்க ளால் வெற்றி பெற்றது.

3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடிவந்த நியூஸிலாந்து-பாகிஸ்தான் அணிகள், ஏற்கனவே நடந்து முடிந்த இரண்டு போட்டிகளில் தலா ஒரு வெற்றியைப் பதிவுசெய்துகொண்டன.

இந்நிலையில் தொடரை யார் கைப் பற்றுவது என்ற முக்கிய மான போட்டியில் நேற்று இரு அணிகளும் மோதிக் கொண் டன.

அதன்படி நாணயச் சுழற் சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது.

ஆரம்ப வீரர்களாகக் களமி றங்கிய மக்கலம் - ரெட் மண்ட் ஜோடி சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தது. சிறப்பாக ஆடிக் கொண்டி ருந்த ரெட்மண்ட் 21 ஓட்டங் களைப் பெற்றவேளை ஆட்டமிழந் தார். பின்னர் வந்த குப்தில் 8 ஓட்டங்களை மட் டுமே பெற்று ஏமாற்றமளித்தார். பின்னர் வந்த வீரர்களில் சிறப்பாக விளையாடிய ரெய்லர் 44 ஓட்டங்களைச் சேர்த்துச் சென் றார்.

ஸ்ரைரிஸ் (14), விற்றோரி (15) ஆகி யோரும் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த் தனர். ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை எட்ட வில்லை. பொன்ட் மட்டும் 11 ஓட்டங்க ளுடன் இறுதி வரை களத்தில் இருந்தார்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 46.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட் டுகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச் சில் ஆகக்கூடுதலாக சயித் அஜ்மல் 4 விக் கெட்டுகளை வீழ்த்தினார்

பின்னர் 212 என்ற சிறிய இலக்கை நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி யின் ஆரம்பம் ஓரளவு சிறப்பாக அமைந் தது.

ஆரம்ப வீரர்களான சல்மான் பட் 25 ஓட்டங்களையும் கலீத் லத்தீப் 19 ஒட்டங்க ளையும் தமது பங்குக்குச் சேர்த்துச் சென்றனர்.

தொடர்ந்து சீரான இடைவெளியில் பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுகள் சரி யத்தொடங்கின.

எனினும் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. முகமது ஆமீர் இறுதிவரை களத்திலிருந்து அணிக்காகப் போராடிக் கொண்டிருந்தார். இவர் 73 ஓட்டங்களை விளாசியிருந்தமை சிறப்பம்சம். அத்து டன், சயித் அஜ்மலும் 33 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்

இறுதியில் பாகிஸ்தான் அணி 49.1 ஓவர்கள் நிறைவில் 204 ஓட்டங்களைப் பெற்றவேளை அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 7 ஓட்டங்களால் தோல் வியுற்றது.

இந்தப் போட்டில் வென்றமையல் நியூஸிலாந்து அணி 3 போட்டிகளைக் கொண்ட தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணி வீரரான முகமது ஆமிர் தெரிவுசெய்யப்பட் டார். தொடர் நாயகனாக நியூஸிலாந்து அணி வீரரான மக்கலம் தெரிவுசெய்யப் பட்டார்.

# ஒலிம்பிக்கில் பதக்கம்—செரீனா

"ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வதே எனது இலட்சியம். அது தங்கமாக இருந்தாலும் சரி வேறெந்தப் பதக்கமாக இருந்தாலும்சரி பதக் கம் வெல்ல வேண்டும்." - எனக் கூறியுள் ளார் டென்னிஸ் உலகின் முதல்நிலை வீராங் கனையான செரினா வில்லியம்ஸ்.

சர்வதேச பெண்கள் டென்னிஸில் இதுவரை ஒற்றையர், இரட்டையர், கலப்பு இரட்டையர் என்று மொத்தம் 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங் களை வென்றிருக்கிறார். அத்துடன், ஒலிம்பிக் போட்டியில் இரட்டையரில் தனது சகோதரியுடன் இணைந்து அவர் இரண்டு முறை (2000 மற்றும் 2008ஆம் ஆண்டு) தங் கப்பதக்கம் வென்றிருந்தாலும், ஒற்றையரில் இதுவரை எந்தப் பதக்கமும் வென்றதில்லை.

இந்நிலையிலேயே 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் தனது இலக்கை நிறைவேற்றும் முனைப்பில் செரினா பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"ஒலிம்பிக்கில் இதுவரை நான் ஒற்றை யர் ஆட்டங்களில் தங்கப்பதக்கம் வென்ற தில்லை. இதில் தங்கம் வெல்வதே எனது நீண்ட கால இலட்சியம். எந்த வகையான பதக்கம் வென்றாலும் மகிழ்ச்சிதான். இருப்பினும் லண் டன் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்ல வேண்டும் என்று விரும்புகி றேன்" என்றார்.

# உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியாவும் பங்காளதேஷும்பங்கேற்கும்

2011ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் இந்தியா-பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2011ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய ஆசிய நாடுகளில் நடைபெறவுள்ளது. பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக போட்டியை நடத்தும் வாய்ப்பிலிருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டது.இந்த உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் 14 அணிகள் பங்கேற்கின்றன. அவை 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து, இலங்கை, சிம்பாவே, கனடா, கென்யா ஆகிய அணிகளும், 'பி' பிரிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், அயர்லாந்து, போலண்ட் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன. ஒவ் வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். 'லீக்' சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும்.2010ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிக்கான அட்டவணை நேற்றுமுன்தினம் மும்பையில் வெளியிடப்பட்டது. இதன்படி தொடக்க ஆட்டத்தில் இந்தியாவும், பங்களாதேஷ் அணியும் அடுத்தவருடம் பெப்ரவரி 19ஆம் திகதி டாக்காவில் உள்ள மிர்புரில் மோதுகின்றன.

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் வாலென்சியா ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ரஷ்ய வீரரான மைக்கல் யூஸ்னியை வீழ்த்தி இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே சம்பியன் பட்டம் வென்றார். யூஸ்னியை 6- 3, 6- 2 என்ற நேர் செற்களில் சுலபமாக வீழ்த்தி சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார் அன்டி முர்ரே.

வெற்றிக்களிப்பில் அன்ரிமுர்ரே...



# மொகிந்தர் அமர்நாத்துக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது!

புதுடில்லி, நவ.11

இந்திய கிரிக்கெட் அணியின் முன் னாள் சகலதுறை வீரரான மொகிந்தர் அமர் நாத்துக்கு 2008-09ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதான சி.கே. நாயுடு விருது வழங்கப்படும் என்று இந்தி யக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவர் இந்த விருதுடன் சுமார் 38 லட் சம் ரூபாவையும் பெறுவார். 59 வயதான அமர்நாத் 69 டெஸ்ட் போட்டிகளில் விளை யாடி 4,378 ஓட்டங்களையும், 85 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 1,924 ஓட்டங் களையும் எடுத்துள்ளார்.

1983ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றபோது அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி இரண்டிலும் இவரே ஆட்டநாயகன் விரு தையும் பெற்றிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. இவரது தந்தையான லாலா அமர்நாத் முதலாவது வாழ்நாள் சாதனை யாளர் விருதை 1994ஆம் ஆண்டு பெற் றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் - முஸ்லிம் - மலையகக்கட்சிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இரவு ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட செயற் குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி முக்கி யஸ்தர்கள் கலந்துகொண்ட விசேட கூட் டம், கட்சியின் தலைமையகமான தாருஸ் ஸலாமில் நடைபெற்றது. அங்கு தற் போதைய அரசியல் சூழ்நிலை குறித்து விளக்கம் அளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் ரவூக் ஹக்கீம் நீண்ட உரையின் ஒரு பகுதி வரு மாறு:-

தமிழ், முஸ்லிம் அரசியல் சக்திகள் எல் லாவற்றையும் ஒன்று திரட்டிப் பலமான ஒரு சக்தியாக மாற்றவேண்டிய ஒரு சூழ்நிலை எம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஒன்றிணைந்த கட்சிகளின் எதிர் கால செயற்பாடுகள் பற்றிய ஓர் ஆவணத்தை நாம் தயாரித்திருக்கிறோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஐந்து கட்சிகளின் தலைவர்களும் அதற்கு வெளியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் சித்தார்த்தன், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணே சன் போன்றவர்களுடன் ஒன்றிணைந்து நாம் எடுத்துள்ள நிலைப்பாடுகளைப் பற்றி யும், அதுபற்றிய விளக்கங்கள் குறித்தும் விரைவில் வெளிப்படுத்தவுள்ளோம். ஒன்றிணைந்த செயற்பாடு குறித்து நம் மத் தியில் இன்று உணரப்பட்டுள்ளது. இவர்க ளுடனான பேச்சுகளின் நோக்கம் இவர் களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்து விடுவதல்ல என்பதை சகலரும் புரிந்து கொள்ளவேண்டும்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் - ஏன், கடந்த மூன்று கிழமைகளுக்கு முன்பு கூட - இப்போது இருக்கும் சூழ்நிலை காணப் படவில்லை. அரசியல் மாற்றம் வருமா? வராதா?- என்ற பதற்றமே நிலவி யது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகக் கவனமாகவும், தூர நோக்குடனும் அரசி யல் ரீதியிலான ஒரு முடிவை எடுப்பதற் காக அதன் உச்ச பீடத்தையும், அரசியற் பீடத்தையும் கூட்டி ஆராய்ந்தது. அந்த வேளையில், தற்போது இருக்கின்ற எதிர்க் கட்சிக் கூட்டமைப்பில் இணைவதா, இல் லையா என்று ஆராயப்பட்டபோது, முடி வெடுப்பதைத் தாமதப்படுத்துவதே நல்ல தெனவும் தெரிவிக்கப்பட்டது. இந்த எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் இணை வதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாம தப்படுத்தவேண்டும் என்ற எண்ணமே அரச தரப்பிலும் நாம் காண முடிந்தது. எனி னும், நாம் தன்னிச்சையாகவே எமது முடி வுகளை எடுத்தோம்.

### சிறுபான்மைக் கட்சிகளின் அரசியல் தடுமாற்றத்தில்!

யுத்த முடிவுக்குப் பின்பு இந்த நாட்டு அரசியலில் சிறுபான்மைக் கட்சிகளின் அர சியல் ஒரு தடுமாற்றத்துக்கு உட்பட்டது. எனினும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த முடிவு, இந்தத் தடுமாற்றங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கிறது. இன்று பரவலாகப் பேசப்படுகின்ற பொது வேட்பாளர் பற்றிய விடயம் அதன் அடிப் படையிலேயே எழுந்திருக்கிறது. அந்தப் பொது வேட்பாளர் பற்றிய பிரச்சினை தனி நபர் பற்றிய ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது.

அரசு தன்னுடைய முடி[illegible] 15 ஆம் திகதி அறிவிக்கும் [illegible] அறிவிக்காமல் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம். அரசு தனது முடிவை வெளிப் படுத்துவதற்கு முன்பே நாட்டு நலனைக் காரணம் காட்டித் திடீரென விலைவாசி களைக் குறைக்கின்றது. முப்படைகளுக் கும் சம்பளங்களை அதிகரிக்கிறது. இன் னும் பல வேலைகளையும் அது செய்ய வுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க் கட்சிக் கூட்டமைப்புத் தொடர்பில் உத்தி யோகபூர்வமாகவும், தெளிவாகவும் ஒரு முடிவை எடுத்திருப்பது நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்கே தவிர, ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்காக அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதா ஸாவை 1988 ஆம் ஆண்டில் ஜனாதிபதி வேட்பாளராகக் கொண்டுவரும் விடயத் தில், ஒரு குழப்பமான சூழ்நிலை அன்று நிலவியது. பிரேமதாஸாவை வேட்பாளர் ஆக்குவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் பெரிய பங்களிப்பைச் செய்தது. நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு முன்பே ஜனாதிபதி ஒருவரைத் தீர்மானிக்கின்ற கட்சியாக இருந்ததே நமது கட்சியாகும்.

### அரசுக்குள் உட்பூசல்

சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்த அரசு நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைக்கவும் கூடிய சூழ்நிலை உருவாகக் கூடும். ஏனெனில், அரச தரப்புக்குள் இன்று உட் பூசல்கள் ஆரம்பித்து விட்டன. ஆனால், எவ்விதமான சதியிலும் நாம் அங் கமாக இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் ஜனாதிபதி வேட்பாளர் குறித்த ஒரு முடிவை எடுக்கத் தவறிப்பட்டிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க இதுபற்றிக் கூறிய விடயங் களைத் தீவிரமாக நாம் ஆராய்ந்தோம்; தெளிவாகவும் இருக்கிறோம். ஆனால் அரசோ ஜனாதிபதித் தேர்தலை நடத்து வதா இல்லையா என்று இப்போது தடுமா றுகின்றது. மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதிக்குச் சவால் விடுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற முறையில் நாம் எடுக்கும் முடிவு, ஐக்கிய தேசியக் கட்சி சார்பானதாகவே இருக்கி றது என்று விமர்சிக்கும் சிலரும் இருக் கிறார்கள். அது எவ்வாறாக இருந்தாலும், ஜனாதிபதி வேட்பாளர் ஆகுபவரை வெல்ல வைப்பதே எமது நோக்கமாக இருக்கவேண்டும். ஆனால், அதற்கு முன்பு நாம் செய்ய வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. அந்த வேட்பாளருடன் நாம் பேச்சு நடத்தவேண்டியிருக்கிறது. அவரு டைய கொள்கைகளில் இன்னும் விளக்கம் காணவேண்டியிருக்கிறது. சிறுபான்மை மக்கள் பற்றிய அவரது கொள்கைகள், நிலைப்பாடுகள் குறித்த நிலைகளை நேர டியாகவே விளங்கிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் இராணுவ சீருடையுடன் இருப்பவருடன் பேச முடி யாது. அவர் அச்சீருடைகளைக் களைய வேண்டும்.

இந்தப் பரபரப்பான சூழ்நிலை ஏற்படு வதற்கு முன்பு, எமது அரசியலில் [illegible] சீரற்ற ஒரு போட்டித்தன்மையே காணப் பட்டது. ஆனால், எதிர்க்கட்சிக் கூட்ட மைப்பு உருவான பின்பு இந்த சமச்சீரற்ற போட்டித் தன்மை மாறி சமமான போட்டித் தன்மை ஏற்பட்டுள்ளது. இது ஜனாதிபதி வேட்பாளர் குறித்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் எடுத்து, இணை வதற்கு முன் உள்ள நிலையாகும். நாம் தீர் மானம் எடுத்துச் சோர்ந்துவிட்டால் நிலைமை என்னவா[illegible]ம்? அதனால்தான் அரச தரப்புக்குள் [illegible]மாற்றமும், பரபரப் பும் ஏற்பட்டு இருக்கின்றன.

(மிகுதி நா[illegible])

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் முகாம் பற்றிய அறிக்கை மீது நாளை ஆய்வு

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை, நவ. 11

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதி முகாம்கள் பற்றிய ஆய்வறிக்கையை நேற்று தமிழக முதல்வர் கருணாநிதியிடம் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கையளித்தார். இதுகுறித்து நாளை (12 ஆம் திகதி) நடக்கவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும் - என்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.


கடந்த 2ஆம் திகதி தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக ரூபா 12 கோடி ஒதுக்கீடு செய்ய முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேலும், அகதிகள் முகாமை அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு செய்து, நவம்பர் 10ஆம் திகதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டார்.

அதன்படி அந்தந்த மாவட்டங்களில் உள்ள இலங்கை அதிகள் முகாமை அமைச்சர்கள், அரச அதிகாரிகள் பார்வையிட்டு, அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தனர். இதையடுத்து முதல்வரின் உத்தரவுப் படி நேற்று அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் இலங்கை அகதிகள் முகாம் பற்றிய ஆய்வறிக்கையைத் தாக்கல் செய்தனர்.

முதல்வரின் உத்தரவுப்படி நேற்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் உட்பட அனைத்து அமைச்சர்களும் இலங்கை அகதிகள் முகாம் பற்றிய ஆய்வறிக்கையைத் தாக்கல் செய்தனர்.

அறிக்கையை பெற்றுக்கொண்ட பின்னர், தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம் பற்றிய அமைச்சர்களின் ஆய்வறிக்கை மீது நாளை 12ஆம் திகதி நடக்கவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.



தமிழகத்தில் உள்ள இலங்கை அகதி முகாம்கள் பற்றிய ஆய்வறிக்கையை நேற்று தமிழக முதல்வர் கருணாநிதியிடம் துணைமுதல்வர் ஸ்டாலின் தாக்கல் செய்தபோது...

# கோவையில் உலகத் தமிழ் மாநாடு நடத்த கொடிசியா அரங்கு தெரிவு

சென்னை, நவ. 11

கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்த, சிறுதொழில் முனைவோர் சங்கத்துக்குச் சொந்தமான கொடிசியா அரங்கைத் தேர்வு செய்து முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு, அடுத்த ஆண்டு ஜூன் 23 முதல் 27 ஆம் திகதி வரை நடக்கிறது. அதற்கு தகுதியான இடம் தேர்வு செய்வது தொடர்பாக, முதல்வர் கருணாநிதி கடந்த 6 ஆம் திகதி கோவைக்குச் சென்றார். அப்போது அங்குள்ள கொடிசியா எனப்படும் சிறு தொழில் முனைவோர் சங்கத்துக்குச் சொந்தமான அரங்குகளைப் பார்வையிட்டார்.

இதையடுத்து, கோவை மாவட்ட அமைச்சர்கள் மற்றும் தலைமை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்தார். அதனடிப்படையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடத்த கோவையில் உள்ள கொடிசியா அரங்கு தகுதியான இடம் என்று தேர்வு செய்து அறிவித்துள்ளார்.

இந்த அரங்குகள் ஏ, பி, சி, டி, இ என 5 பிரிவுகளை உள்ளடக்கியது. ஏ, பி, சி அரங்குகள் மொத்தம் ஒரு லட்சத்து 10 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்டவை. டி அரங்கு 55 ஆயிரம் சதுர அடியும் ஐந்தாயிரம் பேர் அமரக் கூடிய வசதியும், ஏசி வசதியுடன் கூடிய இ அரங்கு 40 ஆயிரம் சதுர அடியில் 3500 பேர் அமரக் கூடிய வசதியும் கொண்டுள்ளன. இதனுடன் 100 ஏக்கர் திறந்தவெளி மைதானம் அமைந்துள்ளது.

# ஈழப்பெண்ணை மணக்கிறார் பட இயக்குநர் தருண்கோபி!

சென்னை, நவ. 11

திரைப்பட இயக்குநர் தருண்கோபி, ஈழப் பெண்ணை திருமணம் செய்கின்றார்.

விஷால் நடித்த 'திமிரு', சிம்பு நடித்த 'காளை' படங்களை இயக்கிய தருண் கோபி, 'மாயாண்டி குடும்பத்தார்' படம் மூலம் தானே கதாநாயகனுமானார்.

தற்போது ஜீவா 'பூங்கா', 'என்னை ஏதோ செய்துவிட்டாய்', 'காட்டுப்பய' ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

இந்நிலையில் தருண்கோபிக்கும், இலங்கைத் தமிழ் பெண் ஜானு லிங்கேஸ்வரிக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

மணமகள் ஜானு இலங்கையைச் சேர்ந்தவராக இருந்தாலும் தற்போது மதுரையில் வசித்து வருகிறார். இவர்களது திருமணம் வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நடைபெறுகிறது.



# கடும் மழை – வெள்ள அனர்த்தத்துக்கு இதுவரை தமிழகத்தில் 41 பேர் மரணம்!

சென்னை, நவ. 11

தமிழகத்தில் மழை, வெள்ளப் பாதிப்பில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்துள்ளது. மேலும், 5 பேரின் இறப்புக்கான காரணம் தெரியவில்லை - என்று வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால், மழையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. கடலோர மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக பெய்து வந்த கனமழை இப்போது சற்றுத் தணிந்துள்ளது.

இதுகுறித்து அந்தத் துறையின் உயர் அதிகாரி கூறுகையில், 'வடகிழக்குப் பருவமழை கடந்த முதலாம் திகதி தீவிரமடையத் தொடங்கியது. திங்கட்கிழமை நிலைவரப்படி, மழை வெள்ளத்துக்கு பலியானோரின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 5 பேர் இறந்துள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது.

ஆனால், அவர்களது இறப்புக்கான காரணம் பிரேதப் பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே தெரியவரும் - என்றார்.

கன மழைக்கு திங்கட்கிழமை மட்டும் 15 பேர் உயிரிழந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் 10 பேரும், விழுப்புரம், வேலூர், சென்னை மாவட்டங்களில் தலா ஒருவரும், திருவாரூர் மாவட்டத்தில் 2 பேரும் மழை, வெள்ளத்துக்கு திங்கட்கிழமை பலியாகி உள்ளனர்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால் இதுவரை பயிர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் அரசுக்குத் தகவல் அளித்துள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 13 ஆயிரம் ஹெக்டெயர் பயிர்கள் தண்ணீர் மூழ்கியுள்ளன. மேலும், தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன என மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியச் செய்திகள்

# சீனாவுடனான பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு

## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

லண்டன், நவ. 11

சீனாவுடனான பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காணப்படும் - என்று நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் போது செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஒக்ரோபர் 24 இல் தாய்லாந்தில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டின் இடையே பிரதமர் மன்மோகன் சிங், சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

எல்லைப் பகுதியில் அமைதியை நிலை நாட்டுவதுடன் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என இருவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இரு நாடுகளுக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்காக இந்திய- சீன கூட்டுக் குழு உள்ளது. இக்குழு குறிப்பிட்ட இடைவெளியில் சந்தித்து வருகிறது. எந்தப் பிரச்சினையானாலும் இக்குழு பேசித் தீர்க்கும் - என்றார்.

அருணாசலப் பிரதேசத்துக்கு தலாய் லாமா சென்றுள்ளமை அவரது சொந்த முடிவாகும் என மத்திய வெளிவிவகார இணை அமைச்சர் சசி தரூர் கூறினார்.

இந்தியாவின் ஆலோசனையின்பேரில் தான் தலாய் லாமா சென்றுள்ளாரா என செய்தியாளர்கள் கேட்டதற்கு, இல்லை. தலாய் லாமா இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகச் செல்லலாம். அப்படிச் செல்வதற்கு முன்னால் அரசுக்குத் தெரிவிப்பது நல்லது - என்றார்.

மாவோயிஸ்டுகளுக்கு சீனா ஆயுதம் வழங்குகிறதா என்பது குறித்து உள்துறை அமைச்சகம் விசாரித்து வருகிறது - என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, அருணாசலப் பிரதேசம் தொடர்பான சர்ச்சையை தனக்குச் சாதகமாகத் தீர்ப்பதற்கு புத்த மதத் தலைவர் தலாய் லாமாவை இந்தியா பயன்படுத்துகிறது என சீன நிபுணர் ஹு ஷிஷெங் குறிப்பிட்டுள்ளார்.

அருணாசலப் பிரதேசத்துக்கு சென்றுள்ள தலாய் லாமா சீன எதிர்ப்பு மனநிலையை அங்கு உருவாக்கியுள்ளார். பிரச்சினை பெரிதாகும்போது, இந்தியா எதிர்பார்த்ததுபோல அருணாசலப் பிரதேச பிரச்சினையை சீனா கையாள நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# புதுக்கோட்டை மீனவர் மீது இலங்கைக் கடற்படை சூடு!



அறந்தாங்கி, நவ. 11

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த புதுகை மாவட்ட மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் மீனவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினம், ஜெகதாப்பட்டினம், மீமிசல், கட்டுமாவடி உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் நாகை, காரைக்கால் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து ஏராளமான மீனவர்கள் வந்து தங்கியிருந்து கடலுக்குச் சென்று வருகின்றனர். கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடற்படையினரால் தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றனர். சில நாள்களுக்கு முன்பு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த கோட்டைப்பட்டினம் பகுதி மீனவர்கள் 18 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து அழைத்துச் சென்றனர். அவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை.

அவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர். இதைத் தொடர்ந்து கோட்டைப்பட்டினம் பகுதியில் இருந்து 239 விசைப் படகுகளில் மீனவர்கள் நேற்று முன்தினம் கடலுக்குச் சென்றனர். நடுக்கடலில் அவர்கள் வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர், ராஜா முகமது, ஜகுபர், ரமேஷ் ஆகியோருக்குச் சொந்தமான படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதிர்ச்சியடைந்த மீனவர்கள் படகுகளில் படுத்து உயிர் தப்பினர். மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களைப் பறித்து கடலில் கொட்டிய இலங்கைக் கடற்படையினர், அவர்களது வலைகளையும் அறுத்தனர்.

துப்பாக்கியை காட்டி மிரட்டி, அவர்களை விரட்டினர். இதையடுத்து மீனவர்கள் பீதியுடன் கரைக்குத் திரும்பினர்.

# தாய், தந்தையை விட்டுப் பிரிந்து நடிகை அசின் தனிக்குடித்தனம்!



மும்பை, நவ. 11

நடிகை அசின் தமது தாய் - தந்தையை விட்டுப் பிரிந்து தனிக்குடித்தனத்தில் களமிறங்கியுள்ளார். மும்பையில் தனி வீடு எடுத்து அவர் தனிமையில் வசிக்கிறார்.

இந்தப் பிரிவிற்குக் காரணம் என்ன என்பது மர்மமாக இருக்கிறது.

மலையாள நடிகையான அசின், 'உள்ளம் கேட்குமே' என்ற படத்தின் மூலம் தமிழ் பட உலகுக்கு அறி[illegible] எதிர்பார்த்த [illegible] வில்லை. என்றாலும் அசின் நடித்த இரண்டாவது படமான 'எம்.குமரன் சன் ஒப் மகாலட்சுமி,' மிகப்பெரிய வெற்றி பெற்றது. அந்தப் படம் அசினுக்கு நல்ல பெயரையும், புகழையும் சம்பாதித்துக் கொடுத்தது.

அவர் இதுவரை மும்பையில், தன் தாய் - தந்தையுடன் ஒரே வீட்டில் வசித்து வந்தார். திடீர் என்று அவர் தாய் - தந்தையை விட்டு பிரிந்து, வேறு ஒரு வீட்டுக்கு குடிபோய்விட்டார். அங்கு அவர் தனிமையில் வசிக்கிறார்.

இதுபற்றி அவருடைய தந்தை ஜோசப் [illegible] கூறும்போது, 'கிளிக்கு இறக்கை முளைத்து விட்டதால், பறந்து போய் விட்டது' என்று மட்டும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


































GATEWAY LANGUAGE CENTRE நிலையம் நேற்று யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உதயன் கேட்போர் கூடத்தில் திறப்பு விழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

மேல் வரிசையில் உள்ள படங்களில் திறப்பு விழாவில் ஜோன் கீல்ஸ் பிரதிநிதி அனுஷா வீரதுங்க குத்துவிளக்கேற்றுவதையும், ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் உப தலைவர் லலித் ராமநாயக்கா, யாழ்.பல்கலைக்கழக ஆங்கில கற்கை நிலையத்தின் தலைவர் எஸ்.சுந்தரேஸ்வரன், கேற்வே குழுமத்தின் இயக்குநர் கலாநிதி எச்.அலஸ், அதன் நிர்வாகப் பங்காளர் ஈ.சரவணபவன் ஆகியோர் சேர்ந்து நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும், கேற்வே நிலையத்தின் பெயர்ப் பலகையை கலாநிதி எச்.அலஸ் திரைநீக்கம் செய்வதையும் காணலாம்.

இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வரிசைகளில் உள்ள படங்கள் உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் எடுக்கப்பட்டவையாகும்.

இரண்டாவது வரிசையில் விருந்தினர்கள் பிரதான மேசையடியில் அமர்ந்திருக் கிறார்கள். அடுத்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா ஜெறோ செல்வநாயகம் ஆகியோர் ஆசியுரை வழங்குவதையும் 'ஐ.ரி.ஐலண்ட்' நிறுவன நிர்வாக அதிகாரி எஸ்.விக்கிரம நாயகம் வரவேற்புரை வழங்குவதையும் காணலாம்.

மூன்றாவது வரிசையில் திருவாளர்கள் ஈ.சரவணபவன்,எஸ்.சுந்தரேஸ்வரன், கலாநிதி எச்.அலஸ், லலித் ராமநாயக்கா, ஜோன்.கீல்ஸ் பிரதிநிதி திருமதி ஹமலின் ஜெயசூரிய, முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை படங்களில் காணலாம்.நான்காவது வரிசையில், புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களில் ஒருவரான செல்வி துல்ஷாரா ராமச்சந்திரா நன்றி தெரிவித்து பேசுகிறாள். அடுத்து விழாவுக்கு வருகை தந்திருந்தோரில் ஒரு பகுதியினரைக் காணலாம். *(படங்கள்: உமா)*

# தமிழ்க் கூட்டமைப்பின் வயது முதிர்ந்த தலைகள் நாடாளுமன்ற அரசியலை விட்டு ஒதுங்க வேண்டும்

## ஸ்ரீகாந்தா கூறுகிறார்; பொன்சேகாவை ஆதரிப்பது குறித்து இன்னமும் முடிவில்லையாம்



கொழும்பு, நவ.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுபவமிக்க - வயது முதிர்ந்த அரசியல்வாதிகள் நாடாளுமன்ற அரசியலிலிருந்து ஓய்வுபெற வேண்டும் என்று கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது கட்சிக்கு அனுபவமும் புதிய உத்வேகமும் தேவைப்படுகின்றன என்று தெரிவித்துள்ள அவர், ''கடந்த காலங்களில் தந்தை செல்வா இளைய வேட்பாளர்களையும் நிறுத்தியுள்ளார்.'' - என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

'ஏசியன் ரிபியூன்' இணையத்தளத்துக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு திரும்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் எதிர்காலங்களில் கருத்துக் கூறும் போது அவதானமாக இருக்கவேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரும் இதனைப் பின்பற்ற வேண்டும் - என்றும் அவர் கோரியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கேள்வி: ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? குறிப்பிட்ட வேட்பாளர் எவரையாவது விரும்புகிறீர்களா? தேர்தல் கூட்டணிகளில் நீங்களும் இணைந்து கொள்வீர்களா?

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தெரிவு யார் என்பது குறித்துத் தெரிவிப்பதற்கு இன்னமும் காலமுள்ளது.

### நாங்கள் திறந்த மனத்துடன் இருக்கிறோம்

ஆனால் தேர்தல் அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ள நிலையில், நீங்கள் சொன்னது போன்று ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகவுள்ள சூழலில் நாங்கள் திறந்த மனதுடன் இருக்கிறோம் என்பதை மாத்திரம் தான் சொல்லலாம்.

எங்கள் முன்னால் பல தெரிவுகள் உள்ளன.முக்கிய வேட்பாளர்கள் யார் என்பதை நாங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் போட்டியிடுவார் எனக் கருதுகிறேன். இது குறித்து சந்தேகம் எதுவுமில்லை. இல்லாவிடில் உரிய திகதிக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னதாக அவர் தேர்தலை நடத்தமாட்டார்.

அதேவேளை, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணி பொது வேட்பாளர் [illegible] நிறுத்துவதற்கான அதிகளவான [illegible] உள்ளன.

ஜே.வி.பியை இந்தக் கூட்டணியில் இணைப்பது தொடர்பான முயற்சிகள் கடந்த பல நாள்களாக இடம்பெறுகின்றன. ஜே.வி.பி. பொது வேட்பாளரை ஆதரிக்கின்றதோ இல்லையோ ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளரே ஜனாதிபதிக்கு முக்கிய சவாலாக விளங்குவார்.

### உறுதியாதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்

இந்த வேட்பாளர் யார் எனப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இரண்டாவது இந்தத் தேர்தலில் எமது நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்வது பற்றி நாங்கள் தீவிரமாக ஆராயவேண்டும். இதிலிருந்து தப்ப முடியாது. நாங்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

எமது நிலைப்பாடு தொடர்பாக எம் முன்னால் சில தெரிவுகள் உள்ளன. நாங்கள் முக்கிய கட்சியின் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு அளிக்கலாம். அல்லது ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கலாம்.

ஜே.வி.பி. எவ்வாறு செயற்படப் போகின்றது என்பது எமக்குத் தெரியாது.

தமது சொந்த வேட்பாளரையும் நிறுத்தலாம். அவர் முக்கிய வேட்பாளரா கத் திகழமாட்டார். நாங்கள் இரு முக்கிய வேட்பாளர்களில் ஒருவரையே தெரிவுசெய்ய வேண்டும். அதாவது ஜனாதிபதியை அல்லது முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளரை.

இரண்டாவது கேள்வி எமது சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியுமா, அல்லது இந்த முடிவை மக்களிடமே விட்டு விடுவதா என்பது.

# ஜி.சீ.ஈ. (சா/த) மாணவர்களுக்கு வடமராட்சியில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.11

தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. (சா/த) தர பரீட்சார்த்திகளுக்கான இலவசக்கருத்தரங்குகள் எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை இந்த கருத்தரங்குகள் இரு தினங்களிலும் நடைபெறவுள்ளன.

கருத்தரங்குகள் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 11.30 வரை கணித பாடம் யாழ்.இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.கிருஷ்ணதாஸாலும், 1.30 தொடக்கம் 3.30 வரை விஞ்ஞான பாடம் எம். பிரியந்தனாலும்- பி.பகல் 3.30 தொடக்கம் 5.30 மணி வரை தமிழ்- மன்னார் மகாவித்தியாலய ஆசிரியர் ரி.குருபரன் தலைமையிலும் நடைபெறவுள்ளன.

இரண்டாவது நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 தொடக்கம் 10.30 வரை தமிழ்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியராலும், 10.30 தொடக்கம் 12.30 வரை ஆங்கிலம்- வடமராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். சுந்தரமூர்த்தியாலும், 2.30 - 5.00 மணி வரை விஞ்ஞானம்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் எஸ். கிருஷ்ண குமாராலும் நடத்தப்படவுள்ளன.

மேற்படி இலவசக்கருத்தரங்கில் பயன்பெற விரும்பும் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு தும்பளை நாவலர் விளை யாட்டுக் கழகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை, கிளிநொச்சி பிரதேச மக்கள் மீளக்குடியேற பல மாதங்கள் செல்லும்

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 11

வன்னியில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் பூர்த்தியாவதற்குப் பலகாலம் எடுக்கும். இதன் காரணமாக கிளநொச்சி, முல்லைத் தீவு மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்புவதற்குப் பல மாதங்கள் எடுக்கலாம் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஐ.ஆர்.ஐ.என். செய்திச்சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

மோதலால் சேதமடைந்த அடிப்படை உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவது மற்றும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதன் அவசியத்தைக் கருத்தில் கொள்ளும் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதற்குப் பல மாதங்கள் எடுக்கலாம் என்றே தோன்றுகின்றது.

இது மிகப் பெரும் சவால் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே, சில பகுதிகளில் எவ்வளவு நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்யமுடியாதுள்ளது என்றும் சில பகுதிகளில் முற்றாகக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன என உறுதியாகத் தெரிவிக்க முடியாத நிலை காணப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

முகாமில் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவுவதை விடத் தமது கிராமங்களுக்குத் திரும்பும் மக்களுக்கு உதவுவது குறித்தே உதவி வழங்கும் நாடுகள் மகிழ்ச்சியடைகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது கிராமங்களுக்குத் திரும்பும் மக்களுக்குத் தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்படுகின்றமை அவசியம் என்றும் சுட்டிக்காட்டியுள்ள நீல் புஹ்னே, இந்த மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மக்கள் கடந்த ஒரு வருட காலமாக ஓடிக்கொண்டிருக்கின்றனர். பல தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் இயல்பு நிலையையும் இழந்த வாழ்வாதாரத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர்

# 'வணங்கா மண்' எடுத்துவந்த பொருள்கள் வவுனியாவில் 200 குடும்பங்களுக்கு விநியோகம்

வவுனியா.நவ.11

மேற்குல நாடுகளில் வதியும் புலம் பெயர்ந்த மக்கள் 'வணங்கா மண்' கப்பலில் அனுப்பிய உதவிப் பொருள்களில் ஒரு தொகுதி நீண்டகால இழுபறியின் பின்னர் முகாமில் உள்ள 200 குடும்பங்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.

வன்னியில் போர் உச்சக்கட்ட நிலையில் இருந்தபோது, புலம் பெயர்ந்த மக்கள் சேகரித்த பொருள்கள் 'வணங்காமண்' என்ற கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

இந்தக்கப்பலை இலங்கைக்கடற்படையினர் துறைமுகத்துக்குள் அனுமதிக்காததையடுத்து, கப்பல் இந்தியாவுக்குச் சென்றது. இந்தக்கப்பலில் இருந்த பொருள்கள் சென்னையில் வைத்து வேறொரு கப்பலில் ஏற்றப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டன. கொழும்புத் துறைமுகத்தில் கப்பல் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்ட இழுபறி நிலையால் நீண்ட நாள்களாக அக்கப்பல் தரித்துநின்றது.

இறுதியில் செஞ்சிலுவைச் சங்கம் எடுத்த நடவடிக்கையின் பயனாக கப்பலில் இருந்த பொருள்கள் இறக்கப்பட்டு 27 கொன்ரயினர்களில் வவுனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. (1)

# 13ஆம் திருத்தச்சட்டத்தின் கீழ் தமிழும் அரச கரும மொழியாக மாற்றப்படும்

## அமைச்சர் சரத் அமுனுகம சொல்கிறார்

கொழும்பு,நவ. 11

13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தின் கீழ் தமிழ் மொழியும் அரச கரும மொழியாக மாற்றப்படும். ஆங்கிலம் ஒரு இணைப்பு மொழியாக மாற்றப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

இந்தியாவில் நடைபெற்ற உலகப் பொருளாதார சபை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவி ருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் விசேட கொள்கைத் தீர்மானம் ஒன்றை அரசு கொண்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கடந்த 3 தசாப்தங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடின் கீழ் இருந்தன. இந்தக் காலங்களில் எவ்விதமான அபிவிருத்தித் திட்டங்களும் அங்கு முன்னெடுக்க முடியவில்லை. இதனை கருத்தில் கொண்டு இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் இந்த மாகாணங்களின் அபிவிருத்திக்காக பாரிய நிதியை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

நடைபெற்று முடிந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. தமிழ் மக்களின் மீள் வாழ்விற்கு அர்ப்பணிப்புடன் நாம் செயற்படுகின்றோம்.

இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட இலங்கை தயாராக இருக்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்திகள் தொடர்பாக இந்நாடுகளின் ஒத்துழைப்பை இவ்வேளையில் கோருகின்றோம் - என்றார்.

# வன்னி வைத்தியர்களுக்கு பிணை நிபந்தனை நீக்கம்

கொழும்பு, நவ. 11

இறுதிக் கட்ட யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சேவையாற்றிய வன்னி வைத்தியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பிணை நிபுந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

ரீ.சத்தியமூர்த்தி, எஸ்.வரதராஜா, வீ.சண்முகராஜா, இளங்கோவன் வள்ளவன், சிவபாலன் ஆகிய வைத்தியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பிணை நிபந்தனையே இவ்வாறு தளர்த்தப்பட்டுள்ளது.

மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸார் முன்னிலையில் ஆஜராகுமாறு முன்னர் பிணை நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும், ஒவ்வொரு மாதமும் ஆஜராகத் தேவையில்லை என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

---

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் வெளிவிவகார சேவையில் 32 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இவர் இந்தியாவின் மலேஷியாவுக்கான தூதுவராக இதற்கு முன்னர் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## இந்தோனேஷியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபையின் நியூஸிலாந்துக்கான நிறைவேற்று அதிகாரி பற்றிக் வேறாம்ஸ் நியூஸிலாந்தின் இந்நிலைப்பாடு குறித்துக் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த அகதிகள் அரசியற் தஞ்சம் பெறுவதற்கு உண்மையிலேயே உரித்தானவர்கள். எனவே இவர்களுக்கு அரசியற் தஞ்சம் வழங்குகின்ற பொறுப்பை நியூஸிலாந்து தட்டிக்கழிக்க முடியாது என்று அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

---

## யாழ்ப்பாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 8.30 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்தில் இருந்து புறப்படும் இந்த பஸ்கள் கொழும்பில் மூன்று இடங்களைச் சென்றடையும். வெள்ளவத்தை ரயில் நிலையம், புறக்கோட்டை பஸ் நிலையம், கொட்டாஞ்சேனை சென்.லூயியஸ் தேவாலயம் ஆகியனவே அவையாகும்.

அங்கிருந்து நாளை வியாழக்கிழமை இரவு இந்த பஸ்கள் குறிப்பிட்ட மூன்று இடங்களில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்படும்.

இந்த பஸ்களில் பயணிப்பதற்கான பதிவுகளை, பயணிகள் தம்மிடம் உள்ள பாதுகாப்பு அனுமதியைச் சமர்ப்பித்து கொழும்பு பிரதான பஸ் நிலையத்தில் உள்ள விசேட கருமபீடத்தில் மேற் கொள்ளமுடியும்.

பயண அனுமதி இல்லாதவர்கள் இந்த பஸ்களில் பயணித்தால், வவுனியாவுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

பயணிகளின் எண்ணிக்கையை பொறுத்து சேவையில் மேலும் பஸ்கள் இணைக்கப்படும். இன்று ஆரம்பிக்கும் சேவையில் பத்து பஸ்கள் இணைக் கப்பட்டுள்ளன - என்றும் பிரதான முகாமையாளர் க.கணேபிள்ளை கூறினார். (அ-1)

# அரசிற்கு ஆதரவாக நேற்று கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 11

இலங்கை அரசிற்கு எதிராக பல்வேறு தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களையும் வேலைநிறுத்தப் போராட்டங்களையும் மேற்கொண்டு வரும் வேளையில் அரசிற்கு ஆதரவாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கம் தலைமையிலான தொழிற்சங்கங்கள் ஏற்பாடு செய்திருந்தன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அரசிற்கு எதிராக தொழிற்சங்கங்களுடன் இணைந்து சில சக்திகள் முன்னெடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், எதிர்க்கட்சிகளின் கூட்டணியைத் தூற்றும் வகையிலும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பல்வேறு பகுதிகளில் இருந்து ஊர்வலமாக வந்த தொழிற்சங்க பிரதிநிதிகள் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டவர்கள் அரசை எதிர்த்து சில தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளும் வேலைநிறுத்த போராட்டங்களை வன்மையாகக் கண்டித்தனர்.

---

## ஜனநாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 4 மணி நேரம் இடம்பெற்ற இச் சந்திப்பில் குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனை, மீள்குடியேற்றம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்ற முயற்சிகள் உட்பட சில பொதுவான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு இவ்விடயங்களில் ஒருமித்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனை திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் அமைய வேண்டியதன் அவசியத்தையும் இரு தரப்பும் ஒருமித்த கருத்ததாக கொண்டிருந்தன.

இச் சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவோ, நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகவோ எதுவும் பேசப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

மேலும் எதிர்காலத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருமித்துச் செயற்படுவது தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்ட போதிலும் எதிர்காலத்தில் இது தொடர்பாக தொடர்ந்து பேசுவது என்றும் இரு தரப்பினருக்குமிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அறியவந்தது. (அ-சி)

---

## 45 இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத்தில் ஆஜராக்கப்பட்டார்கள்.

இச் சந்தேக நபர்களை நாளை வியாழக்கிழமைவரை விளக்கமறியலில் வைக்க வேண்டுமென்று கொழும்பு பிரதான நீதிவான் நிசாந்த ஹப்பு ஆராய்ச்சி உத்தரவிட்டார். (அ-சி)

---

## சரத்பொன்சேகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதை ஐ.தே.கவின் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது ஜனநாயக மக்கள் முன்னணியின் மனோ கணேசனோ தனிப்பட்ட முறையில் தீர்மானி[illegible] அறிவிக்க முடியாது. அது அனைத்து எதிர்க்கட்சிகளும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு.

ஆனால் பொது வேட்பாளராக பொன்சேகாவை அறிவிப்பது பற்றிய பேச்சு இப்போது பரவலாக அடிபடுகின்றது.

கட்சி சாராத ஒருவரை அப்படி அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் பதிந்து வருகின்ற காரணத்தாலேயே அதனைப் பிரதிபலிக்க வேண் டிய கட்டாயம் கட்சிகளுக்கு எழுந்துள்ளது.

பொன்சேகாவுக்கு ஆதரவாக மக்களின் கருத்து வலுத்து வருவதால் கட்சிகள் அதனைக் கோடிகாட்டி வருகின்றன. - என்றார் லால்காந்த. (அ-சி)

---

## துணுக்காயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் என்பன இயங்க ஆரம்பித்துள்ளன என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

துணுக்காய் பிரதேசத்தில் யோகபுரம் மகாவித்தியாலயம் நேற்றுமுன்தினம் தொடக்கம் இயங்க ஆரம்பித்தது. நேற்று முன்தினம் 300 மாணவர்களும் 30 ஆசிரியர்களும் பாடசாலைக்குச் சமுகமளித்திருந்தனர். நேற்று மேலும் 150 மாணவர்கள் சமுகமளித்தனர். அங்குள்ள, இது வரை பாடசாலைக்குச் சமுகமளிக்காத சுமார் 3000 மாணவர்களுக்கு பாடசாலை செல்ல போக்குவரத்துப் பிரச்சினை உள்ளதனால் மேலும் பல பாடசாலைகள் ஆரம்பிக்க வேண்டிய தேவையுள்ளது

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஒரு பாடசாலையும் அடுத்த வாரமளவில் மேலும் இரண்டு பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மேகநாதன் தெரிவித்தார்.

இதேவேளை அங்கு நேற்றுமுன்தினம் அஞ்சல் சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. துணுக்காய், யோகபுரம் ஆகிய இரண்டு இடங்களிலும் தனியார் வீடுகளில் தினமும் முத்திரை விற்பது, அஞ்சல் விநியோக நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்று வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

மேலும் துணுக்காய் பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவும் நேற்றுமுன்தினம் தொடக்கம் அத்தியாவசிய பொருள்களை விநியோகித்து வருவதாக அந்தச் சங்கத்தின் தலைவர் த.பிரேமச்சந்திரன் தெரிவித்தார். தற்போது அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக பால்மா பைக்கற்றுக்கள் உள்ளிட்ட முக்கிய பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் வீடுகளைப் புனரமைத்துச் செய்யக்கூடியதாக சில பொருள்களும் விற்பனை செய்யப்படுகின்றன என்று சங்க தலைவர் மேலும் தெரிவித்தார். (1-7)

A/L இரசாயனவியல்
BY J.J கொலின்ஸ்
பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம்
தொடர்புகளுக்கு : பிறைற் ஒக்சன் சென்ரர்
இலக்கம் 275, பிரதானவீதி.
T.P - 0213735549

கற்சுமி வெளியீடு
தரம் 1,2,3,4,5 மாணவர்களுக்குரிய
நவம்பர் - டிசெம்பர் மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
வெளிவந்துவிட்டன
உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org